# மறை ஞானப்பேழை



சத்தியம் வந்துவிட்டது !

அசத்தியம் அழிந்து விட்டது !

நிச்சயமாக அசத்தியம்

அழிந்தே தீரும் !

July 2021 ஜூலை 2021



Retail Selling Price 20

Volume - 13, Issue - 5

# Be in all and get the power of God

## ஆன்மிக மாத இதழ்

**வெளியிடுவோர்**
**அவ்னிய்யா உலக அமைதி அறக்கட்டளை**
பாகிரா காம்ப்ளக்ஸ் 74, பழனிரோடு.
திண்டுக்கல் - 624 001.

**நிறுவனர்**
குத்புஸ்ஸமான், ஷம்ஸுல் வுஜூத், ஜமாலிய்யா
அஸ்ஸையித் கலீல் அவ்ன் மௌலானா
நாயகம் அவர்கள்

**ஆசிரியர்**
கலீஃபா. S. ஹுஸைன் முஹம்மது மன்பயீ

**சிறப்பாசிரியர்**
**கலீஃபா.** A.N.M. **லியாகத் அலி,** B.Sc., B.L.,

**வெளியீட்டாளர்**
J. முஹம்மது ரஹ்மத்துல்லாஹ், B.A.,B.Com.,

**அச்சிட்டோர்**
R. விஜயலட்சுமி
ஸ்ரீ அக்னி அம்மன் அச்சகம்,
52, பழனிரோடு, திண்டுக்கல்.

**கணினி அச்சுக் கோவை**
ரிப்தா கம்ப்யூட்டர்ஸ் செல்: 99445 76165



செய்திகள் அனுப்பவேண்டிய முகவரி
**S. ஹுஸைன் முஹம்மது மன்பயீ**
**கலீல் கம்ப்யூட்டர் கல்வி மையம்**
229/ 4, மீரா காம்ப்ளக்ஸ், மேற்கு ரத வீதி,
ஃபயர் சர்வீஸ் எதிரில், திண்டுக்கல் - 624 001.
**CELL : 99445 76165**
**Website:www.emsabai.org**
**email: aalimpulavar07 @ gmail.com**
**email: j.mdrahmathulla@yahoo.com**


# மறை ஞானப்பேழை


**ஷவ்வால் - துல்கஃதா**

**ஜுலை 2021**
**Volume - 13 Issue - 5**


## பேழைக்குள்......


*ஜமாலிய்யா தோட்டத்தில்.....*
*திருமறைப் பக்கம்.*
*ஹதீஸ் பக்கம்.*
*சபைச் செய்திகள்.*
*அமுத மொழிகள்.*
*இரண்டாம் பரிசு பெற்ற கட்டுரை.*
*மாப்பிள்ளை லெப்பை ஆலிம் (ரஹ்)*
*ஹள்ரத் நிஜாமுத்தீன் அவ்லியா.*
*85 ஆம் உதய நாள் உரைகள்.*
*கதையல்ல நிஜம்.*
*இனிக்கும் இறைமொழி!*
*வஹ்ஹாபிகள் எனும் .........*
*உன்னை அறிந்தால்!*
*வலிமார்களின் வார்த்தைகளில்....*
*பூரணத்தின் அகராதி.*
*மற்றும் பல் சுவை செய்திகள்.*

# பரக்கத்தை வாங்கிக் கொண்டு....

இரண்டாவது பொது முடக்கத்திலிருந்து தமிழகம் மெல்ல மெல்ல மீண்டு வருகிறது. அரசு, கால நேரத்திற்கேற்ப விதிகளை அறிவித்து வருகிறது.

வழிபாட்டுத்தலங்களைத் திறக்க அனுமதித்ததால் இனி பள்ளிவாசல்களில் ஜமாஅத்துடன் தொழலாம். அல்ஹம்து லில்லாஹ்!

அரசு, மக்கள் கூடுவதற்கு அனுமதித்திருந்தாலும் கொரோனா அபாயம் இன்னும் முழுமையாக நீங்கிவிட்டதாகச் சொல்ல முடியாது. எனவே, பள்ளிவாசல்களில் கூடும் நேரங்களில் முஸாஃபஹா செய்வது, முஆனகா செய்வது போன்ற விஷயங்களில் கவனமாக இருந்து தவிர்த்துக் கொள்வதே நல்லது. கைகொடுத்துக் கொள்வதால் கிடைக்கும் தவாபுகளைவிட தொற்று ஏற்பட்டால் வரும் ஆபத்து உயிருக்கே உலை வைப்பதாகிவிடும். இன்னும் சிறிது காலத்திற்கு எச்சரிக்கையாக இருப்பதே எல்லோருக்கும் நன்மை பயக்கும்.

சென்ற பெருந்தொற்றுக் காலத்தில், தமிழகத்தின் முக்கிய உலமாக்களை நாம் இழந்ததை மறக்க முடியாது. நாம், ஊரெல்லாம் சுற்றிவிட்டு, பள்ளிக்குச் சென்று பேஷ் இமாம்களிடம் முஸாஃபஹா செய்தால், அவர்கள் கொடுக்கவேண்டாம் என நினைத்தாலும் மறுக்க மாட்டார்கள். பரிசுத்தமாக இருக்கும் அவர்களைத் தொட்டு பரக்கத்தை நாம் வாங்கிக்கொண்டு நோயை அவர்களுக்குக் கொடுப்பது பாவமல்லவா? இப்படிக் கூறுவது சற்று அதிகப்படியான கூற்றாகத் தெரிந்தாலும் இதில் உண்மை இருப்பதை மறுக்கமுடியாது. ஒரு சிலர் கஷ்த் என்ற பெயரில் வீட்டிற்கே வந்து உங்களை அழைத்து கை கொடுக்க முன்வரலாம். இவற்றையெல்லாம் தவிர்த்துவிடுங்கள்.

“ அல்லாஹ்வை நம்புங்கள்; ஒட்டகத்தையும் கட்டிப்போடுங்கள்” என்று உத்தம நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் உரைத்ததில் இந்த உண்மை ஒளிந்திருக்கிறது.

நாட்டில் தடுப்பூசி போடுவதில் விழிப்புணர்வு ஏற்பட்டிருக்கிறது. பள்ளிவாசல்கள், முஸ்லிம் அமைப்புகள் இந்த விஷயத்தில் கூடுதல் கவனம் செலுத்தி முஸ்லிம் மக்கள்– குறிப்பாக முஸ்லிம் பெண்கள் தயக்கமின்றி வந்து ஊசி போட்டுக்கொள்ளும் வசதிகளை ஏற்படுத்தித் தரவேண்டும்.

சங்கைமிகு செய்கு நாயகம் அவர்கள், கொரோனா விஷயத்தில் முரீதுப் பிள்ளைகளை அடிக்கடி எச்சரித்துக் கொண்டே வருவது கவனிக்கப்படவேண்டிய விஷயம். தடுப்பூசி போட்டுக் கொள்ளவும் ஆர்வமூட்டியிருக்கின்றார்கள்.

எனவே, நாம் நம்மை ஆபத்திலிருந்து தற்காத்து, மற்றவர்களையும் பாதுகாப்பது அவசியத்திலும் அவசியமாகும். அல்லாஹ் சீக்கிரமே இந்த முஸீபத்லிருந்து நம்மையும் நாட்டையும் காப்பாற்றுவானாக! ஆமீன்!

*மறைஞானப் பேழை நிறுவனர்*

**அஷ்ஷைகுல் காமில்**

**குத்புஸ்ஸமான் ஷம்ஸுல் வுஜூத்**

**ஜமாலிய்யா**

**அஸ்ஸய்யிது கலீல் அவ்ன் மௌலானா**

**அல்ஹஸனிய்யுல் ஹாஷிமிய் நாயகம் அவர்கள்**



தவ்ஹீத் சம்பந்தமான விளக்கம் ஒருவருக்குத் தேவைப்பட்டால் அதற்கான தேட்டம் இருக்க வேண்டும், அவ்வாறு ஒருவருக்கு தேட்டம் ஏற்பட்டு அடுத்து வரக்கூடிய மாதந்திரக் கூட்டத்திற்குச் செல்வாரானால் அவருக்கு ஏற்பட்ட சந்தேகத்திற்கு நிச்சயம் யார் மூலமாவது நிவர்த்தி கிடைத்து விடும்.

இதனாலேயே நாம் மாதாந்திரக் கூட்டத்திற்குச் செல்ல வேண்டியது கடமை எனக் கூறி வருகிறோம்,

**– சங்கைமிகு செய்கு நாயகம் அவர்கள் –**

# ஜமாலிய்யாத் தோட்டத்தில்

எங்களுடைய கல்பில் மாத்திரமல்ல. எங்களின் உடல் முழுவதிலுமே ஹக்குதான் இருக்கிறது. எங்களது எண்ணம் முழுவதும் ஹக்காகத்தான் இருக்கிறது. பொதுவான விளக்கம்தான் இது. இன்னும் விளங்குவதற்கு நிறைய இருக்கிறது. இந்த மாதிரி விளங்க வேண்டும். இப்படி விளங்கவில்லையென்றால் மிருகத்தைவிட நாம் மோசம்! ஏனெனில் மிருகம் தன் இறைவனை அறிந்து வணங்கிக் கொண்டிருக்கின்றது.

குழந்தைகள் பிறந்தவுடன் ஹக்கிலேயாகி அப்படியே அதில் வணங்கிக் கொண்டிருக்கின்றன. பிறக்கும் குழந்தைகள் அனைவரும் வலிமார்கள் என்று சொல்வதற்குக் காரணம் அதுதான். பிறக்கும் குழந்தைக்கு ஒன்றுமே தெரியுமா? இலேசாகச் சிரிக்கும் அழும். எந்த ஒரு பொருளையும் பார்த்து இதுதான் என்று சொல்ல முடியாது! பார்க்கும்: தெரியாது. இப்படி ஹக்கிலிருந்து வெளியானவுடன் ஹக்காகவே இருந்தோம். பரிபூரணத்தோடு தான் இருந்தோம்.

எங்களைப் பிரித்து வைத்திருப்பது ஆகாயம்தான். ஆனால் ஆகாயத்துக்கும் எங்களுக்கும் எவ்வளவோ தொடர்புகள் இருக்கின்றன. அந்தத் தொடர்பு எனச் சிந்தித்தால், அணுக்களுக்கும் எங்களுக்கும் உள்ள தொடர்பு. அணு இல்லாத இடமேயில்லை. எங்களுடைய மூளையிலும் அந்த அணு இருக்கத்தான் செய்கிறது. கண்ணில் – பார்வையில் எல்லாவற்றிலும் அந்த அணு இருக்கிறது. இந்த வகையில் ஹக்கு சுபுஹானஹூ வதஆலா பின்னிப் பிணைந்தே இருக்கின்றான். எங்களை விட்டு அவன் தூரப் போகவில்லை. அல்லாஹூ தஆலா பிடரி நரம்பைவிட மிகவும் நெருங்கிய வனாக இருக்கின்றான். அல்லாஹ் எங்களுடனேயே இருக்கின்றான். இந்தக் குர்ஆன் ஆயத்தின் கருத்து இப்படியிருக்குமேயல்லாது, அவன் எங்கேயோ இருக்கின்றான் என்று வராது! அப்படிச் சொன்னால் அது ஷிர்க்.

***(சங்கைமிகு செய்கு நாயகம் அவர்கள்)***

## கொய்த மலர் கொய்த மலர்

# அல்லாஹ் அருள்கிறான்!



## நல்லடியார்கள்

மேலும் ரஹ்மானின் (உண்மையான) அடியார்கள் எத்தகையவர்கள் எனில் அவர்கள் பூமியில் பணிவோடு நடப்பார்கள். அறிவீனர்கள் அவர்களுடன் முறைகேடாக உரையாடினால் உங்களுக்கு ஸலாம் சாந்தி உண்டாகட்டும் என்று கூறிவிடுவார்கள். மேலும் அவர்கள் தங்கள் இறைவனின் திருமுன் ஸுஜ்து செய்தும் நின்றும் வணங்கியவாறும் இரவைக் கழிப்பார்கள். மேலும் அவர்கள் இறைஞ்சுவார்கள்: எங்கள் இறைவனே நரக வேதனை ஓயாது தொல்லை தரக்கூடியதாக இருக்கிறது. திண்ணமாக நரகம் தீய தங்குமிடமாகவும் மிகவும் மோசமான இடமாகவும் இருக்கின்றது. மேலும் அவர்கள் செலவு செய்யும்போது வீண் விரயமும் கஞ்சத்தனமும் செய்வதில்லை. மாறாக அவர்களுடைய செலவுகள் இந்த மிதமிஞ்சிய இரு நிலைகளுக்கிடையில் இருக்கும். (19. 25.63 -67)

ரஹ்மானின் (உண்மையான) அடியார்கள் யாரெனில் அவர்கள் பொய்மைக்கு சாட்சியாக இருப்பதில்லை. அவர்கள் ஏதேனும் வீணானவற்றின் அருகில் செல்ல நேர்ந்தால் கண்ணியமானவர்களாய்க் கடந்து சென்று விடுவார்கள். மேலும் தம் இறைவனின் வசனங்களை ஓதிக்காட்டி அவர்களுக்கு நல்லுரை வழங்கப்படும் போது அவற்றைக் குறித்து குருடர்களாகவும் செவிடர்களாகவும் இருப்பதில்லை. மேலும் அவர்கள் எங்கள் இறைவனே! எங்கள் மனைவிமார்களையும் எங்கள் குழந்தைகளையும் எங்கள் கண்களுக்கு குளிர்ச்சி அளிக்கக் கூடியவர்களாக விளங்கச் செய்வாயாக! மேலும் எங்களை இறையச்சமுடையோருக்குத் தலைவர்களாய்த் திகழச் செய்வாயாக! இத்தகையோரே தங்களுடைய பொறுமையின் பலனாக உயர்ந்த மாளிகைகளைப் பெறுவார்கள். மரியாதையுடனும் வாழ்த்துகளுடனும் அவர்கள் அங்கு வரவேற்கப்படுவார்கள். அவர்கள் என்றென்றும் அங்கு தங்கி வாழ்வார்கள். எவ்வளவு அழகானதாக இருக்கின்றது அந்தத் தங்குமிடம். எவ்வளவு உன்னதமானதாக இருக்கிறது அந்த ஓய்விடம்! (19.25.72-76)

விசுவாசிகளின் ஒளி அவர்களுக்கு முன்னாலும் அவர்களின் வலப்பக்கத்திலும் பாய்ந்து கொண்டிருக்கும். மேலும் அவர்கள் எங்கள் அதிபதியே! எங்கள் ஒளியை எங்களுக்கு முழுமையாக்கித் தருவாயாக! மேலும் எங்களை மன்னிப்பாயாக! நிச்சயமாக அனைத்தின் மீதும் நீ பேராற்றல் உள்ளவனாக இருக்கின்றாய்!

(28. 66-...8)

الحديث

# அண்ணல் நபியே! அருள் வாழ்வே!

ஹதீஸ் பக்கம்

**ஸா**லிம்பின் அபீ ஸஅத் (ரலி) அவர்கள் மூலம் இப்னு ஸஅத் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்:

ஒரு சமயம் தாஹா நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், தண்ணீர் நிறைந்த ஒரு தோல் பையினை ஸஹாபாக்களின் ஒரு ஜமாஅத்திற்குக் கொடுத்து, இதனைக் கொண்டு செல்லுங்கள். வழியில் இது உங்களுக்கு உணவாகப் பயன்படும் எனச் சொல்லி வழியனுப்பி வைத்தார்கள். பயணம் சென்று கொண்டிருந்த அந்த ஸஹாபாக்க ளுக்கு பசி வந்த போது, நபிகளார் தந்த அந்த தோல் பையினைத் திறக்கிறார்கள். அதிலிருந்த தண்ணீர் சுவையான பாலாக மாறி இருந்தது. அதன் மேல், ஆடையும் படர்ந்து நிற்கக் கண்டார்கள். எல்லா ஸஹாபாக்களும் வியப்புற்று இது உங்களுக்கு உணவாகப் பயன்படும் என உத்தமர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறிய வாக்கினைப் போன்று நமக்கெல்லாம் மிகவும் விருப்பமான, பாலுணவாக அல்லவா மாறியிருக்கிறது, அல்ஹம்து லில்லாஹ் என நன்றி கூறியவர்களாக வயிறாரப் பருகினார்கள். *(நூல்: கலாமுல் முபீன்)*

ஹிஜ்ரி 5-ஆம் ஆண்டு நடந்த அஹ்ஸாப் போர்க்களத்தில் குப்பார்களின் படை மதீனா மாநகரைச் சுற்றி முற்றுகையிட்டிருந்தது. அந்நிலையில் பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் இப்படிக் கூறினார்கள்:

இன்றிரவில் கொடும் புயல் காற்றடிக்கும். அப்புயலின் வேகத்தால் மனிதன் நிற்க முடியாமல் தூக்கி எறியப்படுவான். அவர்களின் கூடாரங்க ளெல்லாம் பிய்த்துப் பிடுங்கி எறியப்படும். அவர்களின் குதிரைகளெல்லாம் ஒன்றோடொன்று மோதி மடிந்து விடும் எனக் கூறினார்கள். அவர்களின் திரு வாக்குப்படி அப்புயல் காற்றடிக்கவும் எதிரிகள் நிலைகுலைந்து தத்தளித்தார்கள். அவர்களின் கூடாரங்களெல்லாம் கிழித்தெறியப்பட்டன. குதிரைகள் ஒன்றோ டொன்று மோதி மடிந்தன. போர்க்களத்தை விட்டும் விலகி நின்றவர்களில் சிலர் தப்பித்து ஓடினார்கள். எதிரிகளை சிதறுமாறு அழித்து, முஃமின்களைப் பாதுகாத்த பாக்கியங்களை உணர்த்தும் வகையில் கீழ்க்காணும் இறை வசனம் இறங்கிற்று:

*இறைவன் உங்களுக்கு (இக்கட்டான நேரத்தில்) அளித்த பாக்கியங்களை எண்ணிப் பாருங்கள். உங்களைச் சுற்றி எதிரிகள் சூழ்ந்து முற்றுகையிட்டிருந்த நேரம், நாம் அவர்கள் மீது கொடும் புயல் காற்றையும், உங்கள் கண்ணுக்குப் புலப்படாத மலக்குகளின் பட்டாளங்க ளையும் அனுப்பி வைத்தோம். (அதனால் அவர்களுக்குப் பயங்கரப் பொருள் சேதமும், உயிர்ச் சேதமும் ஏற்பட்டுப் புறமுதுக காட்டி ஓடிவிட்டனர். நீங்கள் நன்நபி (ஸல்) அவர்களின் ஆணைக்கு கட்டுப்பட்டு நடந்துவரும் நற்) செயல்களை யெல்லாம் அல்லாஹ் அறிந்திருக்கிறான்.*

*(அல்குர்ஆன் : 33-9).*

# 2021 கூட்டுக் குர்பானி அறிவிப்பு

அன்பு முரீதுகள் அனைவருக்கும் அஸ்ஸலாமு அலைக்கும் (வரஹ்).

இன்ஷா அல்லாஹ் இவ்வாண்டும் நமது மதுரஸா சார்பில் கூட்டுக்குர்பானிக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. **ஒரு பங்கு ரூ. 2800/-**

குர்பானி பங்கு சேர்க்கும் ஆத்ம சகோதரர்கள், சபைச் செயலாளர்கள் வழக்கம்போல பங்குகள் சேர்த்து மதுரஸாவின் வளர்ச்சிக்கு உதவுமாறு கேட்டுக்கொள்கிறோம். ரசீது புக்- மற்றும் விபரங்களுக்கு திருச்சி யாஸீன் ஹக்கிய்யுல் காதிரி அவர்களை 9443148148 எண்ணில் தொடர்பு கொள்ள வேண்டுகிறாம்.

**-மதுரஸா நிர்வாகிகள்-**

---

# புகாரீ ஷரீப் ஷரஹ் (விரிவுரை நூல்) அன்பளிப்பு

சங்கைமிகு குத்புல் ஃபரீத் ஜமாலிய்யா அஸ்ஸையித் யாஸீன் மௌலானா (ரலி) அவர்களின் 57 ஆம் வருடக் கந்தூரியின் பொருட்டு அவர்களின் அரிய ஆக்கமாகிய புகாரீ ஷரீஃபின் (முதல் பாகம்-ரூ.1000/- விலையுள்ளது) 200 கிதாபுகளை தமிழக மார்க்க அறிஞர்கள், மதுரஸாக்களுக்கு அன்பளிப்பாக குவைத் ஏகத்துவ மெய்ஞ்ஞான சபை சார்பில் அன்பளிப்பாக அனுப்பி வைக்கப்பட்டது. இந்த கிதாபினைப் பெறுவதற்கு மதுரஸாக்கள்-மார்க்க அறிஞர்கள் தங்கள் பெயர்களை ஆலிம் புலவர் அவர்களிடம் வாட்ஸ்அப் மூலம் பதிவு செய்து ஆர்வத்துடன் பெற்றுக் கொண்டனர்.

சங்கைமிகு குத்புல் ஃபரீத் யாஸீன் மௌலானா (ரலி) அவர்கள் மிகவும் ஆராய்ந்து, தங்களின் பொன்னான காலங்களைப் பயன்படுத்திச் செய்த இந்த ஹதீஸ் நூல், மார்க்க அறிஞர்களின் கைகளுக்கும் - மதுரஸா நூல் நிலையங்களுக்கும் சென்று சேரவேண்டும் என ஆவலுற்றபோது, குவைத் ஏகத்துவ மெய்ஞ்ஞானசபைத் தலைவர் அப்துல் ஹமீது - பாக்கவி - ஹக்கிய்யுல் காதிரி அவர்கள் அதற்கான ஏற்பாட்டினை, செயலாளர் நத்தர்ஷா மற்றும் குவைத் முரீதுப் பிள்ளைகளின் பேராதரவுடன் செய்து இப்பணியினை நிறைவு செய்துள்ளனர். இத்திருப்பணியில் பங்கெடுத்த அனைவருக்கும் சங்கைமிகு வாப்பா நாயகம் அவர்கள் அறியாப்புறத்தில் ஹக்கின் உதவி வந்துசேரும் என அருள் துஆ மழையைப் பொழிந்தார்கள் என மரியாதைக்குரிய ஆத்மசகோதரர் துபை ஷாஜஹான் ஹக்கிய்யுல் காதிரி அவர்கள் நன்மாராயம் அறிவித்தார்கள்.

(செய்தி - கலீபா. ஆலிம் புலவர்)

# திருக்குறள்

**அறனறிந்து மூத்த அறிவுடையார் கேண்மை**
**திறனறிந்து தேர்ந்து கொளல்.**

அறத்தின் நுட்பங்களை அறிவதோடு தம்மைவிட அறிவில் முதிர்ச்சியுடைய பெரியோரின் நட்பு கிடைத்தற்கரியது என உணர்ந்து அவரது நட்பைப் பெறவேண்டும். (441)

---

பிறை **இம்மாதச் சிறப்பு தினங்கள்**



23 ஏர்வாடி சையிது இப்றாஹீம் ஷஹீது (ரலி) கந்தூரி

**துல் கஃதா**

---




**துல்ஹஜ்**

2 நாகூர் யூஸுஃப் தாதா (ரஹ்) கந்தூரி
4 பொதக்குடி ஸர்தார் அப்துல் கறீம் ஹள்ரத் (ரஹ்) மறைவு
9 அரஃபா தினம் (ஹஜ்ஜுடைய நாள்)
10 புனித ஈதுல் அள்ஹா
18 உதுமான் (ரலி) ஷஹீது
25 சென்னை மோத்தீ பாபா (ரஹ்) உரூஸ்

---

◈ **ஃபி**லாஸஃபி (தத்துவம்), ஸயன்ஸ் (விஞ்ஞானம்) ஆகிய இவற்றில் மேலானது ஹக்கு ஒன்று என சிந்தித்தலாகும்.

◈ ஒரே எண்ணத்தோடு (சலன சிந்தனையின்றி) மனோ சக்தியோடு செயல்பட்டால் எவ்வளவோ சாதிக்கலாம்.***(சங்கைமிகு செய்கு நாயகம் )***

---

**வாசக அன்பர்களே! மறைஞானப் பேழை சந்தா புதுப்பித்து விட்டீர்களா? மறைஞானப் பேழை சந்தா அனுப்ப வேண்டிய வங்கிக் கணக்கு எண்:**

**HUSSAIN MUHAMMAD.S. & JAHIR HUSSAIN.A**
**Indian Overseas Bank, SB A/c No. 20980100025255.**
**IFSC Code.IOBA 0002098**
**Branch- RM COLONY. DINDIGUL**

**பெயர் – முகவரி** பணம் அனுப்பியவுடன் தயவுசெய்து இந்த எண்களில் ஒன்றைத் தொடர்பு கொண்டு தெரியப்படுத்துங்கள்.

**A. JAHIR HUSSAIN. 9597912410 - 9944576165**

**சங்கைமிகு ஷைகு நாயகம் அவர்களின்**



# அ மு த மொழிகள்

## 2003 ஆம் ஆண்டு கொடிக்கால் பாளையத்தில் அருளிய உரையிலிருந்து....

**நா**ங்கள் பேசுவதெல்லாம் இறைவன் ஒருவன் என்பதைப் பற்றியே! அதற்கான விளக்கங்கள் , உதாரணங்கள் கொடுக்கப்பட்டு ஏகத்துவம் பற்றி அல்லாஹ் ஒருவன் என்பது பற்றி விளங்கி வருகிறோம். இந்த விளக்கம் நமக்கு அவசியம்தானா என உண்மையிலேயே நாம் சிந்தித்துப் பார்த்தால், இஸ்லாமிய ஷரீ அத்தின் முறைப்படியும் இது அவசியமென்று தான் கூற வேண்டும்.

ஏனெனில் இஸ்லாம் என்றால் முதன் முதலாக கலிமா என்றுதான் வருகிறது. ஆனால் இந்தக் கலிமாவுக்கு நாம் முதலிடம் கொடுப்பதாகத் தெரியவில்லை. லாயிலாஹ இல்லல்லாஹ் முஹம்மதுர் ரஸூலுல்லாஹ் என்று சொல்வதோ, குழந்தைகளுக்குச் சொல்லிக் கொடுப்பதோ, இதுபற்றிய எந்தக் கருத்தும் எம்மிடம் இல்லை, ஆனால் தொழுகை, மற்ற வணக்கங்கள் பற்றி நாமும் செய்கிறோம்: குழந்தைகளுக்கும் கற்றுத் தருகிறோம். ஈடுபடுத்துகிறோம். ஆனால் முதலாவதாகச் சொல்லப்பட்ட கலிமாவை யாருமே ஆராய்வதில்லை.

சிறுவயதில் தாய் தகப்பர் எப்படிச் சொல்லிக் கொடுத்தார்களோ அதையேதான் இன்றும் சொல்லி வருகிறோம். பெற்றோர் என்ன சொல்லிக் கொடுத்தார்கள்? லாயிலாஹ இல்லல்லாஹு – அல்லாஹுவைத் தவிர வேறு இறைவன் இல்லை: முஹம்மது நபி அவர்கள் அல்லாஹ்வின் திருத்தூதர் இதை மட்டுமே சொல்லி வருகிறோம். கலிமாவுக்கு "வணக்கத்துக்குரியவன் அல்லாஹ்வைத் தவிர வேறு இறைவன் இல்லை என சொல்லும்போது அதன் கருத்து என்ன என்பதை நாம் சிந்திக்க வேண்டும். பொதுவாக பிள்ளைகளும் ஆலிம்களும் இதைத்தான் அறிந்திருக்கின்றனர்.

இதற்குமேலே கேட்டால் அது சரியில்லை. ஷிர்க்கு, குப்ரை வருத்தும் என்று சொல்லி விடுகின்றனர்.

கருத்து என்னவென்றால் லாயிலாஹ - இலாஹ் இல்லை .../ இலாஹ் என்றால் அதாவது வணங்கக்கூடிய பொருள், கையால் செய்யப்பட்ட பொருள், எதுவுமே இலாஹ் அல்ல/ (இலாஹ் என்றால் இறைவன்) அல்லாஹ்வைத்தவிர அல்லாஹ்வைத் தவிர என்றால், அல்லாஹ் எங்கே இருக்கின்றான்? அடுத்த கேள்வி அதுதான் / அவன் எப்படி இருக்கின்றான்? என்ன மாதிரி இருக்கின்றான்? அவனை மாத்திரம் கூறி மற்றதெல்லாம் கடவுள் அல்ல இறைவன் அல்ல' என்கிறோமே, வணங்கக்கூடிய எந்தப் பொருளும் வேறு இல்லை அல்லாஹ்வைத் தவிர என்று சொன்னால் ... எந்த ஒரு பொருளையும் நாம் வணங்குவதில்லை .... பொருள்களெல்லாம் அதாகவே இருந்தாலும் கூட எந்தப் பொருளையும் நாம் வணங்குவதில்லை. அவையெல்லாம் முழுப்பொருளின் பகுதிகள். அப்படியானால் அல்லாஹ் எங்கே? வணக்கத்துக்குரியது எதுவுமே இல்லை என்று சொல்லிவிட்டு அல்லாஹ்வைத்தான் காட்டுகிறோம் அவன் எங்கிருக்கின்றான், எப்படியிருக்கிறான் என்பது தெரியவில்லை. அந்த அல்லாஹ்வைத்தான் நாங்கள் வணங்கி வருகிறோம் என்றால், அறியாதவனை எவ்விதம் வணங்குவோம்? எந்த ஒரு பொருளோ, மனிதனோ எதுவோ, வணக்கத்திற்குரியதல்ல. சூரியனோ சந்திரனோ எதையும் வணங்க முடியாது எத்தகைய சக்தியுடையதாக இருப்பினும் வணங்க முடியாது. ஆனால் ஒரு உண்மையான அல்லாஹ்வை வணங்க வேண்டும். அவன் எங்கே இருக்கின்றான்? இங்கே எல்லாவற்றையும் விட்டு வேறு எங்கேனும் இருக்கின்றானா? எங்கே இருக்கின்றான்? இதைப்பற்றி நாங்கள் முக்கியமாக அறியவேண்டும். அதனால் தான்.

**ஏகத்(து)வ ஞானந் தன்னை ஏற்காத பாபி மண்ணில்**
**தேகத்த மிருகந்தனிலும் தீராத கீழ்மை நீசன்**

எனப் பாடியிருக்கின்றோம். எதை வணங்க வேண்டும் என்பதை அறியாமலே வணங்கிக் கொண்டிருக்கிறோமே! ஒருவரிடம் நாம் கேட்டபோது நான் அல்லாஹ் என்ற சொல்லைத்தான் வணங்கி வருகிறேன் என்றார். இன்னொருவர் ஒளிவை வணங்குகிறேன் என்றார். இப்படி ஒவ்வொருவரும் ஒன்றைச் சொன்னார்கள். எதை வணங்குவது?

## அமுத மொழிகள்

ஒவ்வொரும் ஒரு பொருளை வணங்கி வருகின்றனர். ஒளிவாயிருந்தாலும் அதுவும் ஒரு பொருள் தான்! இப்போது சிந்தித்தால், இவர்களின் வணக்கத்துக்கும் எந்த ஒரு வித்தியாசம் என்ன வென்றால், அவர்கள் கையால் பொருள்களைச் செய்து எத்தனையோ தெய்வங்களை வணங்குகின்றனர்.

நாமோ மனதில் பலதையும் அல்லாஹ் என்று நினைத்து வணங்கி வருகிறோம். இப்படி வணங்குவது பொருத்தமானதா? சிறிதளவாவது இறைவனைப் பற்றி அறிய வேண்டும். அப்படி அறிந்து வணங்குவதில் தான் நன்மை இருக்கிறது அப்படி இல்லையென்றால் ... தனக்குத் தெரியாமல் மிருகங்கள் கூட இறைவனை வணங்கி வருகின்றன. அவைகளும் தஸ்பீஹு செய்கின்றன, அல்லாஹ் எங்களுக்கு இவ்வளவு பெரிய அறிவைக் கொடுத்தும் அவனை அறிய சக்தியில்லாமல் எதை எதையோ வணங்கிவருகிறோம். உண்மையான விஷயத்தைப் பார்க்கப்போனால் அல்லாஹ் ஒருவன் உண்டா? இல்லையா? என்று கேட்க வேண்டிய சந்தர்ப்பம் ஏற்படத்தானே செய்யும்? அல்லாஹ் இருக்கிறான். அவனை வானத்தில் அர்ஷில் இருக்கிறான் என்பது சரியாக வருமா?

அப்படியானால் அங்கே ஒரு சிம்மாசனத்தைப் போட்டு அமர்ந்திருக்கின்றான் என்றல்லவா வரும்? அப்படிச் சொன்னால் அவனுக்கு ஒரு மட்டு, அதாவது அவன் இந்த அளவு தான் என்று சொல்ல வேண்டியாது வரும். அவன் சிம்மாசனத்தில் இந்த மாதிரியான ஒரு நிலையில் இருக்கின்றான் என்றால் அவனுக்கு கை கால்கள் இருக்கிறது என்று ஆகிவிடும் அமர்ந்து இருப்பவனுக்கு எல்லாமே வேண்டுமல்லவா? இருப்பதற்கு உடல் பொருத்தமாக வேண்டும். அப்படியானால் மனிதனைப் போலத்தானே இருக்க முடியும்? மிருகத்தைப் போலவோ, பட்சிகளைப் போலவோ இருக்க முடியாதல்லவா?

அப்படியானால் அல்லாஹ் எங்கே இருக்கிறான்? எப்படியிருக்கிறான்? அர்ஷ் என்றால் என்ன? இப்போது நாம் ஆராயவேண்டியாது ... அர்ஷ்என்றால் என்ன? அதில் அவன் எப்படியிருக்கிறான்? அவன் பரிபூரணமாக அவர்களுடைய மனதில் அல்லாஹ் இருக்கின்றான். அவர்களின் மனதில் மட்டுமல்ல, அவர்களது உடல் முழுவதிலும் அல்லாஹ் இருக்கின்றான். அதுமட்டுமல்ல, எங்குப் பார்த்தாலும் அவன் நிரம்பி

இருக்கிறான். எங்குமே பரிபூரணமாக இருக்கின்றான். எங்கும் இருக்கின்றான் என்றால் கொஞ்சம் ’ கொஞ்சமாக, அங்குக் கொஞ்சம் இங்குக் கொஞ்சம் இருக்கிறான் என்ற கருத்துமில்லை. அல்லாஹ் பரிபூரணமாக எங்கும் இருக்கிறான். அதாவது அவனை எதிலிருந்தும் கழற்ற முடியாது. வேறாக ஆக்க முடியாது. தண்ணீரில் ஐஸைப் போடுகிறோம். அந்த ஐஸ் தண்ணீரோடு தண்ணீராகக் கரைந்து போகிறது. இப்போது அந்த வகையிலாவது எடுக்க முடியுமா? எந்த வகையிலாவது எடுக்க முடியுமா? முடியவே முடியாது? அதைப்போலவே ஹக்கு ஸுப்ஹானஹு வதஆலா இந்த மக்லூக்காத்துகள் (படைப்பினம்) அனைத்திலுமே பின்னிப் பிணைந்து உருகியிருக்கின்றான் அதிலேயே எல்லாமாக அவன் இருக்கின்றான், அந்த அல்லாஹுக்குத்தான் நாம் வணங்குகிறோமேயல்லாது வானத்திலிருக்கும் தெய்வத்துக்கோ, கஃபாவுக்குள்ளிருக்கும் தெய்வத்துக்கோ வணங்கவில்லை. நாம் வணங்குவது அல்லாஹ்வுக்குத்தான். பரிபூரணமாக, பரிசுத்தமான அல்லாஹ்வைத் தான் வணங்கிக் கொண்டிருக்கிறோம்.

---

## திருமுல்லை வாசல் கந்தூரி விழா!

குத்புல் அக்தாப் ஜமாலிய்யா செய்யிது யாஸீன் மௌலானா அல்ஹஸனிய்யுல் ஹுஸைனிய்யுல் ஹாஷிமிய் நாயகம் (ரலி) அவர்களின் **57ஆவது வருடக் கந்தூரி விழா** ஹிஜ்ரி 1442 துல்கஃதா பிறை 7 (18.06.2021) வெள்ளிக்கிழமை மாலை சனி இரவு **திருமுல்லைவாசல் மௌலானா நாயகம் (ரலி) அவர்களின் தர்ஹா ஷரீஃபில்** ஆரம்பமாகி பிறை 17 (28.06.2021) **திங்கள் மாலை செவ்வாய் இரவு** நிறைவு பெற்றது.

**திருக்குடும்பத்தார் இல்லத்தில் காலை, யாஸீன் நாயகர் (ரலி) மௌலிது ஷரீஃபும், அஸருக்குப்பின் ஸுப்ஹான மௌலிதும், மக்ரிபுக்குப்பின் ராதிபும், தர்ஹா ஷரீபில் யாகுத்பா பைத்தும் ஓதி சந்தனம் பூசப்பட்டது. பூ அலங்காரங்கள் லண்டன் நஜ்முத்தீன், திருச்சி யாஸீன்,பக்ருத்தீன், இப்ராஹீம் யாஸீனிய் ஹக்கிய்யுல் காதிரிகளாலும், குவைத் சபை சார்பாக கொரியர் மூலமாக வெளியூர் தப்ரூக்கும், மற்ற தப்ரூக் சென்னை ஜலால் ஹக்கிய்யுல் காதிரி அவர்களாலும், கந்தூரி உணவு வழமைபோல் சென்னை ஜனாப்.ஓ.எம்.சி. ஜெய்லானி, ஹைதர் நிஜாம் பி.இ. ஹக்கிய்யுல் காதிரி ஆகியோராலும் அரசு விதிகளுக்கேற்ப பார்சல் மூலம் வழங்கப்பட்டன. விழா ஏற்பாடுளை மௌலானா குடும்பத்தார் தலைமையில் திருச்சி யாஸீன், பக்ருத்தீன், ஆகியோரால் சிறப்பாகச் செய்யப்பட்டது.**

# வஹ்ததத்துல் வுஜூத்

இரண்டாம் பரிசு ரூ.10000/– பெற்ற கட்டுரை. 2

Er. S. ஜுபைர் B.E., ஹக்கிய்யுல் காதிரிய்,

திருவாடுதுறை, (கேம்ப்,அபுதாபி)

**எங்கும் நிறைந்த ஏக சக்தி திருவருட் பொழிக!**

**ஸல்லல்லாஹு அலா முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம்**

பிரபஞ்சத்தின் இந்த நூற்றாண்டின் தோன்று துறை வெளியான பொன்னாளை கண்ணியப்படுத்தான் வேண்டி ஏற்படுத்தப்பட்ட இக்கட்டுரைப் போட்டி தற்காலத்தின் அவசியமே.

அதுவோ இதுவோ என்று இறையை கற்பனை எண்ணங்களில் மிகைத்து அறியாமல் துதித்தும், கொடூரங்களும் அட்டுழியங்களும் அடர்ந்தேறும் போது தற்போதைய உலகில் வாழும் காலகட்டத்தில், பிரபஞ்சத்தின் மானிட வெளிப்பாடுகளுக்கு உண்மையை அறிவிக்கவும், அவற்றினைத் திருத்த வெளியாகும் ஏகத்தின் தோன்று துறையாக (மள்ஹருள் ஹக்காக), இறையின் தத்துவார்த்த வெளிப்பாடாக, காலத்தின் ரசூலாக நம் கண்மணி ஷெய்கு நாயகம் அவர்கள் பூவுலகில் அவதரித்து தன் முழுமையை (**வஹ்ததத்துல் வுஜூதை**)ப் பற்றி விவரிக்கின்றார்கள்.

இவ்வுண்மைகளை நம் பரிசுத்த நாயகர் பல தருணங்களில் தேன்மொழிகளாவும் பொன் எழுத்துக்களாகவும் அருளிய உள்ளமையின் (விளங்கிய) உண்மைகள் தான் இந்தக் கட்டுரையில் அமைய உள்ளது.

**1. வஹ்ததத்துல் வுஜூத்:**

வஹ்ததத்துல் வுஜூத் என்ற உண்மையை லாயிலாஹ இல்லல்லாஹ் முஹம்மது ரசூலுல்லாஹ் (ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம்) எனும் கலிமாவை (தத்துவத்தை)க் கொண்டுதான் அணுமுதற்கொண்டு பிரபஞ்சம் வரை அமைந்துள்ளது.

இறை என்ற ஒன்றை தவிர வேறு எந்த ஒன்றும் அறவே இல்லை. மேலும் அதன் பரிபூரண தோன்றல் முஹம்மதுர் ரசூலுல்லாஹ் ஸல்லல்லாஹு

அலைஹிவஸல்லம் (என்ற ஒரு தத்துவமே) அந்த முழுமையின் வெளிப்பாடாக முழுமையாக உள்ளது. மேலும், பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் நவின்றார்கள். முழுமையே இறை; அதில் (காணும், உணரும்) உள்ளிட்டவைகள் அனைத்தும் அதன் பகுதிகளே. முழுமையான இறையையே வணங்குங்கள்; அதன் (உட்) பகுதிகளை வணங்காதீர்கள். அது ஷிர்க்கெனும் இணைவைக்கும் பாபமாகும்.

**2. வேறு எந்த ஒன்றும் வுஜூதிற்கு அயலாய் இல்லை:**

வார்த்தைகளால் விளக்க, விவரிக்க முடியாத உள்ளமையை, இந்தக் காலத்தில் இதை இப்படிதான் விளங்க வைக்க முடியும் என்று அந்த புனிதம் மானிடர்களுக்கு ஏகத்தின் உண்மையை அருளி (நம்மையும்) நம் சிற்றறிவைக் கொண்டு அறிவால் சிந்திக்க வைத்து அதன் பொன் மொழிகளைக்கொண்டே நம்மை சிந்தித்து தொகுக்க வைக்கின்றது.

வஹ்தத்துல் வுஜூத்– ஏக காட்சி. வுஜூத் உள்ளமை– உளதாயிருக்கும் தன்மை. தன்னிலே தானானது, அதுவே ஏகமயமானது. அதாவது முழுமையானது. இது நீர், நிலம், நெருப்பு, காற்று, ஆகாயம் ஆகிய ஐந்து பூதங்களையும் (ஒன்றோடொன்று) சேர்த்தது. அதாவது (ஐந்து) என்ற பிரிவுகளை அற்றது.

முழுமை என்றால் மானிடன் உணர்ந்த –உணரா உணர்வுகள், காணும்– காணாக் காட்சிகள், அறிந்தும் – அறியா அறிவில் உள்ளவைகள், மொழிந்தும் மொழியா மொழிகள், நீர், நிலம், நெருப்பு, காற்று, ஆகாயம், கோள்கள், நட்சத்திரங்கள் இவைகளில் வெளிப்பட்டவைகள், இன்னும் மென்மேலும் மாற்றம் கொண்டு வெளிப்படவிருப்பவைகள் அனைத்தையும் உள்ளடக்கியதே முழுமை. அதாவது அனைத்தையும் சேர்த்துக்கொண்டது.

இது நிறைந்தும், பரவியும், விரவியும் எதுகையிலாது அனைத்துமாய் நின்றியங்கும் அந்த ஒன்றே ஏகம். இது, அனைத்தையும் உள்ளடக்கியதால் இந்த முழுமையைத் தவிர்ந்த வேறு எந்த ஒன்றும் அதனுக்கு பிரதியாய் இல்லை. இந்த ஒன்றுதான் முழுமை, அதுவே பிரபஞ்சம்!

முழுமை என்பதைக் கருத்தில் கொண்டால், அது மேற்கூறப்பட்ட பகுதிகளில் காலத்தையும் சேர்த்ததே. காலம் என்பது கடந்தகாலம், நிகழ்காலம், எதிர்வரும் காலம் ஆகிய அனைத்தையும் உள்ளடக்கியதே. இது வேறு எந்த ஒன்றிலிருந்தும் எந்தத் துணையோடும் உண்டாகவில்லை.

எவ்வாறு என்றால் கருணை நபிகளார் அவர்கள் பல சமயங்களில் முன்னறிவுப்புகளை அருளியுள்ளார்கள். மேலும் ஆதம் அலைஹிவஸல்லம்

அவர்கள் முதல் அவர்கள் ஆட்சி செய்யும் காலம் வரை பல நிகழ்வுகளை எடுத்துரைத்தார்கள். அதாவது அவர்கள் முழுமையில் ஏகமாய் அனைத்தையும் கண்டார்கள். இதிலிருந்து நாம் அறிவது காலமும் இறையின் ஒரு அங்கமன்றோ.

முக்காலமும் இறை என்ற ஒரு கருத்தைக்கொள்ளும்போது, திட்டமிடப்பட்ட, திட்டமிடப்படும், திட்டமிடப்படுகின்ற செயல்கள் அனைத்தும் அன்றும் திட்டமிடப்பட்டு, இன்றும் திட்டமிடப்பட்டுக்கொண்டும், மேலும் திட்டமிடப்பட்டுக்கொண்டும் ஏகத்தில் ஏகமாய் நடந்தேறிக்கொண்டுள்ளது. எனவே காலத்தில் இவ்வளவுதான், அவ்வளவுதான் என்ற மட்டு (அளவு) இல்லவே இல்லை!

அடுத்து இடம்: பூமியில் ஓரிடத்தில் இருந்துகொண்டு பார்க்கும்போது எண்திசைகளைக் குறித்து விளக்கமுடியும். அதுவே வேறு ஒரு கோணத்தில் பார்க்கும்போது அந்தத் திசைகளின் அமைப்பே மாறுபடும். அவ்வாறே வேறு கிரகத்தில் இருந்து கணக்கிடும்போது இதன் இயங்கங்களும், திசை வேகங்களும் முற்றிலும் மாற்றமாய் இருக்கும். அதன் ஒரு பகுதியான தூரத்தை கணக்கிடும்போது, பல சூரியக் குடும்பங்கள், மேலும் நட்சத்திரக் கூட்டங்கள் இடையேயான இடைவெளியை, ஒளி (தன் கடக்கும்) ஆண்டில் அளவிட்டு தற்போதைய விஞ்ஞானம் வியக்கின்றது. தூரம் என்ற அளவு வரும்போது இடம் என்ற ஒன்று உள்ளதுதானே. இதற்கு மேல் பகுதி, கீழ் பகுதி, முன்னால் உள்ள பகுதி, பின்னால் உள்ள பகுதி என்ற ஒரு அமைப்பு கிடையாது. என்ன ஒரு வியப்பே வியப்பு!

இந்தப் பிரபஞ்சம் என்பது எக்காலத்திலும் எந்த அறிவியலைக்கொண்டும் ஒருபோதும் அளவிட முடியாது. மனித அறிவின் வளர்ச்சிக்கு ஏற்ப ஆராயும்பொழுது அதன் விளக்கம் போய்க்கொண்டே இருக்கும். இவ்வளவுதான் என்ற எல்லைகளை அற்றது. முடிவுகளையும் அற்றது.

இதற்கு (சுழல்வதற்கோ இயங்குவதற்கோ) மைய (அச்சு)ப்புள்ளி என்ற ஒரு அமைப்பும் அற்றது. இது வேறு எந்த ஒரு ஆதாரத்தைக்கொண்டும் இயக்கப்படவும்வில்லை. இயங்கவுமில்லை. இதற்கு ஆரம்பம் என்ற ஆரம்பமும் கிடையாது. முடிவு என்ற முடிவும் கிடையாது.

இது சிறியதாகிக்கொண்டும் இல்லை. பெரியதாகிக்கொண்டும் இல்லை. பெருக்கமாயுமில்லை குறுக்கமாயுமில்லை. வட்டமாயும் இல்லை. நீள் வடிவமாயும் இல்லை, நீளமாயும் இல்லை, அகலமாயும் இல்லை, சுருக்கமாயுமில்லை எனவே குறுக்கமாயுமில்லை.

இது எந்த ஒன்றிலிருந்தும் உண்டாகவில்லை. யாராலும் படைக்கப்படவில்லை. யாராலும் உண்டாக்கப்படவில்லை. மேற்கூறிய அமைப்புகள் இயற்கையானது. இது

தன்னிலே தானானது. இதற்கு இப்படித்தான் என்ற ஒரு உருவம் கிடையாது அதாவது உருவம் அற்றது.

இந்த முடிவுகளை அற்ற அந்த முழுமைதான் ஏகமயமானது. அனைத்தும் அதுவே ஆதலால் அதனைத் தவிர்ந்த வேறு பொருட்கள் அதனுக்கு அயலாய் இல்லை. அந்த ஒன்றே பூரணமானது. அதுவே குறுக்கமானதன்று.

வுஜூத்- தன்னிலே தானானது

வுஜூத்- வேறு ஒன்றில் இருந்து ஆகவில்லை, ஆக்கப்படவுமில்லை

வுஜூத்- முக்கால வேறுபாடின்றி எக்காலமும் குறை மிகையின்றி நிறைந்திருந்தது.

இந்த வுஜூதின் தாற்பரியத்தை மெய்யெனக்கொள்வதாலோ, திட்டப்படுத்திக்கொள்வதாலோ, ஆராய்வதாலோ, நிரூபிப்பதாலோ, மேலும் உண்டாதல், நிகழ்தல், அடைதல், பெறுதல், சேர்த்தல் போன்ற கருத்துக்களைக் கொண்டும், இன்னும் எத்தகைய சொற்களைக் கொண்டும் வுஜூதின் உள்ளமையை அதன் ஆழ்கடலை அறிந்து கொள்ள இயலாது.

### 3. தன்ஸீஹ் மஹ்ள்

இந்த வுஜூதை (பிரபஞ்சத்தை) வெளிப்படுத்தப்பட்ட பிரபஞ்சம் (தஷ்பீஹ்) எனவும், வெளிப்படுத்தப்படாத பிரபஞ்சம் (தன்ஸீஹ்) என பகுக்கப்படும்போது, தன்ஸீஹ் தூய்மையானது, அருவானது, உருவம் அற்றது, அதுதான் ஹக்காகவிருந்தது என்றும், தஷ்பீஹ் என்பதை அதனுள்ளிலேயே உருவம், எல்லைகள் என்பவைகள் கொண்டும் பெயர்கள் கொண்டும், பண்புகள் ஒப்புகைகளைக் கொண்டும் வெளியாகியது என்று கருத வேண்டும்.

தன்னில் தானான (முழுமை- வுஜூத்) ஒன்று, தன்னிலிருந்தே அதாவது முழுமையிலிருந்தே வெளியாகியது. அதாவது தன்னிலே தானானது, தன்னிலே தானான்.

இல்லாமல் இருந்தது. ஆனால் (அதாவது) இப்போது அது மாறுபட்டுள்ளது. மாறுபட்டுள்ளது என்றால் மாற்றம் ஆகி (க்கொண்டு) இருப்பது.

அப்படி வெளியாகும் போதும் முழுமையில் (வுஜூதில்) திரிபு, பகுப்பு, வேற்றுமைகள், வித்தியாசங்கள் மாற்றங்கள் ஏற்படவில்லை. ஏனென்றால் மாற்றம் என்பது அதனுள்ளேயே (முழுமையின் உள்ளேயே) நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. எனவே மாற்றங்களினால் கூடுதல் குறைவு என்பது வுஜூதில், உள்ளமையில் முழுமையில் ஏற்படுவதில்லை.

கடலலை (தன்னிலிருந்தே) மேலெழும்பொழுது அலையாகவும் பின்பு அது கடலாக மாறுவதும், நீர்க்குமிழி (தன்னிலிருந்தே) குமிழாக வெளிப்பட்டு பின்பு நீராக தன்னிலை மாற்றமாவது போன்றதே!

நம் நாயகர் அவர்கள் மொழிவார்கள். களியைக்கொண்டு செய்த மண்பாண்டத்தை மீண்டும் களியாக ஆக்குவது போன்றும், நீர் தன் திரவ நிலையிலிருந்து பனிக்கட்டி என்ற திட நிலைக்கு மாறுவதும், மீண்டும் அது தன் திரவ நிலைக்கு மாறுவது போல் என்று இலகுவாக மொழிவார்கள்.

உதாரணமாக திடம், திரவம், வாயு இத்தன்மைகள் மாறும் பண்புகளைக்கொண்டது. ஆச்சிஜன் என்ற வாயுவை ஹைட்ரஜன் என்ற வாயுவுடன் சேர்க்கும் போது நீராக மாறுகிறது. அதாவது நீர்... இல்லாமல் இருந்தும். அதே நீரை மேற்கருதியவாறு மீண்டும் இரு வாயுக்களாக பகுக்கவும் முடியும்.

மேலும் நிலத்தோடு உள்ள நீர் ஆவியாகி, மேகமாகி மழையாகி மீண்டும் நீராக மாற்றமடைந்துக்கொண்டே இருக்கின்றது. சூரியனிலிருந்து வெளியாகும் வெளிச்சம் (ஒளி) நாம் பகலில் பார்க்கும் ஒளி போன்றதன்று. பல மாற்றமடைந்த தன்மையால் மனிதப் பார்வைக்கு ஏற்றதாய்க் காண முடிகிறது. நகை என்ற ஆபரணத்திலிருந்து தங்கத்தை பிரிக்க முடியாது. பழமும் சுவையும் பிரிக்க முடியுமா!

**4. தானே தன்னில் தானானான்.**

அதாவது **வுஜூது**, அந்த **வுஜூதை (தன்னைக்)க்** கொண்டேயிருப்பது. அந்த ஹக்கான வுஜூதிலிருந்தே ஏனைய அனைத்தும் வெளியாகின, உண்டாகின எனும்போது, அது **தன்னைக்கொண்டே உண்டாயிருப்பது புலப்படும்.**

எனவே **தன்ஸீஹ் மட்டும் ஹக்கு அல்ல; (அல்லது) தஷ்பீஹ் மட்டும் ஹக்கு அல்ல. தன்ஸீஹையும்** (வெளிப்படுத்தப்படாத பிரபஞ்சம்), **தஷ்பீஹையும்** (வெளிப்படுத்தப்பட்ட பிரபஞ்சம்) **ஒன்று சேர்த்ததே தன்ஸீஹ் மஹ்ல்**. ஏனென்றால் இவ்விரண்டும் **தனித்தனிப் பகுதிகள் அல்ல.**

எனவே தன்னிலே தானான வுஜூத் முதலில் (அது) எப்படி இருந்ததோ, இப்போதும் (அது) அப்படியே இருக்கின்றது. எனினும் பெருமைக்குரிய பழமையை முன்னிருந்ததைப் போன்றது. அதாவது மாற்றம் என்று கருதப்படும் அனைத்தும் அந்த முழுமையில் மட்டும் நடைபெற வேண்டும் எனக் கருதும்போது அஃது அஃதாகவே உள்ளது (அதற்கு அயலாய் வேறு ஒன்றும் இல்லை) என்பது புலப்படும்.

அதாவது "ஹுவல் ஆன கமா கான, அவன் (இறை) முன் எப்படியிருந்தானோ இன்றும் அப்படியே இருக்கிறான்" என்பது அறியப்படுகின்றது.

இந்தக் குறிப்பற்ற **தன்ஸீஹ் குறிப்புகளுடன் தஷ்பீஹ் என மாற்றம் பெற்று தன்ஸீஹ் மஹ்ள் ஆக வெளியாகி உள்ளது** என்பதை கீழ் உள்ள படித்தரங்கள் என்ற அமைப்பில் வரையறுக்கப்படும்.

**5. படித்தரங்கள் (ஏழு)**

இவை இரண்டு வகைப்படும். அதாவது குறிப்பற்றதிலிருந்து பூரண வெளியாதலை நுஸுல்– (மேலேயிருந்து) கீழே இறங்குதலை இறக்கப் படித்தரங்கள் என்றும், அதையே மனிதன் தான் (யாரென்று அறிந்து) வந்த வழியே போவதற்கு உரூஜ் (மேலேயேறும்) ஏற்றப்படித்தரங்கள் எனலாம்.

**“குறிப்பற்ற அல்லது சூன்ய அல்லது அமா அல்லது இல்லாமல் இருந்த நிலையிலிருந்து...”**(நுஸுல் மேலேயிருந்து விவரிக்கும் விதமாக)

**1. முதலாம் படித்தரம்... மர்த்தபதுல் லாதஅய்யுன்– குறிப்பற்ற நிலை**

**லா** என்பது (ஒன்றும்) இல்லை. அதாவது இவ்வளவுதான் என கற்பனையில் வரையறுக்கும் கட்டுப்பாட்டை நீக்க வந்ததாகும்.

இதுதான் வுஜுத்– உள்ளமை முழுமை, அனைத்தையும் உள்ளடக்கிய குறிப்பற்ற நிலை, உள்ளமை என்பதற்கு இவ்வளவு தான் எனும் குறிப்பில்லை. இது (விவரங்கள், வருணனைகள் சேர்வதை விட்டும்) பரிசுத்தமானது. மொத்தமான ஒரு வரையறையை விட்டும் எல்லாக் கட்டுப்பாடு (எல்லை, அளவு)களை விட்டும் பரிசுத்தமானது.

இது மர்த்தபத்துல் அஹதிய்யா– ஏக ஏகாந்தப் படித்தரம் ஆகும். இந்த முழுமை தன்னில் தானாய், இந்த வுஜுத் உள்ளமை தான் “பரமனின் மூலச்சத்தாக” உள்ளது.

**2. இரண்டாம் படித்தரம்.... தஅய்யுனுல் அவ்வல்– முதற்குறிப்பு**

இல்லதென உள்ளதாயிருந்த வெளிப்பாடற்ற குறிப்பற்ற நிலை சிறிது சிறிதாய் சற்றே விஷமம் கொள்ளத் தொடங்கியது. இப்படித்தரம் விளக்கமின்றி மொத்தமாகப் பிரபஞ்சம் அனைத்துக்கும் உரிய (அவனுடைய) அறிவைப் பற்றி அறிவிக்கும் நிலையாகும். அதாவது விளக்கமின்றி மொத்தமாய் அறியும் நிலை.

இதுதான் **முஹம்மதிய்ய உள்ளமை– ஹகீகதுல் முஹம்மதிய்யா– நூருல் முஹம்மதிய்யா.**

**“அவ்வலு மா கலகல்லாஹு தஆலா நூரீ, முதலில் அல்லாஹு தஆலா சிருஷ்டித்தது என் ஜோதியையே”** என்று எம்பெருமானார் ஸல்லல்லாஹு

அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள். எனவே எம்பெருமானார் அவர்கள் ஆத்துமார்த்த உள்ளமைகளுக்கெல்லாம் உள்ளமையானவர்கள்.

**“லவ்லாக லமா கலக்துல் அக்வான– நீங்கள் இல்லையானால் பிரபஞ்சத்தையே நான் படைத்திருக்க மாட்டேன்”** அல்லாஹூ தஆலா கூறுவதாக எம்பெருமானார் ஸல்லல்லஹூ அலைஹி வஸல்லம் அவர்கள் அவர்கள் கூறினார்கள். இதன் கருத்தானது எம்பெருமானார் அவர்கள் பிரபஞ்ச உள்ளமைகளுக்கெல்லாம் உள்ளமையானவர்கள்.

**3. மூன்றாம் படித்தரம்... வாஹிதிய்யா (ஏகம்) இரண்டாம் குறிப்பு.**

பிரணவமாகிய உள்ளமைக்கும், வருணனைக்கும் உள்ள அவனுடைய அறிவைப் பற்றி இது தெரிவிக்கும். பிரித்தறியும் அறிவும், பெயர்களும், வருணனைகளும் சிறிதாக இதிலிருந்து ஆரம்பமாகிறது. ஹக்காகிய யதார்த்தம் படைப்பினங்களின் உருவங்கொண்டு வெளியாகும். இதற்கு கால, நேர, இடங்களில்லை, முந்தியது, பிந்தியது என்பது காலத்தாலோ, நேரத்தாலோ, இடத்தாலோ ஆனதல்ல.

எவன் தன்னுடைய முயற்சியில் இதையடைந்தானோ அவனிடத்து (ஹகீகதுல் இன்ஸானியா) மானிட உள்ளமை நிலைப்படும். சென்றவைகளையும் நிகழவிருப்பவைகளையும் அறிவான். இவனே இன்ஸான் காமிலாகிய பூரண மனிதன்.

**இது இப்போது எப்படி இருந்ததோ அப்படியே இப்போதும் உள்ளது.** மூன்று படித்தரங்களும் வேறு தன்மைகளைக் கொண்டிருந்தாலும் ஒரே தரத்தை, தன்மையை சேர்ந்தது.

**4. நான்காம் படித்தரம்... ஆலமுல் அர்வாஹ்– ஆத்துமாக்களின் உலகம்.**

இந்தப் படித்தரம் பிரணவ உள்ளமையின் முதற்கட்டமான (தன்னில் தானான) வெளிப்பாடாகும். மனிதர், அமரர், ஜின்கள் முதலானோரினதும் அவையல்லாவற்றி னுடையவும் ஆத்மாக்கள் வெளியாகும் தலம். இது ஆலமுல் ஜபரூத் அதாவது ஆத்மா ஒன்றிப்பு உலகம். மேலும் இது ஆலமுல் கியாலுல் முத்லக் அதாவது சம்பூரண மாயரூபம் எனப்படும்.

மேல் விளக்கப்பட்டவைகள் அனைத்தும் ஒன்றன் பின் ஒன்றாய்– படிப்படியாய் இந்த நூருல் முஹம்மதிய்யாவிலிருந்தே எல்லாம் வெளியாகத் தொடங்கின.

**5. ஐந்தாம் படித்தரம்.... ஆலமுல் மிதால்– மாதிரி உலகம்**

இந்தப் படித்தரம் (பிரணவ உள்ளமையின்) இரண்டாம் இறக்கம். இது பகுதி

பகுதியாக பிரிவு பெறாது, பிளவுபடும் தன்மையும், உயர்வு, தாழ்வு, அகலம், நீட்டம் போன்ற அமைப்புகள் இதில் இல்லை. இதற்கு ஆலமுல் கியாலுல் முகய்யத், அதாவது கட்டுப்பாடுடைய மாய ரூபம். ஆயினும் பிரிவுகள் ஏற்படவில்லை.

இந்தப் படித்தரம் "லவ்ஹுல் மஹ்பூழில்" உள்ளவற்றின் தோற்றம் அதாவது இறையறிவு வெளியாகும் தலம். இந்த ஆலமுல் மிதாலில் தான் அர்ஷும், குர்ஸிய்யும், ஏழு வானங்களும், நான்கு பூதங்களும் அவற்றில் உள்ளவைகள் யாவும் அடங்கியுள்ளன.

**6. ஆறாம் படித்தரம்... ஆலமுல் அஜ்ஸாம்– கோல உலகம்**

இந்தப் படித்தரம் (பிரணவ உள்ளமையின்) மூன்றாம் இறக்கம். அல்லது வெளிப்பாடு. அதாவது ஆலமுஷ் ஷஹாதா– காட்சி உலகம் மற்றும் ஆலமுஷ் முல்க்– ஆட்சி உலகம்.

இதில் உள்ள முதல் வெளிப்பாடு துர்ரதுல் பைலாஉ– வெண்முத்து என மறைந்துறையும் உடை ஆகும். பூதங்களும், தாதுப்பொருள், தாவரப்பொருள், மிருகங்கள் ஆகியவைகளும் மறைந்துறையும் உடைகளாகும். மேலும் இதில் கனமான ஒழுங்குப்படுத்தப்பட்ட சிருஷ்டிப் பொருள்களைப் பற்றியுள்ள விளக்கம் இதில் உண்டு, மற்றும் உடலைச் சேர்ந்த கனமான பொருள்களும் ரூஹைச் சேர்ந்த மிருதுவான வகைகளும் இதில் கனமாகவும் மென்மையாகவும் மாற்றம் பெறும்.

முந்திய படிகளுக்கு மாற்றமாக பிரிவுகளும் மாற்றங்களும் இதில் ஏற்படும். இது பகுதி பகுதியாகப் பிரிவு பெறும். சிற்சிலவாய்ப் பெயர்வு பெறும். இது முந்தைய படித்தரங்களுக்கு மாற்றமானது.

**7. ஏழாம் படித்தரம்– கோல உலகம், ஒளி உலகம், காட்சி உலகம்.**

**இது பிரணவ உள்ளமையின் கடைசித் தோற்றமாகும். அவதாரம், அல்லது "வுஜூதின் தோன்றுதுறை" இந்த படித்தரத்தின் மூலமாகவே வெளிப்படுவது.**

இந்த வெளிப்பட்ட, பிரிந்த நிலையானது மொத்த (ஏக) நிலையான உள்ளமையில் போய்ச்சேரும். அதாவது படைப்புகளாக வெளியான எல்லாச் சிருஷ்டிகளும் பிரிவு நிலையுடையவை. பரிபூரணமாயிருந்த நிலை மொத்த நிலையாகும். இந்தப் படித்தரத்திலிருந்தே மேலும் மீண்டு மேலே செல்ல வேண்டும். இதனால் இது மேலே கூறப்பட்ட எல்லாப் படித்தரங்களையும் சேர்த்துக் கொண்டுள்ளது.

**அதாவது மொத்தத்தில், முழுமையில் (உள்ளமையில் படித்தரங்கள் என்ற) பிரிவுகள் அற்றது. எனவே அவன் (இறை) முன் எப்படியிருந்தானோ இன்றும் அப்படியே இருக்கிறான். எனவே அஃதல்லாத வேறொன்று என்றுமே எங்குமே இல்லை. எல்லாம் அதுவே!**

"(இந்த உள்ளமை) எங்கே (அமைந்து உள்ளது)? என்பதும், இந்த உள்ளமை இது அது என்ற ஒன்றைப் போன்றது என்பதும் இது போன்ற ஒன்றைக்கொண்டு (ஆனது) என்பதும் எப்படி என்பதும் அதற்கில்லை. பிரதிப் பெயர்கள் அனைத்தும் அதனைக் கட்டுப்படுத்துபவையன்று. மட்டுப்படுத்துபவையன்று."

இது யாராலும் படைக்கப்படவும் இல்லை. அப்படிப் (படைக்கப்பட்டு) இருப்பின் புறத்தேவை என்ற ஒன்று வரும். அப்போது அதை முழுமை இறையென்று வரையறுக்க முடியாது. எனவே இறை என்ற ஒன்று, தேவை அற்றது என்பது நியதி.

**6. நீயற்ற இடனின்றி– நீயே நிறைந்தாய்**

இப்பிரபஞ்சத்தில் கண்ணுக்குப் புலப்படா சின்னஞ்சிறிய பொருள் அணு என அனைவரும் அறிந்ததே. அறிவியலின் (உண்மையில்) பார்க்கும் போது அதில் ஒரு (புரோட்டான், நியூட்ரான் இரண்டும் இணைந்து நிலை கொள்ளாமல் மாறிக்கொண்டிருக்கும்) உட்கருவும் அதைச் சுற்றி எலெக்ட்ரான் எனும் அணு வார்த்தைகளில் அடங்காத வேகத்தில் அந்த உட்கருவைச் சுற்றுகின்றது. இந்த சுழற்சியின் வேகம்தான் அணுவுக்கு ஓடு போன்ற ஒரு வெளிப்புற (மாய) சுவர் போன்ற தோற்றத்தை அளிக்கின்றது. அதாவது ஒரு திடத் தோற்றத்தைத் தருகின்றது. இந்த மாயச் சுவருக்கும், அணுவின் உட்கருவிற்கும் இடைப்பட்ட தூரம் ஒரு வெற்றிடம். இதன் உள்ளே நுழையவும் முடியாது.

இந்த அறிவியல் கண்டுபிடிப்பைக்கொண்டு நாம் சிந்திக்கும் பொழுது அணுக்களால் அமைந்த அனைத்து (பொருட்களும்) மேலே உள்ளது போன்றதின் கூட்டு அமைப்புகள் எனக் கருத முடியும். இதே கருத்தை புவி அளவிலும், சூரிய, நட்சத்திரக் குடும்ப அளவிலும் எண்ணும் போது நம் நாயகர் அவர்கள் (இல்லதில் உள்ளதாய்) உள்ளத்திலிருந்து (இல்ஹாம்– வேத உதிப்புக்களாய்) ஞானக்கருத்தாய் அருளுவார்கள்.

**"நீயற்ற இடனின்றி– நீயே நிறைந்தாய்**
**நீதானெ னும்பிரிவி– லாதே நிறைந்தாய்**
**நிறைந்தாயே நிறைந்தாயே நீயே நிறைந்தாய்**
**இறையென்னுந் திருநாமம்– கொண்டே நிறைந்தாய்"**

.... என்ற ஏகாந்த மொழிகள் நம் கண்களை ஆனந்த நீர்க் கொண்டு மறைக்கின்றது.

**ஆம். பிரிவுகள் இல்லை என்றால் இடைவெளியும் இல்லையென்றோ! மேலே உள்ள "இல்லாமல் இருந்து சலனமற்ற ஆதி நிலை, சுத்த சூன்யமாய், சூக்குமமாய், தனித்துவமாய், ஒன்றாய், இடைவெளி என்ற ஒன்று இல்லாமல் அதாவது பிரிவுகள் இல்லாமல் வெளியாகியது."**

**எனவே வுஜூது "உள்ளாலும் வெளியாலும் அதன் தாற்பரியத்திலே அதற்கு (இப்படித்தான் எனும் சுபாவம்) பாங்கு இல்லை. அதன் பிரணவ உள்ளமை பரிசுத்த சம்பூரணமாகும்".**

**7. அல்லாஹ்வைப் பற்றி ஏன் சிந்திக்க வேண்டும்?**

படைப்புகளைச் சிந்திக்காமல் படைத்தவனை எப்படி அறிய முடியும். படைப்பினங்களை பற்றி அறிய, "பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள்- எவன் தன்னை அறிந்தானோ அவன் தன் இறைவனை அறிந்தவனாவான்" எனக் கூறுகிறார்கள். படைப்பினங்களை சிந்திக்கும் போது அது எப்படி, எதிலிருந்து படைக்கப்பட்டது என்ற விடயத்தை அறிய, அவன் தன்னை பற்றி சிந்திக்க வேண்டும்.

எவ்வாறெனில் மனிதன் தன்னை, தான் (கடந்து) வந்த பாதையை சற்று திரும்பிப் பார்க்கவேண்டும். அதாவது தான் கடந்து (வளர்ந்து) வந்த பாதையான தற்பொழுதிலிருந்து, குழந்தைப் பருவம், அதற்கு முன்பு தாயின் கருவறையில் வளர்ந்து அதற்கும் முன்பாக சத்துப்பொருளாக தந்தையிடம் இருந்தான். எதைக் கொண்டு இந்த மாற்றங்கள் ஏற்பட்டன? தான் தற்போது பெரும் சத்துக்களும், முன்பாக தாய் பெற்ற சத்துக்களும் அதற்கு முன்பாக தந்தை பெற்ற சத்துக்கள் அனைத்தும் தன்னைச் சுற்றி இருக்கும் இயற்கையிடமே. அதாவது நீர், நிலம், நெருப்பு, காற்று, ஆகாயம் ஆகிய பிரிவுகளை அற்ற (ஒன்றோடொன்று சேர்ந்த) ஐந்து பூதங்களிடமிருந்தே! இறைமறை தெளிவுறக் கூறும்...

- இறைவனிடமிருந்து வந்தோம். அவனிடமே திரும்புபவர்களாக உள்ளோம்.

அதாவது (அரு) இயற்கையிடமிருந்து (தோற்றமாய், உருவாய், உணர்வாய்) வெளிப்பட்ட மனிதன், இயற்கையைக் கொண்டே வளர்ந்து, இயற்கையை அனுபவித்து பின்பு இயற்கையோடு இயற்கையாய்க் கலந்துவிடுகிறான். இயற்கையிடம் பலவாய் பல அணுக்களாய்க் கலந்திருந்த ஒன்று (மானிடனாய்) வெளிப்பட்டு பின்பு இயற்கையோடு மீண்டும் கலந்துவிடும் (வேறு எங்கும் செல்லமுடியாதே!) இதுவே நியதி, அதாவது மாற்றம் என்ற ஒன்று மட்டும் நிலைத்து நடைபெற்றுக்கொண்டிருக்கும்.

- முந்தியவனும் அவன்தான் – கடைசியுமானவனுவும் அவன்தான், – அந்தரங்கமானவனும் அவன்தான்– வெளிரங்கமானவனும் அவன்தான்.

- பத்ருப் போரில் எதிரிகளை நீங்கள் வெட்டடவில்லை, அவர்களை அல்லாஹ் தான் வெட்டினான்.

- – நபி அவர்களே பகைவர்கள் மீது மண்ணை (எறிந்த சமயத்திலே) நீங்கள் எரியவில்லை என்று, அல்லாஹ் தான் அதை எறிந்தான் என்று வெளிப்படையாகவே சொல்கிறான்.

- ஸூரத்துல் ஹதீத் ஆயத்து: 4–ல் தொடர்ச்சியில், நீங்கள் எங்கிருந்த போதிலும் அவன் உங்களுடனே இருக்கிறான்– நீங்கள் செய்வதை அல்லாஹ் உற்று நோக்கியவனாக இருக்கின்றான்.

- நாம் மனிதனின் பிடரி நரம்பை விட மிக நெருங்கி உள்ளோம்.

- நீங்கள் எங்கு திரும்பினாலும் இறைவனின் உள்ளமை இருக்கிறது என இறைமறை அழகாய் இயம்புகிறது. வஜுஹுல்லாஹ் என்பது அல்லாஹ்வின் முகம் அல்ல, வஜுஹு என்பது உள்ளமை.

- நீங்கள் காலத்தைத் திட்டாதீர்கள், வ இன்னமா அனத்தஹ்ரு காலமே நான் தான் என்கின்றான் இறைவன்.

- பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்அவர்கள் கூறுகிறார் கள், மறுமையில் அல்லாஹ் ஒரு மனிதனிடம் கேட்பான்.

- நான் தாகமாக இருந்தேனே, என் தாகம் தீர்த்தாயா? இவன் சொல்வான் அந்த ரப்புல் ஆலமீனே உனக்கு தாகமா. ஆமாம் இன்னார் தாகமாக இருந்தார், நீ நீர் அளித்து இருந்தால் என்னைத்தான் பார்த்திருப்பாய்.

- நான் பசியாக இருந்தேனே, சாப்பாடு தரவில்லையே, இவன் சொல்வான் அந்த ரப்புல் ஆலமீனே உனக்கு எப்படி பசி, ஆமாம், இன்னார் பசியாக இருந்தார், நீ உணவு அளித்து இருந்தால் அங்கு என்னைத்தான் பார்த்திருப்பாய்.

- நான் ஆடை கேட்டேனே, தரவில்லையே, இவன் சொல்வான். அந்த ரப்புல் ஆலமீனே உனக்கு ஆடையா, ஆமாம் இன்னார் ஆடையின்றி இருந்தார் நீ ஆடை அளித்து இருந்தால் அங்கு என்னைத்தான் பார்த்திருப்பாய்.

அல்லாஹ் அனைத்தையும் படைத்து ஏழாவது வானத்தில் அர்ஷில்இருக்கிறான் என்றால், மேலுள்ள வசனங்களை வைத்து எப்படி விளங்குவது, இது போல கற்பனையில் இறையை வணங்குவதே ஷிர்க்தான்.

## 8.அவனிடத்திருந்து அனைத்தும் தோன்றும் வெளியாகும்:

வணக்கம் என்ற பெயரில் எதையோ இறை (என்பது இதுவோ அதுவோ) என்று வணங்குவதன் காரணம், மானிடன் தான் யார், தனக்கும் இறைக்கும் உள்ள தொடர்பை அறியாத காரணத்தினால் தான்.

உள்ளமையைப் பற்றி யார் கூற முடியும்? உள்ளமை மட்டும் தான் கூற வேண்டும். ஏனென்றால் வேறு (அடுத்த) ஒன்று இல்லையே. எனவே தன்னை (உண்மை) பற்றி அறிவிக்க அது மானிட ரூபத்தில் வெளியாகவேண்டும். இயற்கை பேசவேண்டும் அல்லவா!

எனவே தான் காலத்திற்கேற்ப அது நபிமார்களாகவும், ரசூல்மார்களாகவும் வெளிப்பட்டு தன்னைப்பற்றி அறிவுக்கும். அந்த தத்துவார்த்த அடிப்படையில் ஆதி கருத்தாக இருந்து அந்தம் உடலாகி ஏகனின் பரிபூரணத் தோன்றலாய் பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் தோன்றி முழுமையை பற்றி அறிவித்தார்கள்.

இந்த உள்ளமை தன்னைப் பற்றிய விளக்கத்தை அந்தந்தக் காலத்திற்கேற்ப இறையின் தோன்றுதுறையான குத்புமார்கள் மூலம் தன் உண்மைகளை வெளிப்படுத்திக்கொண்டே இருக்கும். இந்த நூற்றாண்டிலும் அந்த முழுமை தன் உள்ளமையின் உண்மை (இக்கால மானிட அறிவின் அளவிற்கு ஏற்ப) வெளிவரவேண்டும் அல்லவா?

எனவே முழுமை அதன் உண்மையை தற்போதைய காலத்தில் அறிவிக்க, அது தற்காலத்தின் தோன்றும் துறையாக, இறையின் தத்துவார்த்த வெளிப்பாடாக இருட்சுயம்பாக குத்புஸ்ஸமான் **“ஜமாலிய்யா அஸ்ஸெய்யித் கலீல் அவ்ன் மௌலானா அல் ஹஸனிய்யுல் ஹுஸைனிய்யுல் ஹாஷிமிய் நாயகம்”** என்ற திருநாமம் கொண்டு (அவதரித்து) அது அறிவிக்கின்றது.

இதற்கு ஆதாரம் **பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்** அவர்கள் அறிவித்ததுபோல், **குத்புநாயகம் அறிவித்ததுபோல், காலத்தின் குதுபுஸ்ஸமான் “ஜமாலிய்யா அஸ்ஸைய்யித் கலீல் அவ்ன் மௌலானா அல் ஹஸனிய்யுல் ஹுஸைனிய்யுல் ஹாஷிமிய் நாயகம்”** தன் வெளிப்பாட்டை....

**“இந்த நூற்றாண்டுக்கு நாமே உள்ளோம்!**

**இனி நமக்கு பின் வரும் நூற்றாண்டுகளும் நம் பார்வையிலே நடைபெறும்.**

**எம்மை இந்த ஜமானில் (காலத்தில்) அண்டியவர்கள் பெரும் பேறு பெற்றவர்கள். எம்மை விட்டுவிட்டோர் கைசேதப்பட்டவர்.**

**எம்மைப் போன்றவர் இதற்குப் பின்னால் எவரும் தோன்றமாட்டார்கள்.**

**இதுவே ஹக்கின் (இறைவனின்) பஷாரத் (நன்மாராயம்) ஆகும்."**

**இவர்கள் தாம் இந்த நூற்றாண்டுகளின் நாயகர்!**

மேற்கூறிய வார்த்தைகளைக்கொண்டு விவரித்தவை முழுமையான விளக்கங்களன்று, சற்று விளக்க முற்படும் சிற்சில குறுகிய வார்த்தைகளே! இறையில் இரண்டறக்கலந்த காலத்தின் குத்பான நம் குரு நாயகமான அவர்களிடம் இரண்டறகலந்தால் மட்டுமே **வஹ்தத்துல் வுஜூத் என்ற உள்ளமையில் மூழ்க முடியும் என்பதே நியதி. அதுவே சத்தியம்.** ஏக மயத்தில் எவன் தன்னை அழித்தானோ அவனிடத்திருந்து அனைத்தும் வெளியாகும்.

## 9. இறைஞ்சுதல்

எம்மையும் அரவணைத்து **வஹ்தத்துல் வுஜூத் உண்மையை அருள் பாலித்துக்கொண்டிருக்கும்** என் நெஞ்சம் நிறைந்த குருநாதர் அவர்களுக்கு சிரம் தாழ்த்தி செம்மலரடி பாதத்தை பணிவாய் முத்திட்டு நன்றிகளை காணிக்கையாக்கி இந்தக் கட்டுரையை சமர்ப்பிக்கின்றேன். எம் குற்றம் குறைகளை நீக்கி அருள் பாலிப்பார்களாக ஆமீன்!

**வஹ்தத்துல் வுஜூத் வாழ! ஏக இறையின் சத்தியம் எத்திசையும் பரவ!** குத்புல் அக்தாப், வழிவந்த ஞானக்கடல், வலிய்யுல் அ உளம், கௌதுஸ்ஸமான் **"அஸ்ஸைய்யித் முஹம்மது ஜமாலிய்யா மௌலானா அல் ஹஸனிய்யுல் ஹாஷிமிய்யு (ரலி)" அவர்கள் போல் "அவர்களின் திருப்பேரர் நம் உயிரினும் மேலான கண்மணி ஷெய்கு நாயகம் அவர்கள்"**

**நீடிய ஆயுளுடன்,**
**நோய் நொடியின்றி வாழ்வாங்கு வாழ,**
**நம் பேரப் பிள்ளைகளுக்கும் நேர்காட்சி வழங்க,**

**ஹக்கின் தோன்று துறையாக வாழும்** அவர்களிடமே இறைஞ்சுகிறோம்! எம் பிரார்த்தனைகளை ஏற்றுக்கொள்வார்களாக! ஆமீன்! ஆமீன்!! ஆமீன்!!!

**வாழ்க வஹ்தத்துல் வுஜூத்!**
**வாழ்க வஹ்தத்துல் வுஜூத்!!**
**வாழ்க வஹ்தத்துல் வுஜூத்!!!**
**"ஸல்லல்லாஹு அலாநபீனா வஸல்லம்**
**வஅஸ்ஹாபின் வஅஹ்லபைத்தி ரசூலில்லாஹ்".**

# மன வலிமை!

தோல்விகளைக் கடந்து வந்தால்தான், அங்கே வெற்றி நம்மை வரவேற்கக் காத்திருக்கும்...

வெற்றிக்காக உழைக்கிறோம். தோல்வி நம் முன்வந்து நிற்கும்போது துவண்டு போகிறோம். தோல்விதான் முதலில் வரும். அது உலக இயல்பு...

தோல்வியைக் கண்டு மிரண்டுபோய் வாழ்க்கையைத் தொலைத்து விடுகிறோம், ஏன் இந்த அவசரம்...!

தோல்விக்குப் பின் வெற்றி என்ற கருத்து பொய்யா! மெய்யா? என்று பொறுத்திருந்து பார்க்கலாமே...!

இன்று பல்வேறு சூழலால் பாதிக்கப்பட்ட மனிதர்கள் வாழ்க்கையில் நம்பிக்கை இழந்து காணப்படுகிறார்கள்..

எதிர்பார்த்த ஒன்று கிடைக்காவிட்டால் துயரத்தின் எல்லைக்கே போய்விடு கிறார்கள். நாம் நினைத்தால் எதுவும் நடக்கும் என்ற மெய்யியல் (தத்துவம்) அவர்களுக்குப் புரிவதில்லை.

நாம் நினைக்கும் எண்ணங்கள் உறுதியாகவும், நம்பிக்கையுடனும் இருக்க வேண்டும். அந்த நேர்மறை எண்ணங்கள் நம் சூழ்நிலைகளை மாற்றியமைத்து நம்மை வெற்றி பாதையில் அழைத்துச் செல்லும்...

நம் எண்ணம் ஒருநாள் செயலாகும் போதுதான் அந்த எண்ணத்தின் வலிமை புரியும், நாம் எதுவாக நினைக்கிறோமோ அதுவாக மாறிவிடுவோம்...

நம்மைவிட உடலில் வலிமையுள்ளது யானை..,

நம்மைவிட வேகத்தில் சிறந்தது குதிரை...,

நம்மைவிட உழைப்பில் சிறந்தது கழுதை..,

இப்படி மிருகங்கள் நம்மைவிட பலமடங்கு வலிமையாக இருந்தாலும், நாம்தான் அவைகளை அடக்கி ஆள்கிறோம், காரணம்! மனிதன் மட்டுமே மனவலிமை கொண்டவன் என்பதால்...

ஆம் நண்பர்களே...!

"நமக்கு ஏற்படுகிற சிக்கல்களும் அப்படித்தான், அதனை அடக்கியாளும் திறன் நம்மிடம் உள்ளது...!"

"சிக்கல்களை நயமாக எதிர் கொள்வோம். வெற்றிப் படியை விரைந்து அடைவோம்".

**A.Akbar Basha M.A.B.L.,**
மதுரை

# யா ஹபீபே!

யா ஹபீபே!
சிறுவயதிலேயே பெற்றோரை இழந்தீரே!
ஆதரவாயிருந்த தாத்தாவைப் பறிகொடுத்தீரே!
அருமைமனைவியாம் கதீஜாமாவை இழந்தீரே!
பாசமிகுப் பிள்ளைகளைப் பறிகொடுத்தீரே!
துணைநின்ற சிறியதந்தையை இழந்தீரே!
மார்க்கப்போரிலே அருமைத் தோழர்களைப் பறிகொடுத்தீரே!
தாயிஃப் மக்களால் கல்லடிபட்டீரே!
மக்கா வாசிகளினால் ஏசப்பட்டீரே!
அனைத்திலும் பொறுமை காத்தீரே!
எல்லாவற்றிலும் வெற்றி கண்டீரே!
எப்போதும் உம்மத்தையே நினைப்பீரே!
எங்கள் துயர் நீக்கித் தாங்கள் மகிழ்ந்தீரே!
நாளைமறுமையில் எங்கள் கண்ணீர் துடைப்பீரே!
எங்களை சுவர்க்கம் புக வைப்பீரே!
யா ஹபீபே!

## வாழவிடாது

நான் எனும் ஆணவம்
அவனா எனும் பொறாமை
எனக்கு எனும் பேராசை
இந்த மூன்று குணங்களும் மனிதனை நிம்மதியாக வாழவிடாது.

**தொடர் 40**

# மாப்பிள்ளை லெப்பை ஆலிம் (ரஹ்)

***M. சிராஜுதீன் –திருச்சி.***

அல்லாமா மாப்பிள்ளை லெப்பை ஆலிம் அவர்களின் துணைவியார் மறைந்து விட்டார்கள். காலம் உருண்டோடிவிட்டது.

தம் அருமை மனைவியார் மறைவதற்கு சுமார் இரண்டு ஆண்டுகளுக்கு முன்னரே ஆலிம் அவர்கள் தம் மனைவியின் மூத்த சகோதரியை தாம் திருமணம் செய்து கொள்வது போன்று கனவு கண்டார்கள். இதனை தமது மதனியாரிடமே கூறிவிட்டார்கள். அதற்கு அந்த மங்கை நல்லாள் என்ன இது அநியாயமாக இருக்கிறது. உங்கள் மனைவி என் தங்கை உயிரோடு இருக்கிறார். நானும் என் கணவரோடு வாழ்ந்து கொண்டிருக்கிறேன் இப்படி உளறுகிறீர்களே என்று சற்று கடிந்து கொண்டார்கள்.

சில மாதங்கள் உருண்டோடின. திடீரென்று மதனியாரின் கணவர் மவுத் ஆகி விட்டார். மீண்டும் காலம் கழிந்தது. ஆலிம் சாஹிப் அவர்களின் துணைவியார் சாரா அம்மாவும் மவுத் ஆகிவிட்டார்கள்.

இப்போது மீண்டும் ஆலிம் சாஹிப் அவர்கள் தம் மதனியாரிடம் வந்து தம்மை திருமணம் செய்து கொள்ள இப்ப தடையேதும் இல்லையே என்று சொல்ல, அவர்களும் திருமணத்திற்கு சம்மதிக்க, சாரா அம்மையாரின் மூத்த சகோதரியான உம்மு ஹானியை தாம் கனவு கண்டது போல மறுமணம் முடித்து புது வாழ்வைத் தொடங்கினார்கள்.

மாப்பிள்ளை லெப்பை ஆலிம் அவர்கள் அண்ணல் நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் மீது கொண்டுள்ள அன்பிற்கும், மரியாதைக்கும் ஒரு எல்லையே இல்லை. அதனால் அண்ணலாரின் வழித்தோன்றல்களான செய்யிதுமார்களுக்கு பெரிதும் மரியாதை செய்தார்கள். செய்யிதுமார் வீட்டு சிறு பிள்ளையானாலும் எழுந்து நன்று மரியாதை செய்வார்கள், உபசரிப்பார்கள்.

நாம் அண்ணல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை நேசிப்பது உண்மையானால் அவர்கள் வழித்தோன்றல்களையும் நாம் நேசிக்க வேண்டும். இது காலத்தின் கட்டாயம், கடமை.

ஒரு தடவை இலங்கையில் உள்ள காலி என்னும் ஊரில் வசித்து வந்த ஒருவர் ஆலிம் சாஹிப் அவர்களிடம் ஒரு புத்தகத்தை வாங்கிச் சென்றார். அதற்குரிய விலையைக் கொடுக்க மறந்து விட்டார். காலம் சென்றது. ஒருநாள் அந்த காலி வாழ் நபர் ஆலிம் சாஹிப் அவர்களை தம் வீட்டிற்கு விருந்துண்ண அழைத்தார். இவர்களும் அதை ஏற்றுக் கொண்டார்கள். காலியில் உள்ள அந்த நபரின் வீட்டினுள் நுழைந்ததும் தாங்கள் என்னிடம் வாங்கிய நூலுக்கு இன்னும் பணம் தராத நிலையில் நான் தங்கள் வீட்டில் உணவு உண்டால் இது அந்தப் பணத்திற்கான வட்டியாகிவிடுமே என்று அஞ்சுகிறேன் என்றார்கள்.

அந்த நபரோ பயந்து நடுங்கி மறந்து விட்டேன். மன்னிக்க வேண்டும், இதோ இப்போதே அந்த நூலுக்கான விலையைத் தந்து விடுகிறேன் என்று பணத்தைத் தந்து விட்டார். அதன்பின் தான் ஆலிம் சாஹிப் அவர்கள் அவர் வீட்டில் மன நிம்மதியுடன் சாப்பிட்டார்கள்.

மாப்பிள்ளை லெப்பை ஆலிம் சாஹிப் அவர்களின் ஊரில் மௌலாத் தம்பி என்ற செல்வந்தர் இருந்தார். அவர் ஒருநாள் இறந்து விட்டார். உறவினர்கள் கூடிவிட்டார்கள். ஆலிம் சாஹிப் அவர்களும் அங்கு வந்துவிட்டார்கள். அவர்களைக் கண்ட உறவினர்கள் தாங்கள் தான் இவருக்கு ஜனாஸா தொழுகையை நடத்த வேண்டும் என்று வேண்டினார். அதற்கு ஆலிம் சாஹிப் அவர்கள் இவருக்கு ஹஜ் கடமையும் தொழுகையும் 'களா' இருக்கிறது. ஹஜ்ஜுடைய கடமையை ஈடு செய்ய ஒருவரை அனுப்ப உடனே ஏற்பாடு செய்யுங்கள் என்றார்கள். உறவினர்கள் உடனே ஒரு நபரை அழைத்து அவருக்கு ஹஜ் செய்வதற்கான சகல ஏற்பாட்டையும் செய்ய வேண்டிய பணத்தைக் கொடுத்து விட்டார்கள்.

அதன்பின்னரே ஆலிம் சாஹிப் அவர்கள் அவருக்கு ஜனாஸா தொழுகையை நடத்தி துஆவும் செய்து நல்லடக்கம் செய்ய அனுமதித்தார்கள்.

## இன்னா லில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிஊன்

சங்கைமிகு செய்கு நாயகம் அவர்களின் முரீதாவும், மதுக்கூர் பாடகர் எம். தாவூது ஹக்கிய்யுல் காதிரி அவர்களின் மகளாரும், எம். முஹம்மது யாகூப் ஹக்கிய்யுல் காதிரி அவர்களின் சகோதரியும் ஏ. முஹம்மது சாலிஹ் அவர்களின் மனைவியுமாகிய எம்.ஃபாலிஹா ஹக்கிய்யுல் காதிரி அவர்கள் 23.6.2021 இறையடி சேர்ந்தார். 24.6.2021 மதுக்கூர் கப்ருஸ்தானில் நல்லடக்கம் நடைபெற்றது. அல்லாஹ் அவர்களின் பிழைகள் பொறுத்து சுவனப்பேறினை அருள்வானாக!

# ஹள்ரத் லுக்மான் அலைஹிஸ்ஸலாம்!

*நிச்சயமாக நாம் லுக்மானுக்கு தத்துவ ஞானத்தைக் கொடுத்து அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்தும்படி கூறினோம். குர்ஆன் (31 : 12)*

ஹஜ்ரத் லுக்மான் (அலை) அவர்கள் நபி இப்றாஹீம் (அலை) அவர்களின் சந்ததியில் தோன்றியவர்கள். அல்லாஹ்வால் அகமிய ஞானங்களை நன்கொடையாகப் பெற்ற மேதாவி. ஆயிரம் வருடங்கள் வரை உலகில் வாழ்ந்திருந்ததாக கூறப்படுகிறது. இவர்கள் பல நபிமார்களின் போதனைகளை வகைப்படுத்தி பின்னுள்ள மக்களுக்கு எடுத்துக் காட்டிய மஹான் என பல நூல்களில் கூறப்பட்டிருக்கிறது.

லுக்மான் (அலை) அவர்கள் தமது சிறு பிராயத்தில் ஒரு வியாபாரியின் கீழ் வேலைபார்த்து வந்தார்கள். ஒரு சமயம் எஜமான் தன் வேலைக்காரர்களிடம் தோட்டத்தில் போய் பழங்கள் பறித்து வரும்படி கட்டளையிட்டான்.

லுக்மான் (அலை) அவர்கள் மற்றவர்களைப் போல் பெருமை, கோள், பொய் இவைகள் போன்ற கெட்ட குணங்கள் இல்லாது சாந்தகுணம் உடையவர்களாக இருந்தமையால் இவர்களை குறைவாக மதித்து மிக கீழ் பதவியில் வைத்திருந்தான்.

லுக்மான் (அலை) உட்பட வேலைக்காரர்கள் தோட்டத்தில் புகுந்து பழங்களைப் பறித்தார்கள். லுக்மான் அவர்களைத் தவிர ஏனைய வேலை ஆட்கள் எல்லோரும் ஒன்று கூடி பறிக்கப்பட்ட கனிகளில் போதிய அளவு தின்று தோலையும் விதையையும் ஓரிடத்தில் குவித்து வைத்து விட்டு எஜமானனிடம் சென்று, லுக்மானே அவற்றைத் தின்றதாக புகார் செய்தனர்.

எஜமான் மிகக் கோபத்தோடு தோட்டத்தில் புகுந்து அவர்களை அழைத்து கேட்ட போது அவர்கள் தான் அந்த பழங்களில் ஒன்றேனும் தின்றது கிடையாது என்றும் மற்ற வேலையாட்கள் தின்றுவிட்டு தம் மீது பழி சுமத்துகிறார்கள் என்றும் மறுமொழி பகர்ந்தார்கள்.புத்திசாலியான எஜமான் அவர்கள் யாருடைய வார்த்தைகள் உண்மை இருக்கும் என்று சிந்தித்துக் கொண்டிருக்கும் போது லுக்மான் அவர்கள், எஜமானனை நோக்கி, தாங்கள் உண்மையைத் தெரிந்து கொள்ள வேண்டுமாயின் எங்கள் ஒவ்வொருவருக்கும் ஒரே அளவு வெந்நீரை குடிக்கச் சொல்லி பின்னர் ஒரு குறிப்பிட்ட தூரம் வரை ஓடச் செய்யுங்கள் அப்போது உண்மை வெளியாகும் என்று வேண்டினார்கள்.

எஜமான் ஆச்சரியமுற்று, அவ்வாறு சூடான தண்ணீரை ஒரே அளவு கொடுத்து ஓடச் செய்த போது எல்லோரும் வயிறு குமட்டி வாந்தி எடுத்தனர். பழங்களை புசித்தவர்கள் வாந்தியில் பழங்களின் அம்சங்கள் காணப்பட்டன. ஹஜ்ரத் லுக்மான் அவர்களின் வாந்தியில் சுத்த நீரே காணப்பட்டது.

உண்மையைத் தெரிந்து கொண்ட எஜமான் குற்றவாளிகளுக்கு தகுந்த தண்டனை கொடுத்தான். லுக்மான் அவர்களை கண்ணியத்தோடு அவர்களின் பதவியை உயர்த்தினான். அவர்களைக் கொண்டு இது போன்ற அநேக நுண்ணறிவுகளைக் கற்றுக்கொண்டான். இதுவே "பூராயம்" எனப்படும்.

ஹள்ரத் லுக்மான் (அலை) அவர்கள் தமது அருமைப் புதல்வர்கள் மாதான், அன்அம், அஷ்கம் இந்த மூவருக்கும் பல புத்திமதிகள் உபதேசங்களும் போதித்தார்கள் அவற்றுள் முக்கியமானவை.

லுக்மான் தனது மகனுக்கு நல்லுபதேசம் செய்யக் கருதிய சமயத்தில் அவரை நோக்கி "என் அருமை மைந்தனே! நீ அல்லாஹ்வுக்கு (ஒன்றையுமே) இணையாக்காதே! ஏனென்றால், இணைவைப்பது நிச்சயமாக மிகப்பெரும் அநியாயமாகும்" என்று கூறினார்.

(பின்னும் லுக்மான் தனது மகனை நோக்கி)

*என் அருமை மகனே! (நன்மையோ தீமையோ) அது ஒரு கடுகின் விதை அளவில் இருந்தாலும் சரி, அது (கரும்) பாறைகளுக்குள்ளோ அல்லது வானத்திலோ, பூமியின் ஆழத்திலோ (மறைந்து) இருந்தபோதிலும் (உங்களிடம் கணக்குக் கேட்கும்போது) நிச்சயமாக அல்லாஹ் அதையும் கொண்டு வந்து விடுவான். ஏனென்றால், நிச்சயமாக அல்லாஹ் வெகு நுட்பமான அறிவுடையவனும் (அனைத்தையும்) நன்கு தெரிந்து வைத்திருப்பவனாகவும் இருக்கிறான். (அல்குர்ஆன் 31: 13-16)*

நண்பர்களே! நமது ஆயுள் முழுவதும் நமக்கு உதவக்கூடிய நல்லுபதேசங்கள் மேற்கூறிய வசனங்களில் தெளிவாக அமைந்திருக்கின்றன. நமது ஆவி நாளுக்கு நாள் குறைந்து குறைந்து முடிவில் மரணத்தை எட்டி விடுகிறது. நன்கு சிந்தித்து மரணத்தின் தன்மையை நம் கண்முன் நிறுத்திக் கொள்வோமாக.

---

அண்ணலார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அருளினார்கள்: அல்லாஹ்வின் அடியார்களே மருத்துவம் செய்யுங்கள். எந்த நோயையும் அதற்குரிய மருந்தில்லாமல் அல்லாஹ் இறக்கவில்லை. *(திர்மிதீ)*

பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர்ரஹீம்

# முத்தான முதல் பிறந்த நாள்

**J. ஆயிஷா ஃபஸீஹா**

14.07.2021



*இரண்டு கைகளை ஏந்தி நீ*
*இறைவனிடத்தில் வேண்டுகிறாய்*
*அன்னை தந்தை உறவினர்கள்*
*அனைவரும் நலமாய் வாழ்ந்திடவே!*
*இன்னும் சங்கை கலீல் நாதர்*
*இதய ஆசி பொழிவதையும்!*
*சின்னக் குழந்தை பிரார்த்தனையை*
*சிரித்தே இறைவன் ஏற்பானே!*
*உன்னை வாழ்த்த யாம் வந்தோம்*
*உன்னால் நாங்கள் தினம்*
*மகிழ்ந்தோம்!*
*கண்ணே வாழ்க பல்லாண்டு!*
*கனிவாய் வயது பல கண்டு!*
*அல்லாஹ், அண்ணல், குருவோடு*
*அனைவரும் அன்பை அருளுகவே!*

**அத்தா– S.** ஜுபைர் **B.E.,**ஹக்கிய்யுல் காதிரிய்
**அம்மா– J.** அரஃபாத் பர்வீன் ஹக்கிய்யுல் காதிரிய்
**அக்கா– J.** உம்மு முஷ்பிகா ஹக்கிய்யுல் காதிரிய்
**அக்கா – J.** ஆயிஷா ராயிதா
**அப்பா – A.H.** ஹமருல் ஜமான் ஹக்கிய்யுல் காதிரிய்
**அப்பா – A.** சம்சுதீன் ஹக்கிய்யுல் காதிரிய்
**அத்தம்மா – S.** உம்முல் ஹஸனாத் பீவி ஹக்கிய்யுல் காதிரி
**பெரியத்தா – S.** ஷேக் தாவூத் ஹக்கிய்யுல் காதிரிய்
**பெரியத்தா – Dr. S.** நூருல் ஹக் **M.B.B.S.,DIP.**
**சின்னத்தா – Dr. S.**அம்ஜத் இப்ராஹீம் **M.B.B.S.,**

**வாழ்த்தும் உறவுகள்!**

பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர்ரஹீம்

# பிறந்த நாள் வாழ்த்து

*பாத்திமா முன்ஸிரா*



பார்த்தால் விழிகள் குளிரும்!
தொட்டுத் தூக்கிக் கொஞ்ச உள்ளம் துடிக்கும்!
மழலைப் பேச்சு கேட்கும்போது
மனதில் பூக்கள் மலரும்!
ஒவ்வொரு வீட்டுக்கும் இறைவன் அனுப்பும் மகிழ்ச்சிதான் குழந்தை.
கண்ணே! உன்னைக் கொடுத்த இறைவனுக்கு கோடி நன்றிகள் கூறி
நீ அல்லாஹ்வின் தனியன்பும்
அண்ணல் பெருமானார் அருள் பார்வையும்
குருநாதர் கலீல் நாதர் நிறை ஆசியும் பெற்று பல்லாண்டுகள் வாழ்ந்து சிறக்க..

## பிறந்த நாள்– 20.7.2021

## வாழ்த்தும் உறவுகள்

**அத்தா– M.** ஷேக் பரீது ஹக்கிய்யுல் காதிரிய்

**அம்மா– S.** சுமையா பானு ஹக்கிய்யுல் காதிரிய்

**பெரியத்தா – M.** முஹம்மது நாசர் ஹக்கிய்யுல் காதிரிய்

**பெரியம்மா – M.** நூர் நிஷா ஹக்கிய்யுல் காதிரிய்

**அத்தம்மா– M.** ரஹ்மத்துன்னிஸா ஹக்கிய்யுல் காதிரிய்

**அப்பா – M.** லியாகத் அலி ஹக்கிய்யுல் காதிரிய்

**உம்மம்மா – L.** ரஹிமான் பீவி ஹக்கிய்யுல் காதிரிய்

**பெரியத்தா – S.** ஷேக் தாவூது ஹக்கிய்யுல் காதிரிய்

**பெரியம்மா – S.** ஆயிஷா பர்வீன் ஹக்கிய்யுல் காதிரிய்

***மற்றும் அண்ணன்மார்கள், உறவினர்கள்.***

*வலிமார்களின் வரிசையில்*

## ஹள்ரத்

# நிஜாமுத்தீன் அவ்லியா (ரலி)

மஹ்பூபே சுப்ஹானி, மஃஷுக்கே ரப்பானி, கிந்தீலெ நூரானி, முஹ்யித்தீன் அப்துல் காதிர் ஜைலானி (ரலி) அவர்களின் அடக்கவிடத்தைத் தரிசித்து வருவதற்காக அதில் போர்த்துவதற்கான போர்வையுடனும் ஏராளமான காணிக்கைப் பொருள்களுடனும் ஒருவர் தம் ஊரிலிருந்து புறப்பட்டார். டில்லி வந்து சேர்ந்த அவர், அதன் அண்மையிலுள்ள காஸிப்பூரில் ஓரிரவு தங்கினார். அப்பொழுது அவர் அற்புதமான கனவொன்று கண்டார். அதில் அவர் எவருடைய அடக்கவிடத்தைத் தரிசிக்கச் செல்கிறாரோ அவர்களே கௌதுல் அஃலம் முஹ்யித்தீன் அப்துல் காதிர் ஜீலானி (ரஹ்) அவர்களே திருத்தோற்றம் வழங்கி, “நீர் எங்குச் செல்கின்றீர்?” என்று வினவினர். “பக்தாது செல்கிறேன்” என்றார் அவர். “ஏன்?” என்று வினவினார் ஆண்டகையார். “தங்களின் அடக்கவிடத்தைத் தரிசித்து அதன் மீது போர்வை போர்த்துவதற்காக” என்று மறுமொழி பகர்ந்தார் அவர். அதற்கு ஆண்டகையார், “பக்தாதோ நெடுந்தொலையில் இருக்கிறது. நீர் ஏன் அங்கு வீணே செல்கிறீர். நான் இங்குத் தானே இருக்கிறேன்” என்று நவின்றனர்.

“இங்கேயா? எங்கே, எங்கே?” என்று வியப்புடன் வினவினார் அவர்.

“நீர் மஹ்பூபெ இலாஹி நிஜாமுத்தீன் ஔலியாவைப் பற்றிக் கேள்வியுறவில்லையா? அவர் தாமே நான்” என்று கூறி மறைந்தார்கள் அவர்கள்.

திடுக்குற்று விழித்தெழுந்த அவருக்கு தாம் கண்டது, கனவா அல்லது நனவா என்று விளங்கவில்லை. எண்ணக் குழப்பத்தில் கிடந்து படுக்கையில் அங்குமிங்கும் புரண்டு கொண்டிருந்தார். “மஹ்பூபெ சுப்ஹானி மஹ்பூபெ இலாஹி இருவரும் ஒருவர் தாமா? ஆம்; ஆம் இருவரும் இறைநேசர்கள். இருவரும் இறை காதலர்கள். ஆம்; இருவரும் ஒருவரே. இருவரின் உள்ளங்களிலும் இறைவனே அரியாசனம் வகித்துள்ளான்” என்று கூறி எழுந்தார்.

மஹ்பூபெ இலாஹி, நிஜாமுத்தீன் ஔலியா அவர்களின் அடக்கவிடத்திற்கு அவருடைய கால்கள் அவரை இழுத்துச் சென்றன. அங்கு வீற்றிருந்த பெரியார்களிடம் தாம் கண்ட கனவை எடுத்துரைத்தார் அவர். அவர் தாங்களுக்கும் அதே போன்ற கனவை அன்றிரவு கண்டதாக விண்டனர்.

அதன்பின் என்ன? தாம் கொண்டு வந்தருந்த போர்வையை நிஜாமுத்தீன் அவ்லியா அவர்களின் அடக்கவிடத்தின் மீது போர்த்தினார். தாம் கொண்டு வந்திருந்த காணிக்கைகளை அங்கு வீற்றிருந்த ஏழை எளியவர்களுக்கு வாரி, வாரி வழங்கி விட்டு நிஜாமுத்தீன் ஔலியா அவர்களின் அடக்கவிடத்தின் முன் நின்று பாத்திஹா ஓதிவிட்டு வெறுங்கையுடன்– இல்லை, இல்லை இருபெரும் இறைநேசச் செல்வர்களின் ஆசிகளை அள்ளி அணைத்த வண்ணம் ஊர் மீண்டார் அவர்.

நபி திருப்பேரர் ஹுஸைன் (ரலி) அவர்களின் வழி வந்த சையிது அலீ என்ற பெரியார் தம் குடும்பத்துடன் இமாம் புகாரீ (ரஹ்) அவர்கள் பிறந்த ஊரான புகாராவை விட்டு நீங்கி லாகூரில் வந்து சில காலம் தங்கியிருந்தார். அதன்பின் பதாயூன் என்னும் ஊர் வந்து அங்குக் குடியேறி வாழ்ந்து வந்தார். இக்காலை அங்கு அக்குடும்பத்தினரே போன்று அரபு நாட்டிடலிருந்து வந்து வாழ்ந்து வந்த சையிது அரப் குடும்பத்தாருக்கும் சையிது அலீயின் குடும்பத்தாருக்கும் நட்பு ஏற்பட்டது. நட்பு, திருமண உறவாக மலர்ந்தது. சையிது அலீயின் அருமந்த மைந்தர் சையிது முஹம்மது, சையிது அரபியின் அன்பு மகள் சுலைஹாவின் தளிர்க்கரத்தைத் திருமணத்தின் மூலம் பற்றினார். அந்த இன்பத் தம்பதிகளின் குலம் தழைக்க, குடி தழைக்க ஹிஜ்ரி 634 ஆம் ஆண்டு ஸபர் மாதம் 27 ஆம் நாள் ஒடுக்கத்துப் புதன் அன்று பொழுது புலர்ந்து கொண்டிருக்கும் சமயம் ஓர் ஆண் மகவு பிறந்தது. அதற்குப் பெற்றோர்கள் அண்ணல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் முழுமுதற் பெயராகிய முஹம்மது என்னும் அழகுத் திருநாமம் சூட்டி அருமை பெருமையாக வளர்த்து வந்தார்கள்.

குழந்தை ஐந்து வயதை எய்திய பொழுது தந்தை விண்ணுலக ஏகிவிட்டார். அதன் காரணமாக அநாதையாக விடப்பட்ட அவரை அன்னை சுலைகாவே தந்தையோடு கல்வி போம் என்ற வாக்கை மாற்றியமைக்கும் முறையில் ஷைகு ஜலாலுத்தீன் தப்ரேஸி (ரஹ்) அவர்களின் ஆன்மீக மாணவரான மௌலானா அலாவுத்தீன் உசூலி என்னும் பெரியாரிடம் அழைத்துச் சென்று கல்வி போதிக்க ஏற்பாடு செய்தார்.

மார்க்க சட்டதிட்டங்கள் அடங்கிய தொடக்க நூலையும் குதூரி என்ற நூலையும் சிறுவருக்குக் கற்றுக் கொடுத்தபின் மௌலானா அலாவுத்தீன், சுலைகா அம்மையாரை நோக்கி ஒரு தலைப்பாகை வாங்கி வருமாறு கூறினார். வறுமையில் வாடிய அவ்வம்மையார் சிறிது பஞ்சு வாங்கி, நூல் நூற்று அதைக் கொண்டு துணி நெய்து அத்துணியை மௌலானாவிடம் கொடுத்தனர்.

இதன்பின் ஒருநாள் மௌலானா அவர்கள் சிறுவருக்கு பட்டமளிப்பு விழா நடத்தினர். அதில் பல பெரியார்கள் கலந்து கொண்டனர். அப்பொழுது மௌலானா அலாவுத்தீன் உசூலி தம்முடைய பீர் பாயான காஜா அலீ அவர்களின் கையில் ஒரு தலைப்பாகையைக் கொடுத்து அதனைச் சிறுவரின் தலைமீது சூட்டுமாறு வேண்டி கொண்டார்கள். அவ்விதமே செய்தார்கள் அவர்கள். அப்பொழுது அங்கு வருகை தந்திருந்த பெரியோர்களில் சிலர் "இன்ஷா அல்லாஹ்! இவர் இறைவனுக்குத் தவிர வேறு எவருக்கும் தலை சாய்த்து நடக்கமாட்டார். அத்தகு மாண்பு இவரின் முகத்தில் மின்னுகிறது" என்று நன்மாராயம் மொழிந்தனர்.

ஆம்; அச்சிறுவரின் முகத்தில் அத்தகு மாண்பு சிறு வயதிலேயே மின்னியதுதான். எனினும் அவரின் இல்லத்தில் அடிக்கடி வறுமை கோர நர்த்தனம் ஆடியது. இல்லத்தில் உண்ண உணவில்லாத போழ்து அன்னை தம் அருமை மகனை நோக்கி, "மகனே! நாம் இன்று அல்லாஹ்வுடைய விருந்தினர்" என்று கூறுவர். இச்செய்தி சிறுவருக்குத் துன்பத்தைத் தருவதற்கு மாறாக இன்பத்தையே நல்கியது. தாம் அன்று மாபெரும் இறைவனின் விருந்தினராக இருக்கும் மகத்தான பேறு பெற்றோம் என்ற பெருமித உணர்வால் சிறுவர் மகிழ்வு கூர்வார்.

ஒரு தடவை இத்தகு சூழலில் ஒருவர் அவரின் அன்னையிடம் சிறிது தானியம் கொண்டு வந்து கொடுத்தார். அது அவ்விருவருக்கும் சில நாட்களுக்குப் போதுமானதாக இருந்தது. அதுமுடிந்ததும் அன்னை தம் மகனை நோக்கி முன்புபோல் மகனே! நாம் இன்று அல்லாஹ்வின் விருந்தினர் என்று கூறியபொழுது அது சிறுவரின் செவியில் தேனினும் இனிமையாகப் பாய்ந்தது. அப்பொழுது தாம் அடையும் இன்பத்தை வர்ணிக்க வார்த்தைகள் இல்லை என்று முஹம்மது என்னும் இயற்பெயர் பெற்ற காஜா நிஜாமுத்தீன் ஒளலியா பிற்காலத்தில் கூறினார்கள்.

காஜா நிஜாமுத்தீன் பதினாறு வயதை எய்திய பொழுது அன்னை சுலைகா தம் அருமை மகனை உடன் அழைத்துக் கொண்டு டில்லி வந்து சேர்ந்தார். அப்பொழுது சுல்தான் நாஸிருத்தீன் மஹ்மூது டில்லி அரியணையில் வீற்றிருந்து செங்கோலோச்சிக் கொண்டிருந்தார். அவரின் அருகில் அமைச்சராக வீற்றிருந்தார் கியாஸுத்தீன் பல்பன். அச்சமயம் அரசாங்கத்தில் பெரும்பதவி வகித்து வந்து மௌலானா ஷம்சுத்தீன் குவாரிஸ்மி அக்கால வழக்கப்படி தம் இல்லத்தில் மாணவர்களுக்கு மார்க்கக் கல்வியும் போதித்து வந்தார். அவரின் மாண்பினைப் பற்றிக் கேள்வியுற்ற இளவல் காஜா நிஜாமுத்தீனும் அவரின் இல்லம் சென்று தம்மை அவரின் மாணவர் குழாத்தில் இணைத்துக் கொள்ளுமாறு வேண்டியபொழுது அவரைச் சற்றுநேரம் ஏற இறங்கப் பார்த்த மௌலானா ஷம்சுத்தீன் குவாரிஸ்மி அதற்கு ஒப்பினார்.

அக்காலத்தில் மாபெரும் அறிவுமேதையாக விளங்கிய அவருக்கு அரசாங்கத்தால் ஷம்சுல் முல்க் என்ற பட்டம் வழங்கப்பட்டிருந்தது. அவர் தமக்குக் கிடைத்த பட்டத்திற்கேற்ப பண்பாட்டின் சிகரமாகவும் விளங்கினார். அவரின் மாணவர்களில் எவரேனும் சிறிது தாமதமாகவரின், "ஏன் நீர் பாடத்தின் துவக்கத்திலேயே வரவில்லை? நான் ஏதேனும் தவறு செய்துவிட்டேனோ? ஏதேனும் தவறு செய்திருப்பின் எடுத்துக் கூறின் திருத்திக் கொள்கிறேன்" என்று கூறுவார்.

காஜா நிஜாமுத்தீன் மீது அவருக்கு தனிப்பட்ட அன்பு ஏற்பட்டது. அவர் எப்பொழுதாவது சிறிது தாமதித்தவரின், "காஜா! உம் உண்ணமும் கருத்தும் சிறந்தவைதாம். எனினும் என்பாலும் சிறிது கவனம் செலுத்தும். என்னை மறந்து விடாதீர்" என்று கூறுவார் அவர். என்னே கண்டிப்பதிலும் ஓர் இனிமை! கண்டிப்பதிலும் ஒரு பண்பாடு!!

காஜா நிஜாமுத்தீன் கல்வியில் பெரிதும் அக்கரை செலுத்திப்படித்தனர். அதன் காரணமாக எல்லாவற்றிலும் எல்லாரிலும் முதல்வராக விளங்கினர். பேச்சுப் போட்டியில் அவர்களுக்கு நிகர் அவர்களாகவே விளங்கினர். எதிரியை ஒரு நொடியில் வாக்குவாதத்தில் வென்று வாகை சூடி வந்ததன் காரணமாக அவர்களுக்கு 'பஹ்ஹாஸ்' (வாத வல்லார்) என்ற பட்டமும் 'மஹ்ஃபிலுஸ் ஸிக்கன்' (வாதத்தை உடைத்தெறிபவர்) என்ற பட்டமும் வழங்கப் பெற்றன.

அவர்களுக்கு இயற்கையிலேயே அபார நினைவாற்றல் ஏற்பட்டிருந்தது. அதன் காரணமாக அவர்கள் 'மகாமத்தெ ஹரீரி' என்ற கவிதை நூலின் நாற்பது இயல்களை விரைவில் மனனமாக்கி விட்டனர். அதன்பின்தான் அவர்களுக்கு அவர்கள் செய்த தவறு தெரியவந்தது. வீணே அதனை மனனம் செய்துவிட்டதற்காகப் பெரிதும் வருந்திய அவர்கள், அதற்குப் பிராயச்சித்தம் செய்யும் முறையில் ஹதீதுத் தொகுப்பு நூலாகிய 'மஷாரிக்குல் அன்வார்' என்பதனை மனனம் செய்து சிறிது ஆறுதல் பெற்றனர்.

இதன்பின் மஷாரிக்குல் அன்வாரைத் தொகுத்த அல்லாமா ஹஸன் இப்னு முஹம்மது அஸ்ஸகானீ (ரஹ்) அவர்களின் மாணவர் ஷைகு கமாலுத்தீன் ஸாஹித் (ரஹ்) அவர்களின் புகழ் அவர்களின் செவிப்போந்த பொழுது அவர்களிடம் கல்வி கற்க விழைந்தனர் இளவல். சுல்தான் பல்பன், அவர்களைத் தம் அரண்மனைக்கு அழைத்து இமாம் பதவியை வழங்கியபொழுது, என்னுடைய தனிப்பட்ட உடைமையாகத் தொழுகை ஒன்றையே நான் என்னிடம் வைத்துள்ளேன். தயைகூர்ந்து அதனை என்னிடமிருந்து பறித்துக்கொள்ளவேண்டாம் என்று பதிலிறுத்தனர் அப்பெருந்தகை என்று அவர்கள் கேள்வியுற்ற பொழுது அவர்களேதாம் விரும்பும் ஆசான் எனக்கூறி அவர்களை அணுகி, அவர்களிடம்

ஹதீதுக்கலையைப் பயின்றனர். பின்னர் ஹிதாயா என்ற புகழ் பெற்ற ஹனஃபி மத்ஹபின் நூலை எழுதிய அல்லாமா புர்ஹானுத்தீன் அல் மர்கினியானி (ரஹ்) அவர்களிடம் ஃபிக்ஹ் கலையைக் கற்கும் பேறுபெற்றதுடன் அவர்களிடமே மஷாரிக்குல் அன்வாரைப் பிறருக்குப் படித்துக் கொடுக்க சான்றிதழும் பெற்றார்கள்.

*(வரலாறு வளரும்)*

# ஏற்றம் காண் ஷவ்வால் பிறை...

பேராசிரியர். சிராஜுதீன் ஹக்கிய்யுல் காதிரிய் (துபை)

*ஏற்றம்காண் ஷவ்வால் பிறை*
*பதினாறாம் திங்கள் காலை  கலீல் நாதர் பிறந்தனர் !*
*ஏந்தல் யாஸீன் அன்பு மகவாய்  ஏற்றம்காண் ஷவ்வால் பிறை*
*பதினாறாம் திங்கள் காலை  கலீல் நாதர் பிறந்தனர் !*

*தந்தை யாஸீன் அன்புப் பார்வை  சீர்மையின் கீழ் சீர் கல்வி*
*பயின்றே உலகை ஆளும்  சீலர் கலீல் நாதர் வளர்ந்தனர் !*

*ஈழ நாட்டில் இளமைக்காலம்  பசுமையான நினைவன்றோ*
*அன்னை சஹர்வான் ஆதரவில்  கலீல் நாதர் வளர்ந்தனர் !*

*கல்வி கேள்வியில் சிறந்தார்கள்  கவிகள் பலவும் இயற்றினர்*
*நூற்கள் யாவும் ஞானமாக  கலீல் நாதர் சிறந்தனர் !*

*தந்தை வழியும் தாய் வழியும்  பெருமைமிக்க செய்யிதாம்*
*காலத்தின் குத்பாய் உயர்ந்த  கலீல் நாதர் வளர்ந்தனர் !*

*நல்லோர் யாவரும் போற்றி நிற்க  வல்லோன் அருளாய் நின்றனர்*
*கண்டுகொண்டவர் ஜெயமடைய  கலீல் நாதர் அருளினர் !*

*நாடுகள் பல பதம் பதித்து  ஆற்றும் பணிகள் செவ்வையே*
*உண்மை காக்கும் உத்தமராய்  கலீல் நாதர் வென்றனர் !*

*புகழுக்குரியோர் தாங்களன்றோ புகழப்பட்டதும் தாங்களே*
*கண்குளிர்ந்த ஜோதியாக  கலீல் நாதர் வந்தனர் !*

*இணையென்னும் பாவம் போக்கி  இறை பொருந்த வாழவே*
*செம்மையான  ஞானம் தந்த  கலீல் நாதர் வாழ்கவே !*

*இல்லல்லாஹ்  எனும்  இறைஞானம்  வஹ்தத்துல் வுஜூத் ஆகுமே*
*வழிதவறா வாழ்வு தந்த கலீல் நாதர் வாழ்கவே !*

# 7 சங்கைமிகு செய்கு நாயகம் அவர்களின்

# 85 ஆம் உதய நாள் விழா

## காணொளிக் கூடல் உரைகள்!

*உரைகள் தொகுத்தவர்: அன்ஸாரி -இப்னு கிப்லா ஹள்ரத் - திருச்சி.*

***இந்திய ஏகத்துவ மெய்ஞ்ஞான சபையின் பொதுச் செயலாளர் கலீபா. ஆலிம் புலவர். ஹுஸைன் முஹம்மது மன்பஈ ஹக்கிய்யுல் காதிரிய் அவர்கள் ஆற்றிய உரையிலிருந்து...***

இந்த நூற்றாண்டின் அதிசயமாக வாழக்கூடிய சங்கைக்குரிய ஷைகு நாயகமவர்களே, தங்களின் திருப்பாதங்களைப் பணிந்து தொடங்குகின்றேன்.

திருக்குடும்பத்தார்களே... விழாவுக்குத் தலைமை தாங்கியிருக்கும் மவுலானா அவர்களே, கலீபாப் பெருமக்களே, சபை நிர்வாகிகளே, ஏகத்துவ மெய்ஞ்ஞான சபையின் உலகளாவிய அத்தனை சபையின் உறுப்பினர்களே... முரீதுகளே... முரீதாக்களே... உங்கள் அனைவருக்கும் இந்த ஈதுப் பெருநாளில் அஸ்ஸலாமு அலைக்கும் என்னும் ஸலாத்தைக் காணிக்கையாக்குகிறேன்.

**தந்தை நாயகம் தந்த தமரத்**

நாம் கொண்டாடும் இந்தப் புனிதமான விழாவினை, நமது தரீகத்துல் ஹக்கிய்யதுல் காதிரிய்யாவின் மூலவராகிய சங்கைக்குரிய ஜமாலிய்யா அஸ்ஸையிது யாஸீன் மௌலானா ரலியல்லாஹு அன்ஹு அவர்கள், நமது சங்கைக்குரிய ஷைகு நாயகமவர்கள் பிறந்த அன்றே கொண்டாடி விட்டார்கள்.

அவர்கள், நமது சங்கைக்குரிய ஷைகு நாயகமவர்கள் பிறந்தபோது,

**பி அவ்னி இலாஹி கத் தவல்லத தம்ரதீ**
**புனய்யீ வரைஹானீ வ குர்ரதி முக்லதீ**

– என்பதாக, தந்தை நாயகம் ஜமாலிய்யா அஸ்ஸையிது யாஸீன் மௌலானா ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் பாடினார்கள்.

இறைவனின் உதவியைக் கொண்டு, நிச்சயமாக எனது இதயக்கனி, எனது விதையாக அவதரித்தார்கள் என்று பாடியுள்ளார்கள். **தமரத்** என்றால் கனி, கனிக்குள் விதை இருக்கின்றது. ஆகவே, நான் கனிக்குள் விதையாக உதித்திருக்கின்றேன். எனது தன்மை, எனது அசல், இந்த எனது மகனிலே இருக்கின்றது என்பதை தம்ரதீ என்பதாகக் குறிப்பிடுகிறார்கள்.

**புனய்யீ** – எனது மகனார், **ரைஹானீ** – எனது தோட்டம், எனது மலர்ச்சோலை, **வ குர்ரதீ முக்லதீ** – எனது கண்குளிர்ச்சி என்பதாகவெல்லாம் நமது சங்கைக்குரிய ஷைகு நாயகமவர்களின் எதிர்காலத்தைப்பற்றி அவர்கள் பிறந்தபோதே எழுதி, நமக்குச் சொல்லித் தந்திருக்கிறார்கள் நமது தந்தை நாயகம் ஜமாலிய்யா அஸ்ஸையிது யாஸீன் நாயகம் ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள்.

**மண்ணுக்கு மகிழ்ச்சி**

பூமி அன்று மகிழ்ந்தது. பூத்துப் பூத்துச் சிரித்தது. வானம் கேள்வி கேட்டது, மகிழ்ந்து பூமி உரைத்தது... அப்படியென்ன பூமிக்கு மகிழ்ச்சி?!

என்னில் நடக்க மன்னர் ஒருவர் இலங்கை பிறந்து விட்டார். நமது சங்கைக்குரிய ஷைகு நாயகமவர்கள் பிறந்துவிட்டார்கள். இனி ஞானம் வாழும். அதுவே உலகாளும் என்றது.

அதை நாம் கண்கூடாகப் பார்த்துக் கொண்டிருக்கின்றோம். ஒரு மஜ்லிஸிலே, ஒரு கூட்டத்திலே பேச வேண்டும் என்று சொன்னால், நாம் எதிரே இருப்பவர்களைப் பார்த்துப் பேசுவோம். ஆனால், இப்போது நான் யாரைப் பார்த்துப் பேசுவது? எனது கண்களிலே, இந்தத் திரைக்குப் பின்னால், குளோபல் – இந்த உலகமே தெரிகின்றது. இங்கு ஞானத்தைச் சுமக்கக்கூடிய, ஞானத்தை வளர்க்கக்கூடிய அறிவாளிகள், விஞ்ஞானிகள், படித்தவர்கள், பண்புள்ளவர்கள் உலகமெல்லா மிருந்து இந்த நிகழ்ச்சியைப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். இத்தகையை சமுதாயத்தை நமது சங்கைக்குரிய ஷைகு நாயகமவர்கள் உற்பத்தி செய்திருக்கிறார்கள்.

**புதுமனிதனாக...**

ஒரு காலத்திலே வானொலியிலே உரையாற்றிக் கொண்டிருந்த காலம்போய், இன்று காணொளியிலே நாமெல்லாம் ஒன்றுகூடி நமது அறிவியலின் தந்தையாகிய, ஞானத்தின் தந்தையாகிய சங்கைக்குரிய ஷைகு நாயகமவர்களின் பிறந்த தினத்தைக் கொண்டாடிக் கொண்டிருக்கின்றோம்.

இந்த விழாவின் பயன் என்னவென்றால், இந்த விழா முடிந்த பின்னால் பார்த்தால், நாம் ஒரு புது மனிதனாக உருவெடுத்திருப்போம். நம்மிலே ஒரு புத்துணர்ச்சி பொங்கும். பொதுவாக, யாரையும் பார்த்தாலும் ஊக்கமோ புத்துணர்ச்சியோ தோன்றாது. ஆனால், சங்கைக்குரிய ஷைகு நாயகமவர்களிடம் ஓர் ஐந்து நிமிடம் பேசிவிட்டு வந்துவிட்டால் நாம் ஒரு புதுமனிதனாக உருவெடுத்து விடுவோம். அவர்கள் பேசும்போது நமது செவிகள் கேட்கின்ற சத்தமே நம்மைப் புது மனிதனாக உருவாக்கும். நமது கவலைகளையெல்லாம் நீக்கி விடும். அதுபோல,

இன்று அவர்களைப் பற்றிய சிந்தனையால், இந்த விழாவுக்குப் பின்னால்.... இந்த நிகழ்ச்சி முடிந்ததற்குப்பின்னால் நம்மை புது மனிதனாக உருவெடுத்து விடுவோம் என்பதை நாம் நினைவிற் கொள்வோம்.

## குதுபிய்யத் என்னும் ஆடை

நமது சங்கைக்குரிய ஷைகு நாயகமவர்கள் பூரணமானவர்கள். அவர்கள் சொல்கின்றார்கள், பூரணம் நானே. நான் பூரணமாக இருக்கின்றேன் என்று அவர்கள் நமக்குச் சொல்கின்றார்கள். எந்தவகையிலே அவர்கள் பூரணமானவர்கள்? சங்கைமிகு மஸ்ஊது மௌலானா அவர்கள், சங்கைக்குரிய வாப்பா நாயகமவர்கள் அசலான புனிதமான பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் திருக்குடும்பத்தின் வித்தாக – விதையாக இருக்கிறார்கள் என்று கூறினார்கள். ஜனாப். யூசுப் ஹக்கிய்யுல் காதிரிய் அண்ணன் அவர்கள் தம் உரையில் கூறியதுபோன்று, மக்கள் அவர்களைப் பார்த்து பேண்ட் போட்டிருக்கிறார்கள், கலர் கலராக சட்டை போட்டிருக்கிறார்கள் என்று பேசுகிறார்கள். சங்கைக்குரிய ஷைகு நாயகமவர்கள் தங்கள் பட்டோலையில் அருளுகின்றார்கள். நாங்கள் குத்பிய்யத் என்னும் ஆடையை அணிந்திருக்கின் றோம். அந்த உடையே மேலானது என்று. எனவே, சங்கைக்குரிய ஷைகு நாயகமவர்கள் பூரணத்திலும் பூரணமானவர்கள்.

## திறமைகளின் திருவடிவம்

சங்கைக்குரிய ஷைகு நாயகமவர்களைப் பற்றி நான் சிந்தித்துப் பார்த்தபோது, எத்தனை திறமை, எத்தனை ஆற்றல் எங்கள் ஷைகிடத்தில்... அவை அத்தனையும் சொல்லிடப்போமோ அடியேன் சிறு கவியில்! என வர்ணிக்கத்தோன்றுகிறது. இயற்கையாக இறைவன் அமைத்த கொடைகள் ஒருபுறத்தில். தாங்களாக வளர்த்துக் கொண்ட தனித்திறமைகள் மறு புறத்தில்.சங்கைக்குரிய ஷைகு நாயகமவர்களுக்குப் பெருமை என்னவென்றால், அவர்கள் குதுபாக இருப்பது தான் பெருமை. அதற்குமேல் ஒரு பெருமையே தேவையில்லை. இயற்கையாக இறைவன் அமைத்த கொடைகள் ஒருபுறத்தில்... தாம் சுயமாக முயன்று வளர்த்த திறமை மலைபோல் மறுபுறத்தில்... மலைபோன்று அவர்கள் வளர்த்துக் கொண்ட திறமைகள் மறுபுறத்தில்... ஞானம் ஒன்றே போதும், அவர்களின் அருமையை உணர்வதற்கு... சங்கைக்குரிய ஷைகு நாயகமவர்களின் அருமையை உணர்வதற்கு அவர்கள் சொல்லக்கூடிய ஞானம் போதும். வேறெங்கேயும் அந்த ஞானத்தைப் பெற முடியாது. ஆயினும் இவை இருப்பது, ஷைகை நானே இரசிப்பதற்கு... சங்கைக்குரிய ஷைகு நாயகமவர்களை நாம் இரசிப்பதற்குத் தான் நாம் அவர்களிடத்தில் இத்தனை திறமைகள் இருப்பதை நாம் பார்க்கின்றோம்.

## பரிபூரணத் தோன்றல்

கமாலிய்யத்... அந்தரங்கத்தில் அவர்கள் பூரணமானவர்கள். அந்தரங்கத்தில் அவர்களது பூரணத்தை அளப்பதற்கு நாம் யாராலும் முடியாது சங்கைக்குரிய வாப்பா நாயகமவர்கள் சொல்கிறார்கள், எங்களது அருமை–பெருமைகளை, எங்களது சிர்ரை – இரகசியத்தை, எங்களது குடும்பத்தார், வீட்டில் எங்களோடு இருப்பவர்கள் கூட உணரமுடியாது. சக ஆசிரியர்களும் புரிந்து கொள்ள முடியாது என்பதாகச் சொல்கின்றார்கள். அவர்களுக்கும் நமக்கும் கோடி மைல் வித்தியாசம் இருக்கின்றது என்று சொல்வார்கள். எனவே, அவர்களது அந்தரங்கம் மிக அழகானது, நம்மால் அளக்க முடியாதது. அவர்களது வெளிப்புறத்தை எடுத்துப் பார்த்தால், பன்முக ஆற்றல் கொண்டவர்கள்.

## இலக்கிய வேந்தர்

அவர்கள், பன்னூலாசிரியர். ஏறத்தாழ 26 நூல்கள் எழுதியிருக்கிறார்கள். தற்போது உமர் (ரலி) புராணம் நிறைவாயிருக்கின்றது. பாலையும் நிறைவு பெற்றுவிட்டது. அடுத்து அவர்கள் முஃபஸ்ஸிராக இருக்கின்றார்கள். திருக்குர்ஆனுக்கு தர்ஜுமா செய்கின்றார்கள். விரிவுரை எழுதுகின்றவர்கள். இன்னொரு புறம் பார்த்தால், மொழிபெயர்ப்பாளர். ரிஸாலத்துல் கௌதிய்யாவுக் கும் துஹ்ஃபதுல் முர்ஸலாவுக்கும் மொழிபெயர்ப்புச் செய்துள்ளார்கள். இந்த நூல்களில் இடம்பெற்றுள்ள கலைச் சொற்களுக்கு அர்த்தம் புரிந்து கொள்வதே ஆலிம்களுக்கும் அறபு அறிஞர்களுக்கும் கூட முடியாத விஷயம். ஆனால், அப்படிப்பட்ட அரிய நூல்களையெல்லாம் நமக்கு அழகாக மொழிபெயர்த்துத் தந்துள்ளார்கள். அவர்கள் முத்தமிழ்ப் பண்டிதர். வித்துவான். அவர்களின் தமிழுக்கு அவர்களே நிகர். அவர்கள் அறபுக் கவிஞர். தமிழ்ப்புலவர். பதிப்பாசிரியர். ஓவியர். சங்கைக்குரிய வாப்பா நாயகமவர்களின் ஓவியத் திறமையை, அன்னவர்களின் மகானந்தலங்கார மாலை நூலில் பார்க்கலாம். அழகான ஓவியங்களை வரைந்திருக்கிறார்கள். இன்னும் சொல்லப் போனால், சங்கைக்குரிய ஷைகு நாயகமவர்களிடம், ஒரு சீடர் கேட்டார், வாப்பா! டிரைவிங் லைசென்ஸ் மாதிரி, என் பெயரிட்டு வேண்டும் என்று கேட்டார். சங்கைக்குரிய வாப்பா நாயகமவர்கள், டிரைவிங் லைசென்ஸ் எப்படிக் கொடுப்பார்களோ அதேமாதிரி வளையம் வளையமாய், எழுதி வரைந்து கொடுத்தார்கள். சின்னச் சின்ன எழுத்துகளாக, அதை எழுதுவது மிகக் கஷ்டம். எனினும், மிக நேர்த்தியாக அதைச் செய்து கொடுத்தார்கள். சங்கைக்குரிய வாப்பா நாயகமவர்கள், தனித்தன்மை வித்தகர். இலக்கிய மாமேதை. இலக்கிய மாமேரு. சங்கைக்குரிய வாப்பா நாயகமவர்களின் குறிஞ்சிச் சுவை நூலை வாசித்துப் பார்த்தால், தமிழ் அறிந்தவர்கள் அப்படியே சொக்கிப் போவார்கள்.

**பல்கலை வித்தகர்**

சங்கைக்குரிய வாப்பா நாயகமவர்கள், ஆசிரியர். சிறப்பாகப் பாடம் நடத்துகின்ற ஆசிரியர். ஸ்தாபகர். மறைஞானப்பேழை, மதுரஸதுல் ஹஸனைன் ஃபீ ஜாமிஆ யாஸீன் அறபுக்கல்லூரி, அவ்னிய்யா பப்ளிக் ஸ்கூல் என அத்தனைக்கும் ஸ்தாபகராகத் திகழ்கிறார்கள். இவை எல்லாவற்றிற்கும் மேலாக காமிலான ஷைகு. இது தான் சங்கைக்குரிய வாப்பா நாயகமவர்களின் உச்சகட்டமான நிலை. சங்கைக்குரிய ஷைகு நாயகமவர்கள் நிறைவான, பூரணமான ஷைகு ஆவார்கள். அவர்களிடம் வந்து விட்டால், வேறொருவரிடம் ஞானத்தைத் தேடிப் போகவே வேண்டியதில்லை.

**தலைசிறந்த தந்தை**

பல்லாயிரக்கணக்கான முரீதுகளுக்கு ஆத்துமத் தந்தையாக விளங்குகின்றார்கள். குறிப்பாக, பெண்களுக்கு நாமே தந்தையாக இருக்கின்றோம் என்பதாகச் சொல்கின்றார்கள். சங்கைக்குரிய வாப்பா நாயகமவர்கள் குறிப்பிட்டுச் சொல்வார்கள், பெண்கள் கனிவு காட்டிக் கவனிக்கப்பட வேண்டியவர்கள். பெண்கள், அன்பு காட்டப்பட வேண்டியவர்கள் என்பதாகவும் அவர்களுக்கு நாமே தந்தையாக இருக்கின்றோம் என்பதாகவும் சங்கைக்குரிய வாப்பா நாயகமவர்கள் அருள்வார்கள். ஒரு தந்தையுடைய ஸ்தானத்தில் இருந்துதான் பெண்களுடைய விஷயத்தில் முரீதுகளுக்கு – ஆண்களுக்கு அறிவுரை சொல்வார்கள். கருணை வெள்ளம் அவர்கள். எனக்கு முன்னால் பேசிய கலீபா சகாபுத்தீன் ஹக்கிய்யுல் காதிரிய் அவர்கள் சொன்னதைப்போல, சங்கைக்குரிய வாப்பா நாயகமவர்களின் கருணை உள்ளத்தை, நாம் ஒவ்வொருவரும் நம் வாழ்வில் அனுபவித்துள்ளோம்.

**இரங்கியருளும் இரத்தினம்**

நமது மதுரஸாவில் ஷிகாபுதீன் ஆலிம் என்றொரு உஸ்தாது பணியாற்றினார்கள். அவர் தமது மகளாரின் திருமணத்திற்காக மதுரஸா நிர்வாகிகளிடம் உதவித் தொகை கோரினார். நிர்வாகத்துடைய அதிகார வரம்புக்குட்பட்டு, ஐயாயிரம் ரூபாய் அல்லது பத்தாயிரம் ரூபாய் கொடுக்கலாம் என முடிவெடுக்கப்பட்டிருந்தது. அந்தச் சமயத்தில், சங்கைக்குரிய வாப்பா நாயகமவர்கள் இந்தியாவுக்கு விஜயம் செய்திருந்தார்கள். மதுரஸா உஸ்தாது ஷிகாபுதீன் ஆலிம் அவர்கள், சங்கைக்குரிய வாப்பா நாயகமவர்களைச் சந்தித்து நேரடியாக தமது மகள் திருமணத்திற்கு உதவி வேண்டினார். சங்கைக்குரிய ஷைகு நாயகமவர்களும் அப்போது அருகிலிருந்த நிர்வாகத்தினரிடம், இவருக்கு உதவித் தொகை கொடுங்கள் என்று கட்டளையிட்டார்கள். நிர்வாகத்தினரும், சங்கைக்குரிய ஷைகு நாயகமவர்களிடமே, எவ்வளவு கொடுக்கலாம் வாப்பா? என்பதாக அனுமதி கேட்க, சங்கைக்குரிய வாப்பா நாயகமவர்களோ ஐம்பதாயிரம் ரூபாய் கொடுக்கச்

சொன்னார்கள். பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பாக, ஐம்பதாயிரம் ரூபாய் மிகப் பெரிய தொகை. கொடுப்பதிலே நிறைவாகக் கொடுப்பவர்கள் நமது சங்கைக்குரிய வாப்பா நாயகமவர்கள் என்பதற்கு இந்தச் சம்பவம் ஓர் உதாரணம். இதைப் போல, பலபேர் அவர்களின் கருணை உள்ளத்தை அனுபவித்துள்ளார்கள்.

**உயிர் காக்கும் உத்தமர்**

மேலும், சங்கைக்குரிய ஷைகு நாயகமவர்கள் உயிர் காக்கும் உத்தமர். இன்று, முரீதீன்கள் அத்தனை பேருமே சங்கைக்குரிய ஷைகு நாயகமவர்களின் துஆவில் தாம் உயிர் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். வருடத்திற்கு ஒருமுறை அவர்களைப் பார்த்துவிட்டால், நமது ஆயுள் நீளமாகி விடும். அவர்கள் நம்மை ஒருமுறை பார்த்துவிட்டால், நமது நோய்களெல்லாம் நீங்கிவிடுகின்றன. சகலத்துக்கும் சங்கைக்குரிய வாப்பா நாயகமவர்கள் தாம். அந்தரங்கம் அவர்கள்தாம். வெளிரங்கமும் அவர்கள் தாம். அவர்கள், விதிகளை மாற்றக் கூடியவர்கள். எத்தனையோ பேருடைய விதிகளை மாற்றியுள்ளார்கள் என்பதை ஒவ்வொரு குடும்பமும் அனுபவித்துள்ளது. குடும்பத்திலுள்ள ஒவ்வொரு முரீதீன்களுக்கும் தெரியும்.

**வளங்கள் வழங்கும் வரசீலர்**

வளங்கள் (பரக்கத்) அள்ளித் தரும் பரம்பொருளாக அவர்கள் இருக்கிறார்கள். சங்கைக்குரிய வாப்பா நாயகமவர்களை நம்பி விட்டால், வளங்களை அள்ளி அள்ளி வழங்கக் கூடியவர்கள். ஒவ்வொரு குடும்பத்திலும் சங்கைக்குரிய வாப்பா நாயகமவர்களின் திருப்பாதம் பட்டதனால், எவ்வளவு பெரிய மாற்றங்கள் – அவரவர் வாழ்க்கையில் ஏற்பட்டிருக்கிறது என்பனவற்றையெல்லாம் நாம் அனைவருமே அறிந்திருக்கின்றோம்.

இத்தகைய சிறப்புகளுக்கெல்லாம் உரிய சங்கைக்குரிய ஷைகு நாயகமவர்களின் பிறந்த நாளிலே... அவர்களுக்கு ஓர் ஆசை இருக்கின்றது. ஆம் .அவர்களுக்கும் ஓர் ஆசை இருக்கின்றது.

**ஒன்றாவதே ஓர் ஆசை**

அவர்கள் பாடலில் சொல்கின்றார்கள்: ஒன்றாவதே யோராசை. அவர்கள் சொல்லக்கூடிய ஞானம்; அதாவது, நபிமார்கள் வந்து உலகத்தில் என்ன செய்தார்கள் என்றால், அல்லாஹ் ஒன்று என்பதைச் சொன்னார்கள். ஆனால், வலிமார்கள் வந்து உலகத்தில் என்ன சொல்கிறார்கள் என்றால், நபிமார்கள் சொன்னதையே கொஞ்சம் விரிவாக்கி, அல்லாஹ் ஒன்று; அந்த ஒன்று நீ தான் என்று சொன்னார்கள். சங்கைக்குரிய இமாம் அலி ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் முதற்கொண்டு, கௌது நாயகம் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் முதற்கொண்டு, இப்னு அறபி ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் முதற்கொண்டு... இப்படி வந்த இமாம்கள், குதுபுமார்கள், வலிமார்கள் எல்லாம் அல்லாஹ் ஒன்று என்று நபிமார்கள் சொன்ன விஷயத்தையே கூறி, அந்த ஹக்கே நீ,

தான் என்றும் பகர்ந்தார்கள். இந்த ஞானத்தை வலியுறுத்திச் சொன்னவர்கள் தாம் வலிமார்கள்.

**உயர்ஞானம் பெறுவோம்...**

அந்த விதத்திலே சங்கைக்குரிய ஷைகு நாயமவர்கள் வலியுறுத்துகின்ற வஹ்ததுல் வுஜூது என்னும் உயர்ஞானத்தைப் பெற்றுக் கொள்ளுங்கள் என்றே வலியுறுத்து கிறார்கள். முரீதுகளிடத்திலே அவர்களுக்குள்ள ஒரேயொரு தேவையும் ஆசையும் இதுதான். உங்களுடைய தேவைகளையும், ஆசைகளையும் எம்மிடத்தில் சொல்கிறீர்கள். எம்முடைய ஆசையை உங்களிடத்தில் சொல்கிறேன் என்பதுபோல்... அந்தப் பாடலில் சொல்கிறார்கள், ஒன்றாவதே ஓர் ஆசை. நித்திய பரமதில் சரணாகாதா. நித்திய பரமதில் நீ சரணாக மாட்டாயா? எம்மிடம் வந்து கரம் பற்றியுள்ளாயே?! நீ உன்னை ஒன்றென்று பார்க்க மாட்டாயா? அந்த ஹக் நீ தான் என்பதை உணரமாட்டாயா? என்று ஒன்றாவதே ஓர் ஆசை என்று, தங்களது ஆசையைக் கூறுகின்றார்கள். நின்னை அனைத்திலாக்கு, நீயற்றதில்லை நோக்கு – உன்னை எல்லாவற்றிலும் ஆக்கி, உன்னைத் தவிர ஒன்றுமில்லை என்று காண் என்று பாடுகிறார்கள்.

**சமரசமில்லை சன்மார்க்கம்**

எனக்குத் தெரிந்தவரையில், சங்கைக்குரிய வாப்பா நாயகமவர்களின் உபதேசங்களில், மனிதா நூலில், அமுத மொழிகளிலே, இந்த விஷயத்திலே – நீ ஹக் தான் என்னும் விஷயத்திலே அவர்கள் உறுதியாக இருப்பதிலே, காம்ப்ரமைஸ் (சமரசம்) செய்து கொள்வதே இல்லை. இதை மீண்டும் மீண்டும் வலியுறுத்திக் கொண்டே இருக்கிறார்கள். ஏனென்றால், இதை மனிதனுடைய மனம் சாதாரணமாக ஏற்றுக் கொள்ளாது. அல்லாஹ்வை வணங்குவான், ஏற்றுக் கொள்வான், எல்லாவற்றையும் பார் என்றால் பார்ப்பான், ஆனால், தான் தான் அந்த ஹக்காக இருக்கிறேன் என்பதை சங்கைக்குரிய வாப்பா நாயகமவர்கள் சொல்கிறார்கள். ஆனால், உடனே ஏற்க மனிதனின் மனம் மறுக்கும். அதனால் தான் அதை அழுத்தமாக வலியுறுத்தி சங்கைக்குரிய ஷைகு நாயகமவர்கள் சொல்கிறார்கள்.

**சபதமேற்போம்...**

எனவே, சங்கைக்குரிய வாப்பா நாயகமவர்களின் ஆசையாகிய, நாமே அந்த ஹக்காக இருக்கின்றோம் – ஹக்கின் வெளிப்பாடாக இருக்கின்றோம் என்பதை உணர்ந்து கொள்வதே, இந்தப் பிறந்தநாள் விழாவிலே நாம் எடுக்கக்கூடிய சபதம். சங்கைக்குரிய வாப்பா நாயமவர்களின் ஆசையை நாம் நிறைவேற்றுபவர்களாக, எல்லாம் வல்ல வாப்பா நாயகமவர்களே நம்மை ஆக்கித் தரவேண்டும் என்று பிரார்த்தித்து, வேண்டுகோளை முன் வைத்து எனது உரையை நிறைவு செய்கின்றேன்.

# கதையல்ல... நிஜம்...!

செங்கிஸ்கான் என்ற மன்னன் செல்லப் பிராணியாக ஒரு பருந்தை வளர்த்து வந்தான். கொடுங்கோலான அவன் அந்தப் பருந்திடம் மிகுதியான பாசம் வைத்திருந்தான். பருந்தும் அவன் மேல் உயிரையே வைத்திருந்தது.

செங்கிஸ்கான் எங்கே சென்றாலும் அந்தப் பருந்தையும் அழைத்துச் செல்வான். மற்ற நாடுகள் மேல் தாக்குதல் நடத்தி அவற்றைத் தன் ஆட்சியின் கீழ் கொண்டு வருவதிலேயே தன் வாழ்நாளைக் கழித்தான்.

பருந்தும் அவனுடனேயே எல்லா நாடுகளுக்கும் பயணப்பட்டது.

மன்னனின் பருந்து என்பதால் சுற்றியிருந்தவர்கள் பருந்தை மரியாதையுடன் பார்த்துக் கொண்டார்கள்.

அரண்மனையில் ராஜ போக வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருந்தது அந்தப் பருந்து.

ஒருநாள் செங்கிஸ்கான் தன் நண்பர்களுடன் வேட்டைக்குப் புறப்பட்டான்.

நண்பர்கள் அனைவரும் கத்தி, ஈட்டி, அம்பு என்ற பலவகையான ஆயுதங்களை ஏந்தி வந்தார்கள். செங்கிஸ்கான் தன் செல்லப் பருந்தை மட்டுமே கொண்டு வந்தான்.

என் பருந்து நூறு வாட்களுக்குச் சமம் என்று நண்பர்களிடம் கர்வத்துடன் சொன்னான்.

அவன் குதிரையில் பயணித்தபோது பருந்து கம்பீரமாக அவன் முன்னால், குதிரை மேல் அமர்ந்து வந்தது.

பருந்தின் தலை மேல் வெள்ளியால் செய்த அழகான குல்லா ஒன்றைப் போட்டிருந்தான் செங்கிஸ்கான், தன் அடையாளத்துக்காக...!

அந்தக் குல்லா தலையில் இருக்கும் வரை பருந்து அவனை விட்டு விலகிச் செல்லாது.

அவனுக்கு ஏதாவது தேவை என்றால், அந்த வெள்ளிக் குல்லாவைக் கையில் எடுத்துக் கொண்டு பருந்தின் காதில் ஆணையிடுவான்.

பருந்தும் பறந்து சென்று அவனது ஆணையை நிறைவேற்றி வைக்கும்.

அன்று வேட்டையாட விலங்குகள் எங்கேயிருக்கின்றன என்று தெரியவில்லை.

செங்கிஸ்கான் தன் பருந்தின் தலையில் இருந்த வெள்ளிக்குல்லாவைக் கழற்றி அதன் காதில் ஏதோ சொன்னான்.

பருந்து பறந்து சென்று விலங்குகள் இருக்கும் இடத்தை காண்பித்தது.

செங்கிஸ்கானும் நண்பர்களும் களைத்து போகும்வரை வேட்டையாடினார்கள்.

விலங்குகளைத் தேடிக் கொண்டு ஓடியதில் ஒரு கட்டத்தில் செங்கிஸ்கான், தன் நண்பர்களிடமிருந்து விலகி வந்துவிட்டான்.

மேலே பறந்தபடி வேட்டைக்கு உதவி செய்து கொண்டிருந்த பருந்து மட்டுமே அவனுடன் இருந்தது. செங்கிஸ்கானுக்கு கடுமையான தாகம் எடுத்தது.

நீரைத் தேடி அங்கும் இங்கும் அலைந்து கொண்டிருந்தான். ஒரு இடத்தில் பாறையில் இருந்து நீர் வழிந்து கொண்டிருந்தது.

பருந்தின் தலையில் இருந்த வெள்ளிக் குல்லாவைக் கழற்றி அதில் நீரைப் பிடித்தான்.

அவன் நீரைப் பருகும் நேரத்தில் பருந்து பறந்து வந்து அந்தத் தண்ணீரைத் தட்டிவிட்டது.

தாகத்தில் தவித்துக் கொண்டிருந்த மன்னனுக்கு முதலில் பருந்தின் செயல் வியப்பாகத்தான் இருந்தது.

தன் கையில் அமர்ந்திருந்த பருந்தை மென்மையாகத் தடவிக் கொடுத்துவிட்டு மீண்டும் தண்ணீரைப் பிடித்தான்.

குல்லாவில் நீர் நிரம்பி மன்னன் பருகும் சமயத்தில் பருந்து பறந்து வந்து மீண்டும் தண்ணீரைத் தட்டிவிட்டது.

இப்போது மன்னனுக்குக் கடுங்கோபம். இதே செயலை என் அமைச்சர் யாராவது செய்திருந்தால் அவரது தலையைக் கொய்திருப்பேன். நீ என் செல்லப் பிராணி என்பதால் உன்னை மன்னித்து விடுகிறேன்.

இனி ஒரு முறை இப்படிச் செய்தால் விளைவுகளுக்கு நான் பொறுப்பில்லை என்று கடிந்தபடி செங்கிஸ்கான் தன் போர் வாளை உறையிலிருந்து எடுத்து கையில்பிடித்துக் கொண்டான். ஓரக்கண்ணால் பார்த்தபடி மீண்டும் தண்ணீரைப் பிடித்தான்.

இந்த முறை தண்ணீரைத் தட்டிவிட்டு விளையாடினாயோ, நீ செத்தாய்.. என்று மனதிற்குள் கறுவிக் கொண்டான்.

இம்முறை வெள்ளிக்குல்லாவில் தண்ணீர் நிரம்ப நேரமானது. ஏனெனில் ஊற்று மிகவும் மெதுவாக வந்து கொண்டிருந்தது.

பருந்தைப் பார்த்தபடி நீரைக் குடிக்கப் போனான் மன்னன். அது மன்னனை நோக்கிப் பறந்து வந்தது. வாளை வீசினான் அந்தக் கொடுங்கோலன்.

பருந்து வெட்டுண்டது, என்றாலும் அந்த உயிர் துறக்கும் வேளையிலும், மன்னன் கையில் இருந்த நீரின் மேல் விழுந்து அதைக் குடிக்காமல் செய்து விட்டது.

பருந்து இறந்துவிட்டது. மன்னனின் கோபம் அடங்கவில்லை, தாகம் அதைவிட அதிகமாக இருந்தது, நீரின் வரத்து படிப்படியாகக் குறைந்து முற்றிலுமாக நின்று விட்டது.

இந்த நீர் எங்கிருந்து வருகிறது என்று கண்டுபிடித்து அங்கே போய் தாகசாந்தி செய்து கொள்ளலாம் எனறு புறப்பட்டான்.

பாறையில் சிரமப்பட்டு ஏறிப் பார்த்தான். அங்கே ஒரு இடத்தில் நிறைய நீர் தேங்கி இருந்தது.

அதிலிருந்துதான் நீர் கசிந்து கொண்டிருந்தது என்பதைத் தெரிந்து கொண்டான். தேங்கியிருக்கும் அந்த நீரைக் கையால் அள்ளி அருந்தலாம் என்று நினைத்துக் கீழே குனிந்தான்.

அந்த நீர்த் தேக்கத்தில் கொடிய விஷமுள்ள கருநாகம் ஒன்று செத்துக் கிடந்தது. அந்த நீரிலேயே அது பல நாட்களாகக் கிடந்திருக்க வேண்டும்.

மன்னன் அந்த நீரை அருந்தியிருந்தால், சந்தேகமில்லாமல் உடனே செத்திருப்பான்.

அதனால்தான் பருந்து அவனை அந்த நீரை அருந்தவிடவில்லை.

உலகின் மிகப் பெரிய கொடுங்கோலனான செங்கிஸ்கான், இறந்து கிடந்த பருந்தின் அருகில் அமர்ந்து அழுதான்.

நாடு திரும்பியதும் தனது தலைநகரத்தில் தங்கத்திலான பருந்தின் சிலை செய்து வைத்தான். அதன் ஒரு சிறகில் கீழ்க்கண்ட பொருள் விளக்கும் வாசகங்களை எழுதச் செய்தான்.

கோபத்தில் செய்யப்படும் எல்லாச் செயல்களும் துயரத்தையே தருகின்றன.

மற்றொரு சிறகில் அவன் எழுதச் சொன்ன வாசகம் இன்னும் மகத்தானது.

"உன்னுடைய உண்மையான நண்பன். உனக்கு பிடிக்காத செயல்களைச் செய்தாலும், அதை உன் நன்மைக்காகவே செய்கிறான் என்பதை நினைவில் கொள்..."

செங்கிஸ்கான் கதை இத்துடன் முடிகிறது.

---

- **பெறுவதெல்லாம் வெற்றியுமல்ல!**
- **இழப்பதெல்லாம் தோல்வியுமல்ல!**
- **எல்லாம் காலத்தின் கட்டாயம் என கடந்து செல்லவேண்டும்!**
- **கண்ணீர் சிந்த வைக்கும் உறவை தூரமாக வை!**
- **கண்ணீர் வராமல் பார்த்துக் கொள்ளும் உறவை இதயத்தில் வை!**
- **கவலைகளை எல்லோரிடமும் கொட்டிக் குவித்துவிட வேண்டாம். அதன் மீது ஏறி நின்று வேடிக்கை பார்ப்பவர்கள்தாம் அதிகம்.**

---

## இன்னா லில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிஊன்



மறைஞானப்பேழை எழுத்தாளரும், இஸ்லாமிய இலக்கியக்கழக செயற்குழு உறுப்பினரும், 60 க்கும் மேற்பட்ட இஸ்லாமியத் தமிழ் இலக்கியங்களைப் படைத்தவரும், சங்கைமிகு நபிபேரர்கள் சம்பைப்பட்டினம் அஸ்ஸையித் ஜமாலிய்யா மௌலானா,(ரலி) சங்கைமிகு குத்புல் ஃபரீத் ஜமாலிய்யா அஸ்ஸையித் யாஸீன் மௌலானா, (ரலி) சங்கைமிகு குத்புஸ்ஸமான் ஜமாலிய்யா அஸ்ஸையித் கலீல் அவ்ன் மௌலனா அல்ஹஸனிய்யுல் ஹுஸைனிய்யுல் ஹாஷிமிய் ஆகிய முப்பெரும் நாதாக்களின் பேரில் மும்மணி மாலை எழுதியவரும், ஆஷிகே ரஸுூலுமான பன்னூலாசிரியர், சிறந்த நாவலர், **அதிரை அருட்கவி அல்ஹாஜ். எம்.முஹம்மது தாஹா மதனி அவர்கள்** 27.6.2021 அன்று வயது மூப்பின் காரணமாக இறையடிசேர்ந்தார்கள். அல்லாஹ் அன்னாரின் பிழைகள் பொறுத்து, அண்ணலார் அவரைத் தங்கள் பொன்னடியில் இணைத்து, வலிமார்கள் தங்கள் அருள்நிழலில் அரவணைத்துக் காப்பார்களாக எனப் பிரார்த்திக்கின்றோம்.

# பூரணத்தின் அகராதி!

*அமீர் அலி ஹக்கிய்யுல் காதிரிய் - மதுக்கூர். (கேம்ப் - துபை)*

இசை: வாராயோ வெண்ணிலாவே கேளாயோ எந்தன் கதையே....

**இறையோனிறைந்த சோலை**
**மறைதானணிந்த மாலை**

**மக்காவில் பிறந்த நீதி மதீனாவில் மிளிருஞ்சோதி**
**மறைந்தே மறையொளி வீசும் பூரணத்தின் அகராதி! (இறையோன்)**

**அதியொளிர் மதிமுகங்கண்டு அனுபவத்திடும் நிலையொன்று**
**பதிநாதர் சோதி கொண்டு பாரது மிளிர்ந்ததென்றும்!**
**(இறையோன்)**

**ஒன்றொளி னின்றுதிர்த்தனராய் நின்றனைத்திலு னிலைத்தனராம்**
**அன்றென ஒன்று மிலாது வென்றனரே மஹ்மூதே!**
**(இறையோன்)**

**சமத்துவம் பகர்ந்தார் ஃவுடி சத்தியநதி புரண்டோடி**
**மகத்துவம் மயங்கிடும் வாழ்வே ஜகத்தினை ஆளும் ரஸூலே!**
**(இறையோன்)**

**தோழமை ஏழ்மையோடு நாள் பொழுதும் வலியோடு**
**கடந்தன எழிருமேனி மறந்திடல் மாண்பதுவாமோ!**
**(இறையோன்)**

**இருகரை நடுவினிலாறு ஓடும் திசையறியாது**
**கரை கரம் பிடித்திட்ட போது கடலன்றி அடைவது ஏது!**
**(இறையோன்)**

---

நிருபர்: தமிழருவி மணியன் உங்களைத் தொடர்ந்து திட்டிக் கொண்டிருக்கின்றாரே ! ?

கலைஞர் : 2006 ல் நான்தான் வரைபடத் திட்டக்குழுத் உறுப்பினராக நியமித்தேன்..

திட்டக்குழு என்பதை தவறாக புரிந்து கொண்டார் போலிருக்கிறது....

*தொடர் ( 26)*

# இனிக்கும் இறைமொழி

**இறையருட் கவிமணி கா. அப்துல் கஃபூர் எம்.ஏ.**

## உளூ என்னும் அங்க சுத்தி

"விசுவாசிகளே! நீங்கள் தொழுகைக்குச் சென்றால் (அதற்கு முன்னர்) உங்கள் முகங்களையும், முழங்கைகள் வரையில் உங்கள் இரு கைகளையும், கழுவிக்கொள்ளுங்கள். அன்றி, உங்கள் இரு பாதங்களையும் கழுவிக் கொள்ளுங்கள். அன்றி, (உங்கள் கையில் நீரைத்தொட்டு) உங்கள் தலையைத் தடவி) மஸஹு செய்து கொள்ளுங்கள். நீங்கள் முழுக்குடையவர்களாக இருந்தால் (உடல் முழுவதையும் கழுவிப்) பரிசுத்த மாக்கிக்கொள்ளுங்கள். அன்றி, நீங்கள் நோயாளிகளாக இருந்தோ, அல்லது பயணத்திலிருந்தோ அல்லது உங்களில் எவரும் மலஜல உபாதைக்குச் சென்று வந்திருந்தோ அல்லது பெண்களைத் தீண்டிச் சேர்ந்திருந்தோ (தொழுகையின் நேரம் வந்து உங்களைச் சுத்தி செய்து கொள்வதற்கு வேண்டிய) நீரை நீங்கள் பெறாவிடில், பரிசுத்தமான மண்ணை (உங்கள் கைகளால் தொட்டு அதனை)க் கொண்டு, உங்கள் முகங்களையும் கைகளையும் துடைத்து "தயம்மும்" செய்து கொள்ளுங்கள். உங்களுக்குக் கஷ்டத்தைத் தர அல்லாஹ் விரும்பவில்லை. எனினும் அவன் உங்களைப் பரிசுத்தமாக்கி வைக்கவும், தன் அருட்கொடைகளை உங்கள் மீது பூரணமாக்கி வைக்கவுமே விரும்புகிறான். (இதற்காக) நீங்கள் அவனுக்கு நன்றி செலுத்துவீர்களாக." (5: 6)

தொழுகைக்கு முன்னால் தொழுவோர் அனைவரும் செய்து கொள்ளவேண்டிய உளூ என்னும் அங்க சுத்தி பற்றி, இவ்விறை வசனத்தின் முற்பகுதி மொழிகின்றது "உளூ" என்னும் சொல் "வளஅ" (தூய்மையாக இருத்தல்) என்னும் வினையடியாகத் தோன்றியதாகும். உளாஅ, உளூவு என்னும் சொற்களுக்குப் பிரகாசம் என்னும் பொருளும் உண்டு. "என் உம்மத்துகள் அவர்களின் உளூவின் அடையாளத்தால், "உர்ருல் முஹஜ்ஜலீன்" (முகம் கை கால் பிரகாசமுடையோர்) என்பதாக அழைக்கப்படுவர். உங்களில் எவரேனும் தன் பிரகாசத்தை அதிகரிக்க நாடினால் அவ்வாறு உளூச் செய்து கொள்க" என்பதாக அண்ணலார் அவர்கள் அருளியுள்ளார்கள். உளூ மறுமையில் சுவனவாதிகளைக் கண்டறியும் சின்னமாக

விளங்கும். எப்போதும் உளூவுடன் இருத்தல் ஏற்றமானதாகும். ஹலரத் பிலால் (ரலி) அவர்கள் எப்போதும் உளூவுடன் இருந்துவந்த காரணத்தால், நாயகக் கோமான் அவர்களின் கனவில் ஒருபோது தோன்றும் வாய்ப்பினைப் பெற்றார்கள். மாமேதை மஹ்பூபு ஸுபுஹானி அவர்கள், நாற்பது ஆண்டுகளாக இஷாவுக்குச் செய்த உளூவுடனே ஸுப்ஹூத் தொழுகையை நிறைவேற்றி வந்ததாக அறிகின்றோம். நோய் அல்லது கடும் குளிரால் தொல்லைகள் ஏற்படும் நேரத்திலும் பூரணமாக உளூச் செய்வதும், பள்ளி வாயிலுக்குள் அதிகமாகச் செல்வதும், தொழுகைக்குப்பின் மறு தொழுகையை எதிர்பார்த்திருப்பதும் இஸ்லாத்தின் எல்லையைக் காவல்புரிவதாகும் என ஏந்தல் நபியவர்கள் எடுத்துரைத்துள்ளார்கள்.

"உளூச் செய்வதன் விவரம் என்ன?" என்பதாக ஹள்ரத் அபூஉமாமதல் பாஹிலீ (ரலி) அவர்கள் ஒருபோது அருமை நாயகமவர்களிடம் வினவினார்கள். அதற்கு அண்ணலார் அவர்கள், உளூவாவது, நிச்சயமாக நீர் உளூச் செய்ய விரும்பினால், முதலில் உமது இரு கைகளையும் மணிக்கட்டு வரை நன்றாகக் கழுவவும், பின்னர் உமது முகத்தைக் கழுவவும். பின்னர் உமது இரண்டு கைகளையும் முழங்கைகள் உட்படக் கழுவவும். பின்னர் உமது தலையை மஸஹுச் செய்யவும். பின்னர் உமது இரு கால்களையும் கழுவினால் நீர் உமது தாய் வயிற்றிலிருந்து பிறந்தநாளில் இருந்த விதமாகத் தூய்மை பெற்றுவிடுவீர் என்பதாக விடையளித்தார்கள்.

பற்களைச் சுத்தம் செய்தல் உளூவின் ஒரு பகுதியாக அமையும். பற்களையும் பாதுகாப்பதன் அவசியத்தை இன்று மருத்துவர்கள் மிகவும் வலியுறுத்தி வருகின்றனர். உணவருந்துவதற்கு முன்னும் பின்னும், பல் துலக்குவதற்கும் நாள்தோறும் ஈறுகளை நன்றாகத் தேய்த்து வருவதற்கும் நாள்தோறும் பரிந்துரைக்கின்றனர். அரசாங்கங்களே பள்ளிச் சிறுவர்களுக்குப் பற்பொடி வழங்குவதற்கும் பொதுமக்களின் பல்லைப் பிடித்துச் சோதனை செய்வதற்கும் துணிந்துள்ளன. இறைவன் மனிதனை மேலான வடிவத்தில் படைத்து, கண், காது ஆகிய உறுப்புகளை ஈரிரண்டாகச் சமைத்து, உடலின் நுழைவு வாயிலாகிய வாய்க்குள்ளே ஒரு நாவையும், அதனைப் பாதுகாப்பதற்காக ஈரிதழ்களையும், எண்ணான்கு வெள்ளை முத்து வீரர்களையும் அமைத்துள்ளான். வாயிலுக்குள் செல்வோரை நன்றாகச் சோதனையிட்டனுப்புவதும். முரடர்களை நன்றாக மென்று அடக்கிப் பதப்படுத்தி அனுப்புவதும், பற்களாகிய வீரர்களின் பணியாகும். ஆகவே பற்களின் அதிபதிகள், அவ்வீரர்களை அடிக்கடி கவனித்து முழுக்காட்டிக் காப்பாற்ற வேண்டியது அவசியமாகும். அவ்வாறு செய்வதற்குத் தவறினால் வீரர்கள் கோழைகளாகிப் பிணிவாய்ப்பட்டு விரைவில் விடைபெற்றுச் சென்றுவிடுவர்.

நல வாழ்வுக்கு வழி காட்டும் நபி வழியில், பற்களின் பாதுகாப்பிற்காக அடிக்கடி மிஸ்வாக்குச் செய்து கொள்வதற்கு ஏவப்பட்டுள்ளது. உஹா மரத்தின் வேரினால் பல் துலக்குவது மிகச் சிறந்ததாகும். பற்களின் இடைகளிலிருக்கும் சிறு பொருட்களையும் கிருமிகளையும் அது அகற்றிவிடும். மிஸ்வாக்கு ஈறுகளை உறுதிப்படுத்துவதுடன், குரலினிமையையும் கூரிய பார்வையையும், முகப் பொலிவையும், மகிழ்ச்சியையும் அளிக்கிறது; சிந்திக்கும் ஆற்றலை வளர்க்கிறது, பல் வலியையும், தலை வலியையும் நீக்கிவிடுகிறது; நரையையும், முதுமையையும் தாமதப்படுத்துகிறது. தொழுகைக்காக உளூச் செய்யும் போதும், நள்ளிரவில் தஹஜ்ஜுத் தொழுகைக்காக எழுந்தவுடனும், உணவருந்திய பின்னரும், அண்ணலார் அவர்கள் மிஸ்வாக் செய்து வந்துள்ளார்கள். தங்கள் உம்மத்துகளுக்கு ஒரு சுமையாகப் போய்விடும் என்பதற்கு அஞ்சியே மிஸ்வாக்குச் செய்வதை ஒரு கட்டாயக் கடமையாக்காமல் விட்டதாக அடிக்கடிக் கூறியுள்ளார்கள். அவர்களின் இறுதி நாட்களில் உயிர் பிரிவதற்குச் சற்று முன்னர் கூட மிஸ்வாக்குச் செய்வதில் கருத்துச் செலுத்தியுள்ளார்கள். "உங்கள் வாய்கள் குருஆனின் வழிகளாகும். ஆகவே மிஸ்வாக்குச் செய்வதன் மூலம் அதனை மணமாக்கிவையுங்கள்" என்பது அவர்களின் அருள் மொழியாகும். "உங்கள் பற்களைக் கொண்டே உங்கள் புதை குழிகளைத் தேடிக் கொள்ளாதீர்கள்" என்பது அறிஞர் லுக்மானுல் ஹக்கீம் அவர்களின் அரியதோர் கருத்துரையாகும். உளூவின்போது நாளொன்றுக்கு ஐவேளை மிஸ்வாக்குச் செய்வோனைக் கண்டு பல் நோய்கள் வெருண்டோடும்.

இறை வசனத்தில் முகம் கழுவுதல் உளூவின் முதல் நிலையாகக் கூறப்பட்டிருந்தாலும், அம்முதல் நிலைக்கு ஆயத்தும் செய்யும் வகையில், கைகளை மணிக்கட்டு வரையில், கழுவுவதும் நாசிக்கு நீர் செலுத்தி வாய் கொப்புளிப்பதும் அவசிய மெனும் கருத்து, அதனுள் அடங்கியிருப்பதாக அறிஞர்கள் கருதுவர். வாழ்வில் ஓடியாடிப் பணியாற்றுவோரும், இரவு நேரத்தில் தூங்கி யெழுந்தோறும், தங்கள் கைகள் எப்பொருட்களில்– எவ்விடங்களில்– பட்டன என்பதைப் பார்த்துக் கொண்டிரார். ஆகவே உளூச் செய்யத் தொடங்கும்போது, அழுக்குகளை அகற்றுவதற்காகக் கைகளை மணிக்கட்டு வரையில் கழுவ வேண்டுவது அவசியமாகும். அப்போது நீரின் இயல்பும் நன்றாகத் தெரிந்து விடும். தூசுகள் படிவதற்கு வாய்ப்பான உறுப்புகளுள் மூக்கு ஒன்றாகும். அத்தூசுகள் சுவாசக் குழாய்க்கும் நுரையீரலுக்கும் சென்று விட்டால் கொடிய பிணிகள் பல தோன்றுவதற்கு ஏதுவாகும். ஆகவே உளூவின்போது மூக்கினுள் நீரைச் செலுத்திச் சுத்தப் படுத்துவதும் வாய் கொப்புளிப்பதும் நல வாழ்வுக்கு நற்றுணை புரிகின்றன.

எண் சாண் உடம்பினுள் ஒரு சாண் அளவுள்ள முகத்திலேதான், உடம்பின் முக்கிய நிர்வாகிகளான கண், மூக்கு, செவி, வாய் ஆகியோர் அமர்ந்து ஆட்சி செலுத்துகின்றனர். நினைவு இழந்திருக்கும் ஒருவன் முகத்தில் தண்ணீர் தெளிக்கும்போது அவன் நினைவு திரும்புவதைப் பார்க்கின்றோம். வெப்பத்தினாலும் களைப்பினாலும் அலுத்துப்போயிருக்கும் ஒருவன், முகம் கழுவியதும் அயர்ச்சி நீங்கி மலர்ச்சி பெறுகின்றான். வியர்வை வடிந்து அழுக்குப் படிந்து கழுவாத முகத்துடன் இருக்கு மொருவன் சோர்வடைந்து கவர்ச்சியிழந்து காணப்படு கின்றான். நாள்தோறும் பன்முறை நல்ல நிர்ணயத்துடன் முகம் கழுவும்போது புதுப் பொலிவும் சுறுசுறுப்பும் நிலைத்து நிற்கிறது.

முகத்திற்கு அணியாக இலங்கும் கண்கள் ஆத்மாவின் பலகணிகளாகும். அவற்றின் அருமையை இறைவனே புருவங்களாகிய மேற்கோடிட்டு விளக்கியுள்ளான். சூத்திரப் பாவையாகிய மானிடனின் நேத்திரங்களில் அமைந்துள்ள நீடொளியின் தத்துவங்களை ஞானமாமேதைகள் நன்கு விளக்கியுள்ளனர். அத்தகைய செல்வக்கண்ணை நாற்தோறும் பன்முறை கழுவிப் பாதுகாத்தல் கண்னோய்களைத் தடுப்பது மட்டுமின்றிப் பார்வையையும் கூர்மையாக்குகிறது. நெற்றி குடியிருந்து மோவாயின்கீழ் வரையிலும், ஒரு காதிலிருந்து மறுகாது வரையிலும் முகத்தைப் பன்முறை கழுவுவோர் பல்வேறு பாதுகாப்பையும் பெறுகின்றனர்.

முகத்தைக் கழுவி முடித்த பின்னர் முழங்கையின் மூட்டுக்கள் உட்பட வலக்கையை மூன்று முறையும், பின்னர் இடக்கையை மூன்று முறையும் கழுவுதல் வேண்டும். அதற்கப்பால் நீரில் நனைத்த ஈரக் கையினால் தலையைத் தடவுதல் வேண்டும். மனிதனை மனிதனாக்கும் மூளையைப் பாதுகாக்கும் மண்டையின் மீது ஈரக் கையினால் தலையைத் தடவும்போது தலையில் படிந்துள்ள தூசுகள் அகன்று ஒருவகை அமைதி தோன்றுவது இயல்பேயாகும். இமாம் ஷாபி அவர்களின் கருத்துப்படி ஒரு சில முடிகள் நனைந்தால் கூடத் தொழுகை கூடுமாயினும், தலை முழுதும் தடவுவது சிறப்பாகவும் பயன் மிக்கதாகவும் அமையும், வாரிய தலைமுடி குலைந்து விடுமோ என்னும் அச்சத்திற்கு ஆளாதல் கூடாது. ஆட்காட்டி விரல்களைக் காதுகளுக்கு உள்ளும், பெருவிரல்களைக் காதுக்கு வெளியும் வைத்து, தண்ணீரில் நனைந்த ஈரக் கையினால் காதுகளைத் துடைக்கும்போது அதன் மீதுள்ள அழுக்குகள் அகன்று விடுகின்றன. இறுதியில், கரண்டையுட்பட முதலில் வலது காலையும் பின்னர் இடது காலையும் விரல்களின் இடுக்கெல்லாம் நனையும்படிக் கோதிக் கழுவுவதால், நடமாட்டத்தின் காரணமாகக் கால்களில் படிந்துள்ள அழுக்குகள் அறவே அகன்று விடுகின்றன.

*(இனிமை பரவும்)*

# வஹ்ஹாபிகள் என்னும்
# வணங்கா முடிகள்!

**த**ர்ஹாக்களில் அடங்கி இருப்பவர்கள் நல்லோர்கள், வலிமார்கள் என்று நீங்க எப்படி சாட்சி சொல்கிறீர்கள், நம்புகிறீர்கள்...? அது அல்லாஹ்வுக்கும் அவருக்கும் மட்டுமே தெரிந்த மறைவான விஷயமாயிற்றே என்று வஹ்ஹாபிகள் சிலர் வியாக்கியானம் பேசுவதைக் கேட்டிருப்போம்....!

அவர்கள் பாணியிலேயே அவர்களுக்குப் பதிலளிப்பதென்றால், அந்த வலிமார்களை நாங்கள் வணங்குகிறோமோ அல்லது கண்ணியப்படுத்துகிறோமா என்னும் இரகசியம் எனக்கும் அல்லாஹ்வுக்கும் மட்டுமே தெரிந்த மறைவான விஷயம்தானே........ இதில் வெட்டியாய் மூக்கை நுழைத்து அது வணக்கம், நீங்கள் செய்வது ஷிர்க் என்பதாக அவதூறு பேசித் திரிகின்றீர்களே என்று நாம் கேட்டால்... அறிவீனர்களிடம் பதிலிருக்காது... அறி–வீணர்கள்!

இன்னும், நீங்கள் அங்கே ஏன் பூ வைக்கிறீர்கள், பத்தி, சாம்பிராணி பயன்படுத்துகிறீர்கள் என்று கேட்கிறார்கள்.

நான் என் மனைவிக்கும், மகளுக்கும் கூட பூ வைக்கிறேன்... வீடு, கடை போன்ற நாம் விரும்பும் இடங்களை வாசனையாய் வைத்திருப்பதில் என்ன தவறென்று புரியவில்லை. அவர்கள் சுத்த ஞான சூன்யம் என்று நினைத்தால், அவர்கள் தங்களைச் சுத்தமே இல்லாத ஞான சூனியங்கள் நாங்கள் என்று மீண்டும் மீண்டும் நிரூபிக்கிறார்கள்.

தர்ஹாக்களில் சென்று ஏன் அழுகிறீர்கள்? என்று ஒரு தரப்பு வஹ்ஹாபிகள் வாதிடுகிறார்கள். எனக்கு கஷ்டமா இருந்தா பார்க், பீச், என் வீடு, மொட்டை மாடி என பல இடங்களில் கூடத்தான் நான் அழுதிருக்கேன்... இது ஒரு குற்றமா?

ஏன் கை ஏந்துகிறீர்கள் என்று புத்தி சுவாதீனமில்லாமல் கேட்பவர்களுக்கு, அங்கேயும் அல்லாஹு அக்பர் என்று தானே கையேந்துகிறோம்... என்பது அவர் அல்லாஹ்வாகி விடுவதாக (நஊதுபில்லாஹ்) இந்தக் கிறுக்கர்களின் புத்திசாலித்தனம். அப்படியென்றால், பொது இடங்களில் – பள்ளிவாசல்களில் தர்மம் கேட்பவர்கள் இவர்கள் முன்னால் கையேந்தினால், அவர்களுக்கு இவர்கள் அல்லாஹ்வா? (நஊதுபில்லாஹ்).

வணக்கத்தையும் கண்ணியப்படுத்துதலையும் புரியாமல் குழப்பிக் கொள்ளும் வணங்காமுடிகள் தாம் இந்த வஹ்ஹாபிகள்.

ஒன்றைப் புரிந்து கொள்ளுங்கள்.... உங்களுக்குத்தான் இறையீதென்று அறிய ஐயப்பாடு. எதை எதையோ இறையென்று எண்ணி, ஷிர்க்கென்று நம்பி பாழடைகின்றீர்! மெய்யான சுன்னத் வல் ஜமாஅத்தைச் சேர்ந்த எவரும் – மெய்ஞ்ஞான வஹ்ததுல் வுஜூதை நம்புகிற எவரும் நீங்கள் நீங்கள் ஆயிரம் கோடி கொடுத்தாலும் எந்த இறைநேசர்களையும் அல்லாஹ் என வணங்கவும் மாட்டார்கள் – நம்பவும் மாட்டார்கள்.

இணை வைத்து வழிமாறித் திரிவோர் நீங்களே!

இறையீதென்று ஜெயம்பெற்று அறிவோர் நாங்களே!

–இப்னு கிபுலா ஹள்ரத், திருச்சி

---

## இல்லாதிருந்த அமா

*இல்லாதிருந்த அமா தன்னில் தானாய்த் தோன்றியதே*
*நூருல் முஹம்மதாய் விரவி எங்கும் மலர்ந்ததே*
*பரந்தே திரிந்தே பல படியாய் நிலைத்தே நின்றதே*
*பழமை புதுமை இதிலே இல்லை முன்னிருந்ததைப் போன்றதே*
*(இல்லாதிருந்த அமா)*

*எங்கும் விரிந்தே இடையீடின்றி அர்ஷாய் நிறைந்ததே*
*எதுகையின்றி ஏகமாய் நிற்கும் பூரணம் நின்றதே*
*ஏழு வானம் என்பதே ஏழு படிநிலை அதுதானே*
*ஏற்றமுண்டு இங்கே இந்த விளக்கம் தெளிந்தாலே*
*(இல்லாதிருந்த அமா)*

*நபித்துவ ஜோதியின் தொடர்நிலை என்றும் குருத்துவ மானதே*
*தனித்துவ ஆதியின் தெளிவை விளக்கும் ஏகத்துவ ஞானமே*
*ஏகத்துவ ஞானம் குருவில் பணிந்து இன்பமாய்ப் பெறுவோமே*
*மகத்துவமறியும் கலையாம் தன்னையறிந்து தெளிவாய் நிறைவோமே!*
*(இல்லாதிருந்த அமா)*

**Er. இத்ரீஸ் B.E., M.B.A மதுக்கூர்**

# வலிமார்களின் வார்த்தைகளில் வஹ்தத்துல் வுஜூது

**இமாம் ஸய்யிதுனா அலி ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் :**

நான் அல்லாஹ்வைத் தவிர வேறொன்றையும் பார்க்கவில்லை. என் உள்ளே இருக்கின்ற விசயத்தை நான் வெளியிடுவேனானால், ஆழமான கிணற்றில் விடப்பட்ட கயிறு துடிப்பதைப் போன்று நீங்களும் துடிப்பீர்கள்.

**ஹள்ரத் முஹிய்யுத்தீன் அப்துல் காதிர் ஜீலானி ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் :**

அல்லாஹ், தன்னையே வணங்குவோனும், வணங்கப்படுவோனும் ஆவான்.

**ஷைகுல் அக்பர் இமாம் முஹ்யுத்தீன் இப்னு அரபி ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் :**

உலகம் கானல் நீர் போன்றது. அது எதார்த்தத்தில் அல்லாஹ் தான். இந்த உண்மையைத் தெரிந்து கொண்டவர் தரீகாவின் இரகசியத்தைப் புரிந்து கொண்டவராவார். இந்த உலகம் வெளித்தோற்றத்தில் பல உருவங்களையும் தோற்றங்களையும் உடையதாக இருந்தாலும், எதார்த்தத்தில் சந்தேகமின்றி அது அல்லாஹ்வாகவே இருக்கின்றது. உருவம் என்பது திரை. அத்திரையில் மாட்டினவன் அவ்வுருவத்தில் தோற்றுபவனைப் புரிந்து கொள்ள மாட்டான்.

**நூல் : புதூஹாத்துல் மக்கிய்யா, பக்கம் 201**

ஏகத்துவம் என்பது இரண்டு அம்சங்களைக் கொண்டது. ஒன்று, தன்ஸீஹ் என்னும் அரூப நிலை. மற்றையது, தஸ்பீஹ் என்னும் ரூப நிலை. அரூப நிலையில் இறைவன் கண்பார்வையால் காணப்படமாட்டான். அந்நிலையில் அவன் மனதால் அறியப்பட்டவனாயிருப்பான். எனினும், ரூப நிலையில் கண்களால் பார்க்கப்படுபவனாயிருப்பான்.

**நூல் : புதூஹாத்துல் மக்கிய்யா, பக்கம் : 283.**

**இமாம் அபூ யஸீது பிஸ்தாமி ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் :**

நான் இறைவனை முப்பதாண்டுகளாகத் தேடினேன். ஆனால், ஆழ்ந்து கவனிக்கும்போது, அவனே தேடுபவனாகவும், நான் தேடப்படும் பொருளாகவும் இருந்ததை உணர்ந்தேன்.

**ஹள்ரத் காஜா மீர்தர்த் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் :**

அகப்பார்வையுடைய ஞானக் கண்ணானது ஒளி பெற்றதாக இருந்தால், அது எந்தத் திசையை நோக்கினாலும் அவனது தோற்றத்தையே காணும்.

**இமாம் கஸ்ஸாலி ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் :**

எல்லாம் அவனுடைய ஒளிதான், எல்லாம் அவனே, அவன் அல்லாததற்கு எந்த ஒரு எதார்த்தமும் இல்லை.

**நூல் : மிஷ்காத்துல் அன்வார், பக்கம் 60**

அவன் தான் நன்றி சொல்பவனும், நன்றி சொல்லப்பட்டவனும். அன்பு வைத்தவனும், அன்பு வைக்கப்பட்டவனும் அவன் தான். அவனுக்கு வேறானது வுஜூதிலே ஒன்றுமில்லை.

**நூல் : இஹ்யா உலூமுத்தீன் 4ஆவது பாகம், 86-ஆம் பக்கம்.**

நிச்சயமாக அவனே எல்லாம். உள்ளமையில் அவனுக்கு வேறான எதுவுமில்லை.

**நூல் : இஹ்யா உலூமுத்தீன் 4-ஆவது பாகம், 328ஆம் பக்கம்.**

சூஃபியாக்கள், ஆரிஃபீன்கள் ஒரே முடிவை எடுத்திருக்கிறார்கள். அது உள்மையில் அல்லாஹ்வையன்றி வேறு எதனையும் காணவில்லை.

**நூல் : மிஷ்காத்துல் அன்வார், பக்கம் 57.**

**இமாம் காஜா முயீனுத்தீன் சிஷ்தி ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் :**

ஏகத்துவம் எதுவென இமாம் கஸ்ஸாலி ரலியல்லாஹு அன்ஹு அவர்களிடம் கேட்கப்பட்டதற்கு, அவர்கள் கூறினார்கள் :

அனைத்தையும் ஒன்றாக்க வேண்டும். ஒன்றென்றே நோக்க வேண்டும். ஒன்றென்றே அறிய வேண்டும். தமக்கோர் உள்ளமையும், அல்லாஹ்வுக்கோர் உள்ளமையும் உண்டென்று கற்பனை கூட செய்யக் கூடாது. அப்படி எண்ணுவது வழிகேடாகும். ஆரிஃப் ரப்பை பார்க்கலாம். பார்க்காமலும் இருக்கலாம் என்ற பாகுபாட்டை கடக்கும்போதுதான் அவருக்கு சர்வமும் சித்தியாகும்.

**இமாம் அபுல் ஹஸன் அலி ஷாதுலி ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் :**

யா அல்லாஹ்! வஹ்தத்துல் வுஜூது என்ற கடலில் எங்களை மூழ்கடித்து விடு.

**ஹள்ரத் அபூ சுலைமான் தாரானி ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் :**

மெய்ஞ்ஞானிகளுக்கு அகக்கண் திறந்ததும் வெளிக்கண் பார்வை இழந்து விடுகிறது. எனவே, அவர்களுடைய கண்களுக்கு இறைவனைத் தவிரவுள்ள வேறு யாதொன்றும் தென்படுவதில்லை.

**இமாம் ஜுனைதுல் பக்தாத் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் :**

முப்பது ஆண்டுகளாக நான் இறைவனோடு உரையாடிக் கொண்டிருந்தேன். ஆனால், மக்கள் நினைக்கிறார்கள், நான் அவர்களோடு உரையாடிக் கொண்டிருக்கின்றேன் என்று..!

**ஹள்ரத் மன்சூர் ஹல்லாஜ் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் :**

நீங்கள் இறைவனை அறியாவிட்டாலும் இறைவனுடைய அடையாளங்களை யாவது அறிந்து கொள்ளுங்கள். நான் தான் மெய்ப்பொருள் (அனல் ஹக்), உண்மையின் மூலமாகிய நானே நிரந்தரமான உண்மையாவேன்.

**இமாம் அப்துல் வஹ்ஹாப் ஷஃரானி ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் :**

அல்லாஹ் முந்தினவனும் அவனே பிந்தினவனும் அவனே, வெளியானவனும் அவனே, உள்ளானவனும் அவனே என்ற தனது பேச்சு கொண்டு அவனுக்கு வேறானவை அனைத்தையும் அழித்துவிட்டான் என்று இமாம் அபுல் ஹஸன் அலி ஷாதுலி ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறியபோது, அவ்வாறாயின் படைப்பு பற்றி என்ன சொல்வீர்கள், படைப்பு உண்டா? இல்லையா? என்று அவர்களிடம் கேட்கப்பட்டதற்கு, படைப்பு உண்டு. ஆயினும் அது வீட்டின் கூரையிலுள்ள துவாரத்தின் வழியாக உள்ளே விழும் சூரிய வெளிச்சத்தில் மேலும் கீழுமாக ஏறி இறங்கும் தூசி போன்றது. அது உனது கண்ணுக்கு – பார்வைக்கு மட்டும் தான் தெரியுமேயன்றி நீ அதை கைகொண்டு பிடித்தால் பிடிக்க முடியாது. இவ்வாறு தான் படைப்பு என்பது. அது உனது கண்ணுக்கு மட்டும் தான் தெரியுமேயன்றி அதற்கு வுஜூது – உள்ளமை இல்லை. அது பார்வைக்கு மட்டு உள்ளதே தவிர எதார்த்தத்தில் இல்லாததாகும் என்று பதில் கூறினார்கள்.

**நூல் : அல் யவாகீத் வல் ஜவாஹீர் , பாகம் 1, பக்கம் : 65**

---

# மறைஞானப் பேழை சந்தா செலுத்தி பேழையின் வளர்ச்சிக்கு உதவுங்கள்!



# மதுரஸா

# நன்கொடை



ஈரோடு N. ஹஸீனா நிசார் அலி, ஹள்ரத் இமாம் அஸ்ஸையித் ஜாஃபர் சாதிக் (ரலி) அவர்கள் பெயரில் ரூ. 2000 /- ம்,

மௌலவி கலீல் ரஹ்மான் யாஸீனிய் அவர்கள் மூலம் காணிக்கை ரூ.2000/ம்,

மர்ஹூம் A. அமீன் அவர்களின் முதலாம் ஆண்டு நினைவு நாளை யொட்டி மஃபிரத்துக்கு துஆ செய்ய அவரது குடும்பத்தார் ரூ.5000/ம்,

ஈரோடு மன்ஸூர் நிசார் அலி அவர்கள் முஹிய்யுத்தீன் ஆண்டகை (ரலி) பெயரில் ரூ.1000/-ம்,

**மதுக்கூர்**

**M.** ரஹ்மத்துன் நிஸா பழைய உண்டியல் சேர்த்த வகையில் உடல்நலத்துக்கும், மன நிறைவுக்கும் துஆ செய்ய ரூ. 1000 /- ம்,

**A.** ஹம்தான் நீண்ட ஆயுளுக்கு, நிறைவான வாழ்வுக்கு துஆ செய்ய வேண்டி மதரஸா பிள்ளைகளுக்கு ரூ. 2000 /- ம்,

நாட்டங்கள் நிறைவேறிட, நல்லவைகள் நடக்க சந்தாவாகவும், நன்கொடை யாகவும் பெயர் சொல்லாமல் ரூ. 600 + 400/- ம்,

**N.** கலிபுல்லா தனது மருமகள் மரியம் பிறந்தநாளை முன்னிட்டு (2.5.21) நீண்ட ஆயுளுக்கு, நிறைவான மன நிம்மதிக்கு துஆ செய்ய வேண்டி ரூ. 1000 /- ம்,

பசீர் அகமது மதரஸா பிள்ளைகளின் செலவுக்காக ரூ. 2580 /- ம்,

அப்துல் கபூர் & பொன்னரசி இவர்களின் மருமகள் சப்ரீனுக்கு சுகபிரசவம் ஆனது கொண்டு தாயும், பிள்ளையும் நலமாக இருக்க துஆ செய்ய ரூ. 2000 /- ம்,

முகம்மது ஆசீப் நிறைவான மனநிம்மதிக்கும், நீண்ட ஆயுளுக்கு துஆ செய்ய கேட்டு ரூ. 500 /- ம்,

**K.R.K.S.** ரபிக்குன்னிஸா மனநிம்மதியான நல்வாழ்வுக்கு துஆ செய்ய வேண்டி ரூ. 1000 /- ம்,

## இராமநாதபுரம்

ஹாஜியானி Dr.பாத்திமா சின்னதுரை A.R. ஹாஸ்பிடல் ராம்நாட் ரூ. 42000 /– ம்,

ஹாஜியானி Dr.ராஸிகா ரியாஸ் AR. ஹாஸ்பிடல் ராம்நாட் ரூ. 12000 /– ம்,

ஹாஜி Dr I. மன்சூர் ஸபான் கிளினிக் ரூ. 10000 /– ம்,

ஹாஜி Dr. சகுபர் சாதிக் ராம்நாட் நியூரோ கேர் ரூ. 25000 /– ம்,

Dr. A. கலீலுர் ரஹ்மான் சஜி ஆர்த்தோ ராம்நாட் ரூ. 2500 /– ம்,

முஹம்மது நிஸார் அலி ரூ. 1000 /

முஹம்மது பைஸல் (ரமளான் பித்யா) ரூ. 4000 /– ம்,

சித்தி ஆயிஷா (ரமளான் பித்யா) ரூ. 4000 /– ம்,

மர்ஹூம் Er. P. முஹம்மது சகிய் ரூ. 1000/– ம்,

ஹாஜியானி P.பாத்திமதுஜ் ஜஹ்ரா ரூ. 500 /– ம்,

A. அபீக் S/O. அசாருதீன் ரூ. 500 /– ம்,

முஹம்மது மதீஹ் & முஹம்மது அப்ளல் ரூ. 500 /– ம்,

Y. முஹம்மது பாரூக் Dr. சேக் முகம்மது மருமகன் ரூ. 3000 /– ம்,

பனைக்குளம் முரீதுகள் ஸகாத் வசூல் ரூ. 13100 /– ம்,

ஹாஜியானி P. பத்திமதுஜ்ஜஹ்ரா அன்னை பாத்திமா (ரலி) நினைவாக ரூ. 1000 /– ம்,

## சென்னை

Mrs. மல்லிகா நிய்யத் ரூ. 10000 /– ம்,

மர்ஹூம் மு. அப்பாஸ் அலி ஆகிரா மஹ்பிரத்திற்காக மாணவர்கள் உணவிற்கு ரூ. 5000 /– ம்,

மர்ஹூம் கலீபா H.M. ஹபிபுல்லாஹ் BSc., 40 ம் நாள் பாத்திஹா உணவு ரூ. 5000 /– ம்,

N. முஹம்மது ஹாரூன் உண்டியல் சேர்த்த ரூ. 4500 /– ம்,

V.A. தாவூத் ராபியா, V.A. மதீஹா மஹ்னாஜ், சரீஹா மனால் பூரண சுகமடைய சதக்கா ஆடு 1 க்கு ரூ. 8700 /– ம்,

திண்டுக்கல் அஹ்மத் நஜீஹ் நிய்யத் ரூ. 500 /– ம்,

முஹம்மது அலி & பேமிலி நிய்யத் ரூ. 2000 /– ம்,

உம்மல் பஸரியா பூரண சுகமடைய சதக்கா ஆடு 1 க்கு ரூ. 9000 /– ம்,

மெஹ்ராஜ் கனி, ஃபர்ஹாத் அலிஷா, ருக்ஸான் பூரண சுகமடைய 1 ஆடு க்கு ரூ 9000 /– ம்,

A. முபாரக்கா நீண்ட ஆயுளுக்கு, நிறைவான செல்வத்திற்கும் துஆ செய்ய நன்கொடையாக ரூ. 1000 /– ம்,

ராஜாத்தி பழைய உண்டியல் சேர்த்த வகையில் ரூ. 1002 /- தந்து மனநிறைவு அடைகிறார்கள்.

பர்ஹானா பூரண உடல்நலத்துக்கும், நீண்ட ஆயுளுக்கும் துஆ செய்ய ரூ. 1000 /- ம்,

நாசர் நல்லது நடக்க துஆ செய்ய வேண்டி ரூ. 500 /- ம்,

**N.** கலிபுல்லா தனது இளைய மகன் சேக் அப்துல் காதர் பிறந்தநாளை முன்னிட்டு (6.5.21) நிரந்தரமான வேலை அமைய துஆ செய்ய ரூ. 1000 /- ம்,

**S.** அஹமது பாரூக் & ஆயிஷா இவர்களின் மகனார் அப்பான் பிறந்த நாளை பிள்ளையின் நல்வாழ்விற்கு (26.5.21) முன்னிட்டு ரூ. 1000 /- ம்,

**R.** பரீதா பீவீ ராஜா முஹம்மது பூரண நலத்துக்கு துஆ செய்ய வேண்டி மதரஸா பிள்ளைகளுக்கு ரூ. 2000 /-

**S.** பாத்திமா நதிய்யா நிறைவான மனநிம்மதிக்கு துஆ செய்ய வேண்டி ரூ. 500 /- ம்,

ஹாஜிமா **A.** சம்சுல்பீவி பூரண உடல்நலத்துக்கு, கால் வலி சுகமாக துஆ செய்ய ரூ.

**A.** ஜாஹீர் உசேன் & தில்ஷாத் பேகம் இவர்கள் மாத சந்தா சேர்த்து ரூ. 600 /- ம்,

**M.** முகம்மது நாசர் தனது குடும்பத்தார் அனைவரின் நலனுக்கும் துஆ செய்ய ரூ. 2000 /- ம்,

**A.** பல்கீஸ் பீவி நன்கொடையாக மதரஸா பிள்ளைகளின் செலவுக்கு ரூ. 1000 /- ம்,

நத்தர்ஷா நல்வாழ்விற்கு துஆ செய்ய மதரஸா நன்கொடையாக ரூ. 1500 /- ம்,

**N.** பசீர் அகமது **S/O M.** நத்தர்ஷா மனநிம்மதியான நல்வாழ்விற்கு துஆ செய்ய ரூ. 1000 /- ம்,

**M.A.** அப்துல் கபூர் அவர்களின் மூத்த மகன் முகம்மது நளீப் க்கு தர்பாரின் அருளால் பிறந்த ஆண் மகன் ஜியாத் 40- வது நாளை முன்னிட்டு பிள்ளை, தாய் தந்தையின் நலனுக்கு துஆ செய்ய மதரஸா பிள்ளைகளின் உணவுக்காக வேண்டி ரூ. 2000 + 2000= 4000 /- ம்,

**M.** சேக் பரீது தனது பிள்ளை முன்ஸிரா வின் முதல் பிறந்த நாளை (20.7.21) முன்னிட்டு பிள்ளையின் சிறப்பான நல்வாழ்விற்கு துஆ செய்ய மதரஸா பிள்ளைகளின் செலவுக்கு ரூ. 1500 /- ம்,

**K.R.K.L.** முகம்மது சஜ்ஜீவ் மதரஸா நன்கொடையாக ரூ. 1000 /- ம்,

**K.N.A.** அபுசாலிபு & கூமைரா பானு இவர்களின் பழைய உண்டியல் சேர்த்த வகையில் நலமாக வாழ துஆ செய்ய ரூ. 5870 /- ம்,

நஸீம் காதர் அஹ்மது **S/O Dr.** பஸீர் அஹ்மது, ரஃபீஹா பஷீர் சதக்கா 2 ஆடு க்கு 18100 /- ம்,

அஹ்மது ஜலால்தீன் உண்டியல் வசூல் ரூ. 7920 /– ம்,

மர்ஹூம் Z. சாகுல் ஹமீத் ஆகிரா மஹ்பிரத்திற்காக ரூ. 1000 /– ம்,

நவ்ஸாத் அலி பூரண உடல் நலம் பெற வேண்டி ரூ. 2000 /– ம்,

மர்ஹூம் ஹாஜி A. முஹம்மது அலி வருட பாத்திஹாவை முன்னிட்டு மாணவர்களுக்காக ரூ. 5000 /– ம்,

அஹ்மது நஜீஹ் நிய்யத் ரூ. 500 /

S.B. ஆசீப் உண்டியல் வசூல் ரூ. 10000 /– ம்,

**பல ஊர்கள்**

திருவாவடுதுறை S.ஜுபைர்B.E., (கேம்ப் - அபுதாபி) அவர்கள் தமது மகள் ஆயிஷா ஃபஸீஹா முதலாம் பிறந்த தினத்தை முன்னிட்டு பிள்ளையின் நல்வாழ்வுக்கு துஆ செய்ய மதுரஸா மாணவர்கள் உணவுக்காக நன்கொடை 5000/–ம்,

மதுரை S. சாகுல் ஹமீது மே மாதம் சதக்கா ரூ. 1000 /– + ஜூன் மாதம் சதக்கா ரூ. 1000 /– ம்,

சங்கரன் பந்தல் நஜீரா W/O மர்ஹூம் ஹாஜி M.A. சுபஹானி குடும்பத்தார் அனைவரும் வாழ துஆ செய்ய சதக்கா ரூ. 2000 /– ம்,

காரைக்கால் R.A. அப்துல் பாருக் பாத்திமா குடும்பத்தார் நலமுடன் வாழ துஆ செய்ய மாத நன்கொடை ரூ. 500

பாவட்டகுடி நிஃமத்து நிஷா மாலிக் துஆ செய்ய ரூ. 1100 /– ம்,

வலங்கைமான் ரஹ்மத் நிஷா துஆ செய்ய ரூ. 500 /– ம்,

புதுக்கோட்டை A. அஷ்ரப் நிஷா குடும்பத்தார் அனைவரும் நலமுடன் வாழ துஅ செய்ய ரூ. 500 /– ம்,

திண்டுக்கல் SMK. ரைஸ்மில் சீனிராவுத்தர் மீராம்மா– மருமகள் கத்தீஜா பீபீ முகமது காசிம் துஆ செய்ய ரூ. 1501 /– ம்,

திண்டுக்கல் SMK. ரைஸ்மில் சீனிராவுத்தர் மீராம்மா பேத்தி M. சபியாமா துஆ செய்ய ரூ. 500 /– ம்,

திண்டுக்கல் SMK. ரைஸ்மில் சீனிராவுத்தர் மீராம்மா பேரன் M. முகமது அலி ஜின்னா துஆ செய்ய ரூ. 500 /– ம்,

திண்டுக்கல் SMK. ரைஸ்மில் முகமது காசிம் பேரம் M. ஜியாவுல் ஹக் துஆ செய்ய ரூ. 500 /– ம்,

திண்டுக்கல் SMK. ரைஸ்மில் சீனிராவுத்தர் அக்கா ரஹ்மத் துஆ செய்ய ரூ. 500 /– ம்,

காரைக்குடி ஜெஸ்மின் பானு துஆ செய்ய ரூ. 2000 /– ம்,

மன்னார்குடி S. சாலிஹா பீவீ தாயார் மர்ஹூம் ஆபிதா பீவீ அவர்களின் வருட பாத்திகாவை முன்னிட்டு குர்ஆன் ஷரீப் ஓதி துஆ செய்ய மதிய உணவுக்காக ரூ. 10000 /

பாக்கம் கோட்டூர் ரிஹானா பர்ஹத் – முகம்மது இக்பால் துஆ செய்ய ரூ. 1000 /– ம்,

சென்னை S. சர்மிளா உசேன் துஆ செய்ய சதக்கா ரூ. 500 /– + சதக்கா ரூ. 1000 /– ம்,

திண்டுக்கல் A. ரியாஜ் அஹமது நிய்யத் நிறைவேற துஆ செய்ய ரூ. 500/ – + 500/-+ 1001/- ஆக மொத்தம் ரூ. 2001/- ம்,

பாக்கம் கோட்டூர் ஜெஹபர் நிஷா அப்துல் அஜிஸ் குடும்பத்தார் அனைவரும் நலமுடன் வாழ துஆ செய்ய ரூ. 500 /- ம்,

உத்தமபாளையம் அப்துல் ஜப்பார் பிப்ரவரி – மே மாதம் நன்கொடை ரூ. 3500 /- ம்,

உத்தமபாளையம் ரியாசுத்தீன் பிப்ரவரி – மே மாதம் நன்கொடை ரூ. 1000 /- ம்,

உத்தமபாளையம் பேஷன் பாரடைஸ் பிப்ரவரி – மே மாதம் நன்கொடை ரூ. 2000 /- ம்,

உத்தமபாளையம் கலந்தர் பிப்ரவரி – மே மாதம் நன்கொடை ரூ. 1010 /- ம்,

உத்தமபாளையம் முஹம்மது சித்தீக் பிப்ரவரி – மே மாதம் நன்கொடை ரூ. 3700 /- ம்,

உத்தமபாளையம் அப்துல் ஜப்பார் நிய்யத் நிறைவேற துஆ செய்ய ரூ. 1500 /- ம்,

உத்தமபாளையம் முரீதீன்கள் மற்றும் அஹ்பாபகள் காணிக்கை ரூ. 9460 /- ம்,

திண்டுக்கல் கலீபா S. ஹுஸைன் முஹம்மது ஆலிம் மன்பயீ அவர்கள் உண்டியல் சேமிப்பு ரூ. 3902/

மதுராபுரி(துறையூர்) சபியுல்லா திரும்ப குவைத் நல்லமுறையில் செல்ல துஆ செய்ய ரூ.2000/-ம்,

ஈரோடு மர்ஹூம் கலீபா ஹாஜி N. அப்துல் ஜப்பார் அவர்களின் 2- ஆம் வருட பாத்திகாவை முன்னிட்டு யாஸீன் ஓதி துஆ செய்ய ரூ. 5000 /- ம்,

ஈரோடு M. ஜரீனா பேகம் அவர்கள் ஹாஜத் நிறைவேற பதுறு சஹாபாக்கள் திருநாமம் ஓதி துஆ செய்ய ரூ. 1000 /-

திண்டுக்கல் K. நத்தர் ஒலி அவர்கள் மூலம் பெயர் சொல்லா நபர் மூலம் நிய்யத் நிறைவேற துஆ செய்ய ரூ. 5000 /- ம்,

திருப்பூர் ஹாஜி A.M. சர்புதீன் அவர்கள் நிய்யத் நிறைவேற துஆ செய்ய ரூ. 2000 /- ம்,

திண்டுக்கல் ஆரிபா அவர்கள் துஆ செய்ய காணிக்கை ரூ. 5000 /- ம்,

மேலத்திருப்பந்துருத்தி சாகுல் ஹமீது ஹாஜம்மாள் முதல் மாதம் சம்பளத்தில் காணிக்கை ரூ. 500 /- ம்,

கீழக்கரை தேக்கடி ஜானி பாஷா அவர்களின் பேரனும் ஷேக் ரொஜீத்தீன் அவர்களின் மகன் ஷேக் ஹஸீன் பிறந்த நாளை முன்னிட்டு துஆ செய்ய ரூ. 5000 /- ம்,

பாக்கம் கோட்டூர் S. பஜ்லுல் ஹக் அவர்கள் துஆ செய்ய ரூ. 5000 /- ம்,

பாக்கம் கோட்டூர் முஹம்மது ஆஷிக் சஹானா துஆ செய்ய ரூ. 500

பாக்கம் கோட்டூர் முஹம்மது இக்பால் துஆ செய்ய ரூ. 500 /- ம்,

திண்டுக்கல் SMY. ரபி அஹமது– பாத்திமா குடும்பம் துஆ செய்ய ரூ. 500 /- ம்,

Registered with R.N.I. No. TNTAM / 2009 / 27865
Postal Registration No. DDL / 08 / 2021 - 2023
Date of Publication on 7th, Posted on 10th, of Every Month at H.P.O. Dindigul


## தர்ஜுமத்துல் குர்ஆன் – மஅத் தஃப்ஸீரி – வத்தப்ஸீர்

குத்புஸ்ஸமான் ஜமாலிய்யா அஸ்ஸையித் கலீல் அவ்ன் மௌலானா அல்ஹஸனிய்யுல் ஹுஸைனிய்யுல் ஹாஷிமிய் நாயகம் அவர்களின் தெளிவான தமிழ் மொழி பெயர்ப்பு - விளக்க உரை - தெளிவுரை - ஆன்மீக விளக்கக் குறிப்பு களுடன் கூடியது. தமிழில் இதுவரை வெளி வராத அற்புத படைப்பு. விலை ரூ.100 - (கொரியர் செலவு தனி)



## அரபு – தமிழ் (காமூஸ்) அகராதி

குத்புல் ஃபரீத் ஜமாலிய்யா அஸ்ஸையித் யாஸீன் மௌலானா அல்ஹஸனிய்யுல் ஹுஸைனிய்யுல் ஹாஷிமிய் (ரலி) அவர்களின் கை வண்ணத்தில் உருவாகி, குத்புஸ்ஸமான் ஜமாலிய்யா அஸ்ஸையித் கலீல் அவ்ன் மௌலானா அல்ஹஸனிய்யுல் ஹுஸைனிய்யுல் ஹாஷிமிய் அவர்கள் புதிய சொற்கள் இணைத்துப் பதிப்பித்த அருமையான கலைக் கருவூலம். அறபுக் கல்லூரி ஆசிரியர்கள் - மாணவர்கள் - ஆலிம் பெருமக்கள் அனைவரது கைகளிலும் தவழ வேண்டிய அற்புதமான அகராதி. இரண்டு பாகங்கள் விலை ரூ.500 (கொரியர் செலவு தனி)




தொடர்புக்கு : 98940 94490
99445 76165


Owned by Awniyya World Peace Trust Published by
J. Mohamed Rahmathulla B.A.B.Com.,Fakira Complex, 74, Palani Road,
Dindigul - 624001.Printer : R.VijayalakshmiPrinted at
Sri Agni Amman Printers,52, Palani Road, Near Sakthi Theatre, Dindigul - 624001.
Editor S. Hussain Muhammad Manbayee